திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

மார்ச் 2019, விலை ரூ.5/-



2019, மார்ச் 16 முதல் 20 வரை
திருமலையப்ப ஸ்வாமி
தெப்போத்ஸவம்



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

ஸ்ரீலக்ஷ்மி தேவி தாயார்

மாத்ருஸ்ரீ தரிகொண்ட வெங்கமாம்பா

# தரிகொண்ட ஸ்ரீலக்ஷ்மிநரசிம்ம ஸ்வாமி பிரம்மோத்ஸவம்

## 13-03-2019 முதல் 21-03-2019 வரை









**13-03-2019 புதன் கிழமை**
பகல் : துவஜாரோஹணம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**14-03-2019 வியாழக்கிழமை**
பகல் : முத்துப்பந்தல் வாகனம்
இரவு : ஹனுமத்வாகனம்

**15-03-2019 வெள்ளிக்கிழமை**
பகல் : கல்ப விருக்ஷ வாகனம்
இரவு : சிம்ம வாகனம்

**16-03-2019 சனிக்கிழமை**
பகல் : திருச்சி உற்சவம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**17-03-2019 ஞாயிற்றுக்கிழமை**
பகல் : திருச்சி உற்சவம்
இரவு : யானை வாகனம்

**18-03-2019 திங்கட்கிழமை**
பகல் : திருச்சி உத்ஸவம்
மாலை : சர்வ பூபால வாகனம்
இரவு : கருட வாகனம்

**19-03-2019 செவ்வாய்க்கிழமை**
பகல் : திருத்தேர்
மாலை : தூளி உத்ஸவம்

**20-03-2019 புதன் கிழமை**
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம், குதிரை வாகனம்

**21-03-2019 வியாழக்கிழமை**
பகல் : வஸந்தோத்ஸவம், சக்கர ஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்



*அநாச்ரித: கர்மப$_2$லம்*
*கார்யம் கர்ம கரோதி ய: |*
*ஸ ஸந்ந்யாஸீ ச யோகீ$_3$ ச*
*ந நிரக்$_3$நிர்ந சாக்ரிய: ||*

**“எவனொருவன் கர்மத்தின் பயனைச் சார்ந்திராமல் செய்ய வேண்டிய கர்மத்தைச் செய்கிறானோ, அவன் சந்நியாசியும் யோகியும் ஆவான். மேலும், அக்னி காரியங்களை மட்டும் துறப்பவன் சந்நியாசி ஆகமாட்டான்; செயல்களைச் செய்யாமல் துறப்பவனும் யோகி ஆகமாட்டான்.**

*– ஸ்ரீமத் பகவத் கீதை 6–1*

*மாசில் வீணையும் மாலை மதியமும்*
*வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்*
*மூசு வண்டறை பொய்கையும் போன்றதே*
*ஈசனெந்தை யிணையடி நீழலே.*

**இறைவனாகிய எந்தையின் திருவடி நீழல் குற்றமற்ற வீணையின் நாதமும், மாலையிலே தோன்றிய நிலவின் தண்மையும், வீசுகின்ற தென்றலின் சாயலும், செறிந்த இளவேனிலின் மாட்சியும், ஒலிக்கும் வண்டுகள் மொய்க்கும் பொய்கையின் குளிர்ச்சியும் போன்று இன்பம் பயப்பதாகும்.**

*- திருநாவுக்கரசர்*



# ஸ்வஸ்தி ஸ்ரீ விளம்பி வருஷம், மாசி/பங்குனி மாதம், உத்தராயணம், சிசிரருது, சகவருஷம் 1940-41, கலியுகாதி 5119, மார்ச் 2019.

| ஆங் | தமிழ் | கிழமை | திதி | நட்ச. | விசேஷம் |
|---|---|---|---|---|---|
| 1 | 17 | வெள்ளி | தச | பூரா | கரிநாள். வ்ய-சிரா. |
| 2 | 18 | சனி | ஏகா | உத்ரா | சர்வ ஏகாதசி, திரி தினஸ் ப்ருக். |
| 3 | 19 | ஞாயிறு | துவா | உத்ரா | பிரதோஷம், சிரவணம், ஸ்ரீநிவாச மங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருத்தேர். |
| 4 | 20 | திங்கள் | திர | திவோ | மஹா சிவராத்திரி, ஸ்ரீநிவாச மங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவ அவப்ருதம், சக்கர ஸ்நானம், துவஜாவரோஹணம், திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி நந்திவாகனத்தில் எழுந்தருளுதல். |
| 5 | 21 | செவ் | சசி | அவி | புதன் வ.ஆ. இயற்கைப் பாதிப்பு, திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி கல்யாணோத்ஸவம், ஸ்ரீதிருக்கச்சி நம்பி உத்ஸவாரம்பம். |
| 6 | 22 | புதன் | அமா | சத | சர்வ அமாவாசை, வாஸ்து, ப.10ம. 06நி. 10ம.42நி., திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி அவப்ருதம், திரிசூல ஸ்நானம், துவஜாவரோஹணம். |
| 7 | 23 | வியா | பிர | பூரட் | பால்குண சுத்த, ராகு மிதுனம், கேது தனுசு, புதன்வ.அஸ்தமனம். இயற்கைப் பாதிப்பு. |
| 8 | 24 | வெள்ளி | துவி | உத்ரட் | சந்த்ர தர்சனம், தனியநாள். |
| 9 | 25 | சனி | திரி | ரேவ | --- |
| 10 | 26 | ஞாயிறு | சது | அஸ்வி | மாத சதுர்த்தி. |
| 11 | 27 | திங்கள் | பஞ் | பர | உரம், பூச்சி கொல்லிகள் தயாரிக்க. |
| 12 | 28 | செவ் | சஷ் | கார் | பௌம சஷ்டி+கிருத்திகை, வைத்-சிரா, தரிகொண்டா ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 13 | 29 | புதன் | சப் | ரோகி | சுபநாள், தரிகொண்டா ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோஹணம். |
| 14 | 30 | வியா | அஷ் | மிரு | சூரியன் மீனம் 58நா.25வி. வி5ம. 39நி. மழை, காரடையான் நோன்பு (பின்னிரவில்), ஸ்ரீதிருக்கச்சி நம்பி சாத்துமுறை. |
| 15 | 1 | வெள்ளி | நவ | திரு | ஷடசீதி., ஸ்ரீசால நாச்சியார் உத்ஸவராம்பம். |
| 16 | 2 | சனி | தச | புன | சந்திரன், ராகு, யுதி, திருமலையப்ப ஸ்வாமி தெப்போத்ஸவம் ஆரம்பம். |
| 17 | 3 | ஞாயிறு | ஏகா | பூச | சர்வ ஏகாதசி. |
| 18 | 4 | திங்கள் | துவா | ஆயி | ஸோமப் பிரதோஷம் ஸ்ரீநரசிம்ம துவாதசி ஆமலக பூஜை |
| 19 | 5 | செவ் | திர | மக | காம தகனம், திதி த்வயம், கடல் சீற்றம். |
| 20 | 6 | புதன் | சசி | பூர | மதன பூர்ணிமா, ஹோளி, அதிவ்ருஷ்டி, திருமலையப்ப ஸ்வாமி தெப்போத்ஸவம் நிறைவு, தரிகொண்டா ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி திருத்தேர், தும்புரு தீர்த்த முக்கோட்டி. |
| 21 | 7 | வியா | பௌர் பிர | உத் | சுக்ரன், கும்பம், பங்குனி உத்திரம் ப்ரஹ்ம ஸாவர்ணிகா, மன்வாதி, க்ஷய திதி ஸுவ்ருஷ்டி, ஸ்ரீலக்ஷ்மி ஜெயந்தி, தரிகொண்டா ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அவப்ருதம், சக்கர ஸ்நானம், துவஜாவரோஹணம், திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி கோயிலில் பங்குனி உத்திரம், ஸ்ரீசாலநாச்சியார் சாத்துமுறை. |
| 22 | 8 | வெள்ளி | துவி | ஹஸ் | செவ்வாய், ரிஷபம், மிதமான மழை. |
| 23 | 9 | சனி | திரி | சித் | புதன் கி.உதயம், ஸுவ்ருஷ்டி. |
| 24 | 10 | ஞாயிறு | சது | சுவா | சங்கடஹர சதுர்த்தி, நாகுலாபுரம் ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி சூரிய சேவையை முன்னிட்டு தெப்போத்ஸவம் ஆரம்பம். |
| 25 | 11 | திங்கள் | பஞ் | விசா | --- |
| 26 | 12 | செவ் | சஷ் | அனு | சஷ்டி வ்ரதம். |
| 27 | 13 | புதன் | சப் | கேட் | திஸ்ரோஷ்டகா, வ்ய-சிரா |
| 28 | 14 | வியா | அஷ் | மூல | அஷ்டகா காலபைரவாஷ்டமி, புதன், வ.நி., நாகுலாபுரம் ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி தெப்போத்ஸவம் நிறைவு. |
| 29 | 15 | வெள்ளி | நவ | பூரா | குரு-தனுசு, அன்வாஷ்டகா,ஸுவ்ருஷ்டி. |
| 30 | 16 | சனி | தச | உத்ரா | ஸ்ரீநிவாச மங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி புஷ்ப யாகம் அங்குரார்ப் பணம். |
| 31 | 17 | ஞாயிறு | ஏகா | திவோ | சர்வ ஏகாதசி, ச்ரவணம், ஸ்ரீநிவாச மங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி புஷ்ப யாக மஹோத்ஸவம். |

# ஸப்தகிரி

சமயமாத இதழ்

வேங்கடமே விண்ணோர் தொழுவதுவும் மெய்ம்மையால்
வேங்கடமே மெய்வினைநோய் தீர்ப்பதுவும்



மார்ச் 2019 மலர் 49 இதழ் 10

## உள்ளுறை


| | பக்கம் |
|---|---|
| ஆனந்த நிலையம் அருளும் ஆனந்தம் - திரு. ஸ்ரீநிவாசன், சேலம். | 7 |
| ஆழ்வார்கள் காட்டும் வாழ்க்கை நெறிகள் – 15 பங்குனி உத்திரமும் ஆழ்வார்கள் போற்றிய பிராட்டி வைபவமும் - திரு. எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி. | 9 |
| இராமனிடத்தில் சரணாகதி அடைந்தவர்களும் அதன் பயனும் - ஸ்ரீராமசேஷசயனன், இளையாண்டிபட்டு. | 15 |
| திருக்கச்சி நம்பிகள் அருளிச் செய்த தேவராஜாஷ்டகம் -திரு.பி.டி. சேஷாத்ரி, சென்னை. | 17 |
| ஸ்ரீமத்பாகவத கதை சாகரம் –வைகுண்ட துவாரபாலகர்கள் பெற்ற சாபம் - டாக்டர். சி.கோவிந்தசாமி, புத்தூர். | 21 |
| நமது திருக்கோயில் : – ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி திருக்கோயில்,தரிகொண்டா -திருமதி. எஸ். வைஷ்ணவி, திருப்பதி. | 24 |
| ஏழுமலைகளில் மஹாசிவராத்திரி உத்ஸவம் - திருமதி. பா. காயத்ரி, கேரளா. | 31 |
| வளங்களை அள்ளித் தரும் வடகரை மகாலக்ஷ்மி! - திரு. பனையபுரம் அதியமான், சென்னை. | 35 |
| திருவேங்கடவனின் தெப்போத்ஸவம் - திருமதி. டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி, திருப்பதி. | 37 |
| சிறார் வாக்ககு : ஸ்ரீவேதநாராயண ஸ்வாமிக்கு சூரியனின் பூஜை - செல்வன். சி. வாசுதேவா, திருப்பதி. | 39 |
| அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும் - உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை. | 41 |
| 108 திவ்யதேச வைபவம் – திருப்பார்த்தன் பள்ளி - உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை. | 44 |
| பகவத் கீதை–இளைய சமுதாயம் புத்தி மங்கினால் அனைத்தும் மங்கும் - திரு. வ.ஒ. சுரேஷ், சத்திரவாடா. | 46 |
| ஆடல் வல்லானும் ஆறு அபிடேகங்களும் - டாக்டர். காவிரி நாடன், சென்னை. | 48 |
| ஆயுர்வேதம் – திரிபலா - திருமதி. வி.உஷா, திருப்பதி. | 51 |
| 2019, மார்ச் மாத ராசி பலன் - திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர். | 53 |



சிறப்பு ஆசிரியர் :
திரு. அனில்குமார் சிங்ஹால், ஐ.ஏ.எஸ்.,
செயலாட்சித் தலைவர், தி.தி.தே.
பிரதான ஆசிரியர் :
Dr. K.ராதாரமணா, எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.சொக்கலிங்கம், எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
திரு. R.V. விஜயகுமார், பி.ஏ. பி.எட்.,,
துணை செயலாட்சித் தலைவர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்), தி.தி.தே.,
தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
ஓவியம் :
திரு. P.சிவப்பிரஸாத் (ஓய்வு)
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
புகைப்படங்கள் :
திரு. P.N. சேகர்
திரு. B. வெங்கடரமணா



**பிரதிகளுக்கு:**
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359, 2264360.


நீங்கள் ஸப்தகிரி இதழை www.tirumala.org யில் பார்த்து, படித்து மகிழலாம். ஆலோசனைகள்/கருத்துக்கள்/புகார்களுக்கு
sapthagiri_helpdesk@tirumala.org


இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர். -பிரதான ஆசிரியர்


| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |

### அட்டைப்பட விளக்கம்

முன்னட்டை : **திருமலையப்ப ஸ்வாமி தெப்போத்ஸவம், திருமலை**

பின்னட்டை : **ஸ்ரீலக்ஷ்மி தேவி.**

# தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

“தாரித்ரய து:க தஹநாயநமசிவாய” – உலக வாழ்க்கை முறையினை ஆராய்ந்த ஆய்வாளர்கள் பரமாத்மா ஒருவரே எனவும், ஸ்ருஷ்டி, ஸ்திதி, லயம் முறையே இவற்றை செய்வோரும், காண்போரும் பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன் என்பதும் இந்துக்களின் நம்பிக்கை. முடிவில்லா உலகத்திற்கு ஆதாரமாய் விளங்கும் பரமாத்மா பல உருவங்களில் உள்ளார் எனவும், வெவ்வேறு வடிவங்களில் கொலுவீற்றிருக்கின்றார் எனவும் காலங்காலமாக நாம் கடைபிடித்து வரும் ஆசாரமாகும். ஸ்ரீமந்நாராயணன் தேவைக்கேற்ப எத்தனையோ அவதாரங்கள் எடுத்தார் என்பதும், உலகம் முழுவதும் வியாபித்திருக்கின்றார் என்பதும் நம்முடைய ஆழ்ந்த நம்பிக்கையாகும்.

சிவனை அழித்தல் தொழில் புரிபவராக சொன்னாலும் – சிவதத்துவம் லௌகீக எளிமைக்கும், ஆன்மீக பொலிவிற்கும் ஓர் எடுத்துக்காட்டு. கேட்போருக்கு கேட்கும் வரங்களை எவ்வித ஆலோசனையின்றி, உடனே அளிக்கும் “மனம் இளகிய சங்கரன்” சிவன் ஆவார். சாதாரண ஜல அபிஷேகத்திற்கே திருப்தி அடைந்து பக்தர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைக்கின்றார். முழு மனதுடன் எம்பெருமானை நினைத்து வணங்கும் போது மரணத்தை வெல்லவும் அருள்கிறார்.

வேதத்தில் சிவனை “அழித்தலுக்கு அதிபதி” என்று எதற்கு ஆக்கினார்கள் என்ற சந்தேகம் பாமரர்களான நமக்கு ஏற்படும். பிறந்தது முதல் “காம, க்ரோத, லோபம் முதலான ஆறு வகையான தீக்குணங்களால் தவிக்கும் மானிடர்களின், பாபங்களையும், துர்குணங்களையும் அழிக்கின்றார். எனவே எம்பெருமான் “நீலகண்டனாகி” அமிர்தத்தை பகிர்ந்தளிப்பதில் பிரதானமாய் விளங்கினார்.

இடுகாட்டில் நிவசித்து, யானை தோலை தரித்து ஆதிபிச்சாண்டியாக எம்பெருமான் காட்சி அளிப்பதில் ஒரு அற்புதமான உள் அர்த்தம் உறைந்துள்ளது. ஒவ்வொரு மனிதனும் பிச்சைக்காரனே. லௌகீக சுகங்களை வேண்டுகின்ற நிலை கடந்தால் யாவரும் அந்த பரமேஸ்வரனை கோர வேண்டிய பிச்சை “மரணத்தை வெல்வது” அதுவே “மோக்ஷம்”. வாழ்க்கை எளிதாக நடப்பதற்கு அடையாளம் யானை தோல் தரிப்பது.

பண்டிகை காலங்களில் இறைவனை துதிப்பதும், ஆசாரங்களை கடைபிடிப்பதும் சிறந்த இந்து சாம்பிரதாயமாகும். அதேபோன்று அந்த பண்டிகைகளின் பின்னால் இருக்கக்கூடிய இறைவனின் பவித்திர தகவல்களை அறிந்து, அதற்கு தகுந்தாற்போல் வாழ்க்கை முறையை கடைபிடிப்பது சாலச் சிறந்ததாகும். அந்த நிலையை அடைந்தால் மானிடனும் மகரிஷியாகின்றான். பஞ்சமுகனான பரமசிவன், பங்கஜநாதனான எம்பெருமான் மானிடர்களிடமிருந்து எதிர்ப்பார்ப்பதும் இதுவே!

மார்ச் 4, மகா சிவராத்திரி திருநாள். அன்றைய தினம் பரமேஸ்வரனுக்கு மகா அபிஷேகம் செய்வதோடு மட்டுமின்றி, எம்பெருமானின் நாமாபிஷேகத்தை செய்து நம்மை நாமே புனிதர்களாக்கிக்கொள்வோம். இதுவரை நாம் அறிந்தோ, அறியாமலோ செய்த பாபங்களையும் நம் மனதில் உள்ள அசுத்தங்களையும் அகற்றிக் கொள்வோம். பரமசிவனின் அருளுக்கு பாத்திரமாவோம்.

திருப்பதியில் உள்ள ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி ஆலயத்திலும் மகாசிவராத்திரி உத்ஸவமும், ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமிக்கு பிரம்மோத்ஸவமும் திருமலை திருப்பதி தேவஸ்தானம் மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றது. பல வாகனங்களில் ஸ்வாமி எழுந்தருளி அனைவருக்கும் அருள் புரிய இருக்கின்றார். மகா சிவராத்திரி அன்று சிறப்பு பூஜைகளும் நடைபெற இருக்கின்றது.

ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமியை தரிசித்து நம்முள் உள்ள பாபங்களைப் போக்கி புனிதர்களாவோம். அந்த பரமாத்மா நம்மில் குடி கொண்டிருக்கும் “அஞ்ஞானத்தை” அழித்து “ஞானத்தை” அருள வேண்டி பிரார்த்திப்போம்...



# ஆனந்த நிலையம் அருளும் ஆனந்தம்

உலகம் எம்பெருமானால் படைக்கப்பட்டது. அதில் ஓரறிவு முதல் ஆறறிவு வரை உள்ள ஜீவராசிகள், கொடி, இலை, தாவரங்கள் பிரம்மாவால் படைக்கப்பட்டது. அப்படி படைக்கப்பட்ட உயிரினங்களை அதன் ஆயுட்காலம் வரை ஸ்ரீமந்நாராயணன் காத்து வருகிறார். அதன் ஆயுட்காலம் முடியும்போது சங்கரனார் அந்த உயிரினத்துக்கு லயத்தை ஏற்படுத்துகிறார்.

இப்படி படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழில்களை முறையே பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்திகள் செய்து வருகின்றனர்.

ஆனால் இந்த முத்தொழிலையும் புரிவது ஸ்ரீமந்நாராயணன் தான். காரணம் பிரம்மா, ருத்ராதிகளுக்கு அந்தர்யாமியாய் இருந்து கொண்டு நாராயணனே செய்கிறான். ஸ்ரீமத் பாகவதத்தில் சொல்லப்பட்ட நான்கு பிரளயங்களுள் நைமித்திக பிரளய காலத்தில் சதுர்தச புவனங்களும் பிரளய ஜலத்தில் லயித்து விடுகிறது. அப்போது சத்ய லோகம், கைலாயம், இந்திர லோகம் போன்றவை கூட இருப்பதில்லை.

படைக்கும் தொழில் மேற்கொண்டுள்ள பிரம்மா தான் ஸ்ரீமந்நாராயணனால் உபன்யசிக்கப்பட்டு தந்த வேதங்கள் துணை கொண்டு தான் ஸ்ருஷ்டிக்ரமத்தை செய்கிறார். மும்மூர்த்திகளில் ஒருவராக விளங்கும் பிரம்மாவுக்குக் கூட துன்பம் நேருங்கால் அவர் எம்பெருமானான ஸ்ரீமந் நாராயணனையே தஞ்சம் அடைகிறார்.

படைக்கும் தொழிலுக்கு உறுதுணையான வேதங்களை ஹயக்ரீவன் என்ற அரக்கன் கவர்ந்து கடலுக்கு அடியில் வைத்து மறைத்தபோது பதறிப்போன பிரம்மா நாராயணனையே துதித்தார். அவர் நிலை கண்ட நாராயணன் உடனே மச்சாவதாரம் எடுத்து வேதங்களை அரக்கனிடத்திலிருந்து மீட்டுக் கொடுத்து வேத நாராயணன் என்ற திருநாமத்தோடு திகழ்ந்தார். ருத்ரன் முப்புறம் எறிக்கும்போது ஸ்ரீமந்நாராயணனே அம்பாக மாறி முப்புரம் எரித்தார் என்பது எல்லோருக்கும் விளங்கும்.

தீய குணங்கள் சேர்க்கையற்ற உத்தமமான நல்ல குணங்கள் உடையவனாகவே எம்பெருமான் திகழ்கின்றான். எம்பெருமான் கணக்கற்ற கல்யாண குணங்களின் இருப்பிடமாக விளங்குபவன். அவனிடம் உள்ள எண்ணற்ற கல்யாண குணங்களில் “ஆனந்தம்” என்ற குணத்தை அளவு காண வேண்டும் என்று வேத புருஷன் நினைத்து எம்பெருமானின் ஆனந்தத்தை அளக்க முயன்று பின் திரும்பி வந்தான்.

இங்கே நாம் காண வேண்டிய முக்கியமானது என்னவெனில் ஆனந்தம் என்ற குணம் எப்படிப்பட்டது எனில் எந்த மாதிரியான ஆனந்தம் என்ற கேள்வி எழுகிறது. அப்படி ஆனந்தத்தில் வகை ஏதேனும் உள்ளதா எனில் ஆனந்தத்தின் வகைகள் பல. அது கீழே.

திரு. ஸ்ரீநிவாசன், சேலம்



| | | |
|---|---|---|
| நித்யானந்தம் | : | எப்பொழுதும் ஆனந்தித்திருப்பது (யோகிகள்) |
| அகண்டானந்தம் | : | நாம சங்கீர்த்தனத்தில் சித்திப்பது. |
| நிர்மலானந்தம் | : | தூய்மையான கலப்படமற்றது. |
| சதானந்தம் | : | நித்யானந்தம் போலவே – ரிஷி முனிவர்கள். |
| சிதானந்தம் | : | சித்தாகிய உயிருள்ளவர்கள் துய்ப்பது. |
| சச்சிதானந்தம் | : | உலக வாழ்க்கையில் நல்லதாக துய்ப்பது. |
| பரானந்தம் | : | பரமாகிய வைகுண்டத்தில் துய்ப்பது. |
| பரமானந்தம் | : | விஷ்ணு சாயுஜ்யம் பெற்ற நிலை. |
| அத்விதியானந்தம் | : | சிறப்பான செயல்பாட்டில் விளைவது. |
| அத்வைதானந்தம் | : | பரமன்+ஜீவன் பிரிக்க முடியாமல் துய்ப்பது. |
| ப்ரம்மானந்தம் | : | பரப்ரம்மத்திடம் நிலை கொண்டிருப்பது. |

இப்படி ஆனந்தம் இவ்வளவு வகைகளை உடையதாக இருக்கின்றது. இதில் திருவேங்கடத்தில் உறையும் திருவேங்கடநாதன் தன்னை நாடி வரும் லட்சக்கணக்கான பக்தர்களின் குறை தீர்த்து, அவர் துயர் துடைத்து, அவர்கள் வேண்டிய வேண்டுதல்களை நிறைவேற்றி, அவர்களுக்கு ஆனந்தம் அளிக்கின்றான். வேங்கடம் என்ற சொல்லுக்கு பாவங்களை கடைந்து எடுக்கக் கூடிய மலை என்பது பொருள்.

உலகத்தாரே கூட தன்னிடம் உள்ளதைத்தான் மற்றவருக்குத் தர இயலும். இறைவன் (வேங்கடேசப் பெருமாள்) உறையும் திருக்கோவில் விமானமே அந்த கர்பக்ரஹமே "ஆனந்த விமானம்","ஆனந்த நிலையம்". அதனால் தான் தன்னை நாடி வரும் பக்தர்கள் குறை தீர்த்து ஆனந்தம் அருள்கின்றான். நாமும் நம் திருவேங்கடவனை தரிசித்து அவனிடம் இருந்து ஆனந்தத்தைப் பெறுவோம்.

## சிறுவர் பகுதி வினாக்கள்

1. தொண்டரடிப் பொடியாழ்வாரின் இயற்பெயர் என்ன?
2. திருப்பாணாழ்வார் பாடியுள்ள பிரபந்தத்தின் பெயர் என்ன?
3. பிரளய காலத்தில் இறைவன் கொண்ட அவதாரம் எது?
4. ஆசார்யர்களில் நாலாயிர திவ்யப் பிரபந்தத்திற்கு உரை எழுதியவர் யார்?
5. இராமானுஜ நூற்றந்தாதியைப் பாடியவர் யார்?
6. "யதிராஜர்" என அழைக்கப்படுபவர் யார்?
7. ஆழ்வார்களுள் மிகுதியான திருத்தலங்களைப் பாடியவர் யார்?
8. தாஸ்ய பக்தியில் சிறப்படைந்தவர் யார்?
9. நம்மாழ்வார் தோன்றிய தலம் எது?
10. ஸ்ரீமந் நாதமுனிகளின் காலத்தில் வாழ்ந்த சோழ அரசன் யார்?

விடைகளுக்கு 26ம் பக்கம் பார்க்கவும்

தொகுப்பு : திரு. கே. ரங்கநாதாச்சாரியார், காஞ்சிபுரம்.

# பங்குனி உத்திரமும் ஆழ்வார்கள் போற்றிய பிராட்டி வைபவமும்



வைஷ்ணவ சம்பிரதாயம் ஸ்ரீயோடு இணைந்த சம்பிரதாயம். திரு என்கிற வார்த்தையை இணைக்காது வைணவத்தில் எதுவுமில்லை. பெருமாளுக்கு வெறும் மால் என்று பெயர் இல்லை. திருமால் என்றே பெயர். திரு என்பது பிராட்டியைக் குறிக்கும். பகவானின் திருமண வைபவத்தைச் சொல்லும்போது கூட ஆண்டாள் கல்யாணம், சீதா கல்யாணம், ருக்மணி கல்யாணம், பத்மாவதி கல்யாணம் என்று பிராட்டியின் பெயரிட்டுச் சொல்வது வழக்கு.

வைணவ ஆலயங்களில் முதலில் நாம் சேவிக்க வேண்டியது பிராட்டியைத் தான். தாயார் சன்னதிக்குச் சென்று சேவித்து அவள் புருஷகாரத்தோடு பெருமாளைச் சேவிக்க வேண்டும் என்பது வைணவ மரபு.

பகவானுக்கு என்னென்ன ஏற்றம் உண்டோ அவ்வளவு ஏற்றமும் பிராட்டிக்கும் உண்டு. *''தேவத்வே தேவம் தேஹேயம் மனுஷ்யத்வே ஸ மாநுஷி''* (ஸ்ரீவிஷ்ணு புராணம்) என்று பகவான் அவதரிக்கும் போதெல்லாம் அவன் திவ்ய மகிஷியாக இவளும் அவனுக்கேற்றவாறு அவதரிக்கிறாள். வாமனனாக வரும் போது தனியாகத் தானே சென்றான் என்ற கேள்வி வரும். அப்போதும் அவன் திருமார்பில் திருமகள் இருந்தாள். அதை மான் தோலால் (கிருஷ்ணாஜினம்) மறைத்துக் கொண்டு சென்றான்.

முதலாழ்வார்கள் இதனை நமக்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள். இன்றைக்கு சுமார் ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன் நடுநாடு என்று போற்றப்படும் திருக்கோவலூரில் ஓர் அதிசயம் நிகழ்கிறது. ஒரு மழை நாள். பொழுது சாயும் நேரம். இருட்டு. சடசடவென்று இருள் கவிந்து பொழியும் பெருமழை. மழையில் நனைந்தபடி ஓடி வருகிறார் ஒரு பெரியவர். சட்டென்று அருகில் இருந்த ஒரு சிறிய வீட்டில் நுழைறார். கதவைத் தட்டுகிறார். வீட்டுக்கு உரியவர் வந்து கதவைத் திறக்கிறார். வாருங்கள்! இப்படி வந்து இடைகழியில் இருக்கலாம். சிறிய இடம்தான்.

ஆயினும் உங்களுக்குப் போதும். ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். காலையில் போகலாம். மகிழ்ச்சி ஐயா! என்று சொல்லிய பெரியவர், அந்த சிறிய இடைகழியில் சற்று படுக்கலாம் என்று துண்டை உதறும் நேரம்.

ஐயா என்று குரல் கேட்கிறது. பெரியவருக்குப் புரிகிறது. யாரோ வந்திருக்கிறார்கள். வாருங்கள்! அடி

**- திரு. எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.**

யேனும் உங்களைப் போல ஒதுங்க வந்தவன்தான்! உள்ளே வாருங்கள்: ஒருவர் படுக்கலாம் இவ்விடத்தில். ஆனால் என்ன? இருவர் அமரப் போதுமே! வந்து அமருங்கள்! என்று சொல்லி வாய்மூடு முன் சொல்லி வைத்தாற்போல அடுத்த குரல் ஐயா என்று அழைக்கிறது.

இப்பொழுது இருவருமே சேர்ந்து மூன்றாமவரை வரவேற்கிறார்கள். "வாருங்கள்! வெளியே தான் மழை கொட்டுகிறதே! உள்ளே வாருங்கள்! இருவர் அமரக் கூடிய இவ்விடம் மூவர் நிற்கப் போதுமே!". வெளியே மழையின் வேகம் இன்னும் அதிகரிக்கிறது. உள்ளே மூவரும் நின்று கொண்டிருக்கின்றனர். பொழுது போக வேண்டுமே! இறைவனின் பெருமைகளைப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். சட்டென்று இனம் புரியா நெருக்கம். மூவரும் சற்று விலகி நிற்க முயல்கின்றனர். ஆயினும் நெருக்கம் அதிகரிக்கிறது. சொல்லாமல் கொள்ளாமல் நான்காமவராக ஒருவர் வந்திருப்பதாக உணர்கின்றனர் மூவரும்.

ஒரு விளக்கு இருந்தால் யார் வந்து இப்படி நெருக்குவது என்று பார்க்கலாம். என்ன செய்வது இப்போது என்று யோசிக்கும் போது, எப்படி விளக்கேற்றுவது என்ற யோசனை முதலாழ்வாருக்கு எழுகிறது. வையத்தை அகலாக்கி, வார்கடலை நெய்யாக்கி, வெய்யக்கதிரோனை விளக்காக்கி செய்யச் சுடராழியானுக்கு இடராழி நீங்க இன்தமிழ் பாமாலை சூட்டுகிறார்.

இரண்டாமவர் பார்க்கிறார். அன்பை அகலாக்குகிறார். ஆர்வத்தை நெய்யாக்குகிறார். இன்புருகும் சிந்தையை இடுதிரியாக்குகிறார். நன்றாகப் பக்தியால் உருகி ஞானச்சுடர் விளக்கு ஏற்றுகிறார். அங்கே ஞானம் பிறந்தது. அது முற்றி பக்தியானது. அதன் விளைவாக இதோ சாட்சாத்காரம் கிடைத்து விட்டது. நாரணனின் தரிசனம் கண்ணெதிரே மலர்ந்து விட்டது. நாரணனின் தரிசனம் கிடைத்தது முக்கியமல்ல. அது எப்படி கிடைத்தது என்பது தான் முக்கியம். முதலில் அவர் கண்டது பெருமாளை அல்ல. பிராட்டியைத் தான்.



ஆம். **''திருக்கண்டேன்''** என்று மார்பில் அகலாமங்கையைக் காண்கிறார். உருக்கிய பொன்மேனி காண்கிறார். புரிசங்கம் காண்கிறார். இருவர் ஏற்றிய விளக்கால் மன்னிய பேரிருள் மாண்டது. இறைவனின் தரிசனமும் கிடைத்தது. இராமாநுச நூற்றந்தாதியில் அற்புதமாக இந்தக் காட்சியை **"மன்னிய பேரிருள் மாண்டபின் கோவலுள் மாம லராள் தன்னொடும் ஆயனைக் கண்டமை காட்டும் தமிழ்த் தலைவர்"** என்று பாடுகிறார் திருவரங்கத்து அமுதனார். பிராட்டியின் பெருமை அளவிட முடியாதது. எம்பெருமானின் பெருமை முழங்கும் வேதங்களில் மிக குறைவாகவே பிராட்டியின் வைபவம் தென்படுகிறது என்கிற கருத்துக்கு வைணவச் சான்றோர் கூறும் பதில் அற்புதமானது. ஆழமானது.

**"யதோ வாசே நிவர்த்தந்தே"** என்று வேதம் பெருமானின் பெருமையை ஓரளவு கூற முயற்சி செய்து தோற்றது. ஆனால் பிராட்டியின் பெருமையை வேதத்தால் பூரணமாக கூற முடியாததால் அத்தகைய முயற்சியும் செய்யவில்லை என்பதால் வேதத்தில் பிராட்டி பற்றிய அதிகமான பகுதிகள் இல்லை. பிராட்டியின் வைபவம் இல்லை என்பதல்ல செய்தி. பிராட்டியின் பெருமையைப் பேசும் சக்தி இல்லை என்பதே செய்தி. அதனால் பிராட்டி பற்றிய நேரடியான வைபவம் வேதங்களில் அதிகம் காணப்படுவதில்லை. வேதத்தின் அமைப்பிலேயே தமிழ் மறையான ஆழ்வார்களின் அருளிச் செயல் அமைந்திருப்பதால் மிக விரிவான முறையில் ஆழ்வார்களின் பாசுரங்களிலும் பிராட்டிக்கென்றே பாடப்பட்ட தனிப் பாசுரங்களைக் காண முடியாது. ஆயினும் எம்பெருமானின் பெருமையைச் சொல்லும் இடங்களிலும் அப்பெருமானின் பெருமைக்கு ஆதாரமான விஷயங்களிலும் பிராட்டியின் பெருமையே பேசப்படுவதை ஆசாரியர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள். திருப்பல்லாண்டு துவக்கத்திலேயே பெரியாழ்வார் பல்லாண்டு பாடுகிறார்.

*''வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு''* என்று. இதற்கு எத்தனையோ பொருள் இருப்பினும், நீ வேறு; எங்கள் தாயார் வேறல்ல; உன்னை பார்க்கும்போது அவளும், அவளைப் பார்க்கும்போது உன்னையும் காண்கின்றோம். உன்னைச் சேவிக்கும் போது உன் வடிவாய் உன் மார்பில் உறையும் தாயார் தானே காட்சி அளிக்கிறார் என்கிற தொனி பெரியாழ்வார் பாசுர வரிகளில் தொக்கி நிற்கிறது.

பெருமானின் பெருமையை முழங்கிக் கொண்டே வந்த புருஷசூக்தம், *''ஹ்ரீச்சதே லக்ஷ்மீச்ச பத்ன்யௌ''* என்று, திருமகளோடு இருப்பதால்தான் அந்த வேத புருஷன் பெருமை நிலைபெற்றிருப்பதாகக் கூறித் தலைக் கட்டுகிறது. திருக்கோவலூர் இடைகழியில் *''வையம் தகளியா''* என்று விளக்கேற்றி எம்பெருமானைத் தரிசித்து முதல் திருவந்தாதி பாடிய பொய்கையாழ்வார் எம்பெருமான் தனி ஆளாக வரவில்லை; பிராட்டியோடு சேர்ந்துதான் வந்து காட்சியளித்தான் என்கிற செய்தியை *''நீயும் திருமகளும் நின்றாயால்''* என்று அழுத்தமாகக் குறிப்பிடுகிறார்.

அதையே இரண்டாம் திருவந்தாதியில் பூதத்தாழ்வார் *''வடிக்கோலநெடுங்கண் மாமலராள்''* என்று வழி மொழிகிறார். ஒருவனுக்கு ஆறும் பேறும் பிராட்டி மூலமாகவே கிடைக்கப்பெறுகின்றன. அவளின்றி எதுவும் – எம்பெருமான் உட்பட – அசைவது கிடையாது என்ற தத்துவ உண்மையை *''திருக்கண்டேன்''* என்ற தொடரில் ஆரம்பித்த பேயாழ்வார் தனது அந்தாதியை முடிக்கும் போது *''காரார்ந்த வானமரு மின்னிமைக்கும் வண்டாமரை நெடுங்கண் தேனமரும் பூமேல் திரு''* என்றே முடிக்கின்றார். முதல் திருவந்தாதியில் அருமையான பாசுரம்.

*'' பெயரும் கருங்கடலே நோக்குமாறு ஒண்பூ*
*உயரும் கதிரவனே நோக்கும் - உயிரும்*
*தருமனையே நோக்கும் ஒண் தாமரையாள் கேள்வன்*
*ஒருவனையே நோக்கும் உணர்வு''*

(முதல் திருவந்தாதி 67)

தாமரையாள் கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு என்ற தொடரால் பெருமானுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள தொடர்பினை உணர்த்துவதோடு பிராட்டியுடன் கூடியிருக்கும் எம்பெருமான் மட்டுமே நமது தொண்டினை ஏற்றுக் கொள்பவனாக இருக்கிறான் என்பதால் பிராட்டியின் சம்பந்தமின்றி கைங்கரியம் பூரணமாவதில்லை என்று தெரிவிக்கிறார்.

அடுத்து உறையிலிடாதவர் என்று போற்றப்படும் திருமழிசை ஆழ்வார் பாசுரத்திற்கு வருவோம். வேதத்தின் இறுதியான கருத்தை தனது உறுதியான பாசுரத்தால் பேசுகிறார். பிராட்டி இல்லாவிட்டால் நீ எப்படி தேவனாக முடியும் – *''திருவில்லாத் தேவரை தேறேன் மின் தேவு''* என்று பெருமானிடத்திலேயே பேசும் கம்பீரம் நம்மை வியக்க வைக்கிறது.

திருவரங்கநாதன் நின்ற இடம் திருமலை. அத்திருமலையில் தனக்கு ஏதேனும் ஒரு பொருளாக இருக்க வேண்டிய பேற்றினை அளிக்க குலசேகர ஆழ்வார் வேண்டுகிறார். பிராட்டியின் புருஷகார பலத்தால் அல்லவோ ஓர் சேதனனின் வினைகள் தீர முடியும் என்பதை விளக்கும்போது ஆழ்வார் செடியாய வல்வினைகள் தீர்க்கும் *''திருமாலே'* என்றே பெருமாளை அழைக்கிறார். பொதுவாக வைணவ தத்துவத்தின்படி ஓர் சேதனனை (அடியாரை)ப் பெற பகவான் முயற்சிக்கிறான். அது தான் அவன் நோக்கம். *''சேதன லாபம் ஈஸ்வரனுக்கு''* என்று சொற்றொடர் இதனை விளக்கும். இந்த சேதன லாபம் எம்பெருமானுக்கு அவனுடைய முயற்சியால் மட்டும் கிடைப்பதில்லை. பிராட்டியின் புருஷகாரத்தால் தான் கிடைக்கிறது.

பிரணவமாகிய ஓங்காரத்தில் "அ'' காரமாகிய பெருமானுக்கு "ம'' காரமாகிய சேதனனை அதாவது ஜீவாத்மாவை ஓர் ஆசாரியனாகவும் இருவரையும் சேர்த்து வைக்கும் பாலமாகவும் "உ'' காரத்திற்குரிய பிராட்டி திகழ்கிறாள். இது தான் "திருமந்திரத்தின்



ஸாரமான பொருள்". த்வய மகாமந்திரத்தின் ஸாரமான பொருளும் இதுதான்.

சதுர் வேதத்தின் சாரம் சாந்தோக்கிய உபநிடதம். அதன் சாரம் திருவாய்மொழி. எனவே திருவாய் மொழியை *"யாழினிசை வேதத்தியல்"* என்றார் பராசர பட்டர். அந்தத் திருவாய்மொழியை பிராட்டியை முன்னிட்டு "உ" காரத்தில்தான் துவக்குகிறார் நம்மாழ்வார். (உயர்வற உயர்நலம்) ஏன் வேதாந்தமான உபநிடதம் "உ" காரத்தில் தானே இருக்கிறது. அது தானே (பிராட்டி சம்பந்தம்) சேதனனை அருளால் திருத்தி, ஈஸ்வரனை அழகால் திருத்தி இருவரையும் சேர்த்து வைத்து மகிழ்கிறது.

சுவாமி நம்மாழ்வார் தமது பாசுரங்களில் எங்கெங்கு முடியுமோ அங்கங்கே திருமகளின் ஏற்றத்தை சொல்லாமல் இருந்ததில்லை. எல்லா திவ்ய தேசங்களிலும் பெருமாளுக்கு என்னென்ன வைபவங்கள் உண்டோ அவை எல்லாம் பிராட்டிக்கும் உண்டு. வைணவத்தில் குறிப்பிட்ட சில திவ்ய தேசங்களில் பிராட்டிக்கு தனிப் பெருமையும் உண்டு. திருநறையூர், திருஉறையூர் போன்ற திவ்ய தேசங்கள் "நாச்சியார் கோயில்" என்றே அழைக்கப்படுவதையும் ஸ்ரீவில்லிபுத்தூர் திவ்ய தேசம் "ஆண்டாள் கோயில்" என்று அழைக்கப்படுவதையும் பார்க்கும்போது, பிராட்டியின் வைபவம் எவ்வளவு அருமையானது என்று உணரலாம்.

பிராட்டியின் ஏற்றத்தின் மீது மிகுந்த மதிப்பு கொண்ட பெருமாள், பிராட்டியின் பெருமைக்கு தகுந்தபடி தானும் முயல்கிறானாம். சரணாகதி தத்துவமான



அபய பிரதான ஸாரத்தைச் சொல்ல வந்த இராமாயணம் இராமனின் பெருமையை விட, சீதையின் ஏற்றத்தையும், தியாகத்தையும் சொல்ல வந்ததாகக் கூறி விட்டார் வான்மீகி மகாமுனிவன்.

*"தனிச் சிறையில் விளப்புற்ற கிளிமொழியாள்"* என்று அதையே ஆழ்வாரும் கொண்டாடுகிறார். இராமாயணத்தில் பரதன், முனிவர்கள், சுக்ரீவன், வீடணன் போன்று தன்னை நாடி வந்து சரணம் புகுந்தவர்களை எம்பெருமான் காப்பாற்றினான். "சரணம் புகாதவர்களையும் அதுவும் தன்னை மிகவும் துன்புறுத்திய அரக்கர்களையும் சீதை காப்பாற்றினாள்." வேடர் குலத்திலே பிறந்தவன் குகன். முதன்முதலில் அவன் பெற்ற கருணை யாரிடமிருந்து தெரியுமா? சீதையிடமிருந்து, அதனாலேயே ராமன் அவனை தன் தம்பியருள் ஒருவனாக ஏற்றுக் கொண்டார்.

*" ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது*
*இரங்கி மற்றவர்க்கு இன்னருள் சுரந்து*
*மாழை மான்மட நோக்கி உன் தோழி உம்பி எம்பி*
*என்றொழிந்திலை உகந்து தோழன் நீ எனக்கு"* என்று

சொல்கிறான் ராமன். (திருமங்கையாழ்வார்)

"சீதையின் புருஷகாரத்தால் கொடும் பழி புரிந்த காகாசுரன் தப்பித்தான். அது கிடைக்காமையாலே தசமுகனான இராவணன் தலை அறுப்புண்டான்." சீதை சிறையிலிருந்து பெற்ற பெருமையை தானும் பெற வேண்டும் என்று விரும்பிய பெருமான் அடுத்த அவதாரமாகிய கிருஷ்ண அவதாரத்தில் தன் அவதார இருப்பிடமாகவே சிறையை ஏற்றுக் கொண்டான்.

பிள்ளை லோகாசாரியர் மிகச் சிறந்த ரகசிய நூலான முமுட்சுப்படியில் பிராட்டியின் வைபவத்தை விவரிக்கும் ஒரு உயர்ந்த சூத்திரத்தை அருளிச் செய்திருக்கிறார். அதில் அவன் உபாயமாமிடத்தில் தான் புருஷகாரமாயிருக்கும். அவன் ப்ராப்யனாமிடத்தில் தான் பிராப்யையுமாய் கைங்கர்ய வர்த்தையுமாய் இருக்கும் என்று சூர்ணிகையை அருளிச் செய்திருக்கிறார். திருவெள்ளக்குளம் (அண்ணன் பெருமாள் கோயில்) சீர்காழி பகுதியில் உள்ள திவ்ய தேசத்தில் ஒன்று. திருமங்கையாழ்வாரை ஆழ்வார் ஆக்கிய பெருமை படைத்த குமுதவல்லி நாச்சியாரின் அவதாரத் தலம் இது. திருமங்கையாழ்வார் எம்பெருமானை "அண்ணா அண்ணா" என்று வாய் குளிர அழைத்த தலம்.

இத்தலத்தில **"பூவார் திருமாமகள் புல்கிய மார்பா"** என்று திருவெள்ளக்குளத்து ஸ்ரீநிவாசனின் திருமார்பில் அமர்ந்த பிராட்டியின் திருவடி பலம் கொண்டு சரணம் புகுகிறார். திரு அரிமேய விண்ணகரம் என்று ஒரு திவ்ய தேசம். அடியார்களின் பகைவர்களை நீக்க விரும்பிய பகவான் இங்கு ஸ்ரீதேவி பூதேவி நாச்சியாருடன் எழுந் தருளி சேவை சாதிக்கிறான். இத்தலத்தை இப்போது குடமாடு கூத்தர் கோயில் என்றே அழைக்கிறார்கள்.

இவ்வாலயத்தை மங்களாசாசனம் செய்த திருமங்கையாழ்வார் எடுத்த எடுப்பிலேயே மகாலட்சுமி தாயாரையும் பூமா தேவித்தாயாரையும் துதித்தே பாசுரத்தை ஆரம்பிக்கிறார்.

**"திருமடந்தை மண்மடந்தை இருபாலும் திகழ**
**தீவினைகள் போயகல அடியவர்க்கு என்றும் அருள் நடந்து**
**இவ்வேழுலகத்தவர் பணிய வானோர் அமர்ந்து ஏற்ற**
**இருந்த இடம்"** என்று மங்களாசாசனம் செய்கிறார்.

அடியார்களின் தீவினை அகலவும், அடியவர் களுக்கு அருள் பெருகவும், ஏழுலகத்தவர் பணியவும் எம்பெருமான் மகிழ்வோடு அமரக் காரணம், அவன் இருபுறமும் புருஷகார பூதைகளான ஸ்ரீதேவி, பூதேவி அமர்ந்திருப்பதுதான் என்பது ஆழ்வாரின் திண்ணமான எண்ணம்.

மற்ற ஆழ்வார்களுக்கும் திருமங்கையாழ்வா ருக்கும் பெரிய வேறுபாடு உண்டு. திருவோடு மங்கை யையும் தன் பெயரிலேயே கொண்ட ஆழ்வார் அல்லவா. திருவாகிய மகாலட்சுமி தாயாரும் மங்கையாகிய குமுதவல்லி நாச்சியாரும் சேர்ந்துதான் இவரை ஆழ்வா ராக்கினர். அதனாலே இவர் திரு+மங்கை+ஆழ்வார் = திருமங்கை ஆழ்வார். தாயாரும் பெருமானும் சேர்த்தியாக வந்து திருவெட்டெழுத்து மந்திரத்தை உப தேசம் செய்த பெருமை பெற்றவர் திருமங்கையாழ்வார். "பங்குனி மாதம் உத்திரம் நட்சத்திரத்தில்" தான் இந்த திருவஷ்டாச்சர மந்திரம் மூலம் ஆழ்வார் ஞானம் பெற்றார். கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரம் ஆழ்வாரின் ஜென்ம நட்சத்திர பிரம்மோற்சவமாக திரு நகரியில் கொண்டாடப்படுகிறது.

திருமங்கையாழ்வாருக்கு ஞான ஜென்மம் கிடைக் கப்பெற்ற பங்குனி உத்திரம் அன்று திருநகரிக்கு அருகே



யுள்ள வேத ராஜபுரத்தில் இன்றும் வேடுபறித் திருவிழா வாக உற்சாகமாகக் கொண்டாடப்படுகிறது.

பங்குனி உத்திரம் என்பதே தாயாரின் வைபவத்தைச் சொல்லும் பெருவிழாவிற்கான நாள்தான். வேத வியாசர் அருளிய பிரம்ம சூத்திரத்திற்கு உரை அருளிய சுவாமி ராமானுஜர் அதன் மங்கள சுலோகத்தில் **"பிரஹ்மணி ஸ்ரீனிவாச"** என்று பிராட்டியை முன்னிட்டே எம்பெருமா னைப் பற்றுகிறார். ஆளவந்தாரின் சதுஸ்லோகியும் கூரத்தாழ்வானின் ஸ்ரீஸ்தவமும் பராசர பட்டரின் குண ரத்ன கோசமும் வேதாந்த தேசிகரின் ஸ்ரீ ஸ்துதியும் பிராட்டி யின் வைபவத்தை பரக்கப் பேசுகின்ற நூல்களாகும். ஸ்ரீவைஷ்ணவன் என்பவன் லக்ஷ்மி அதாவது பெரிய பிராட்டியாரான மகாலட்சுமியோடு (ஸ்ரீ) சேர்ந்திருக்கும் பரம்பொருளாகிய நாராயணனையே வணங்குபவன் என்று பொருள். இதனை அடிப்படையாகக் கொண்டதே விசிஷ்டாத்வைத சித்தாந்தம். எல்லா ஆழ்வார்களும் ஒரே குரலாக எம்பெருமானைக் குறிப்பிடும் பொழுது "திரு"மால், "திரு"வாழ்மார்பன், "திரு" மகள் கேள்வன் என்றே குறிப்பிடுகின்றனர்.

பெருமாளோடு ஒரு கணமும் அகலாது பிராட்டி விளங்கும் தன்மையை சுவாமி நம்மாழ்வார் **"அகலகில் லேன் இறையும் என்று அலர்மேல் மங்கை உறை மார்பா"** என்று குறிப்பிட்டு அந்த திவ்ய தம்பதிகளின் திருவடி களில்தான் சரணாகதி சாத்தியமாகும் என்று நிரூபித்துக் காட்டினார். அதனை ஒட்டியே சுவாமி ராமானுஜர் தன் சரணாகதி கத்தியத்தை பெருமாளும் பிராட்டியும் சேர்ந்து சேவை சாதிக்கும் "பங்குனி உத்திரத் திருநாளில்" அரங் கேற்றி உபய விபூதி ஐச்வர்யத்தை சன்மானமாகப் பெற்றார்.

முதலில் சரணாகதி கத்தியத்தை அருளிச் செய்த ராமானுஜர், நம்மாழ்வார் காட்டிய அதே வழியை பின்பற்றி அடுக் கடுக்காக பிராட்டியின் பெருமையைச் சொல்லி "அகில ஜகன்மாதாவே! அடியே னுக்கும் தாயே! வேறு புகல் இல்லாத அடி யேன், உன் திருவடிகளிலே சரணம் புகுந் தேன்'' என்று உருக்கமான விண்ணப் பத்தை வைக்கிறார்.

(*பகவந் நாராயண அபிமதாநுரூப ஸ்வரூப ரூப குண விபவ ஐச்வர்ய சீலாத் யநவதிக அஸங்க்யேய கல்யாண குணக ணாம், பத்ம வநாலயாம் பகவதீம் ச்ரியம் தேவீம், நித்யாநபாயிநீம் நிரவத்யாம் தேவ தேவ திவ்ய மஹிஷீம் அகில ஜகந்மாதரம் அஸ்மந் மாதரம் அசரண்ய சரண்யாம் அநந்ய சரண: சரணமஹம் ப்ரபத்யே.* – முதல் சூர்ணிகை)

## வாசகர்களுக்கு அறிவிப்பு

**பிரதி மாதம் ஸப்தகிரி மாத இதழ் உங்களுக்கு குறிப்பிட்ட காலத்தில் கிடைக்காமல் போனால் பிரதான ஆசிரியர் அலுவலகத்தை பணி நாளில் கீழ்காணும் தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டால் இவ் இதழினை உடனே அனுப்பி வைக்கப்படும்.**

**நீங்கள் கீழ் குறிப்பிடப்பட்ட விவரங்களை தொலைபேசியில் தெரிவியுங்கள். உங்கள் சந்தா எண், உங்கள் முகவரி, உங்கள் பகுதி அஞ்சல் எண், உங்கள் கைபேசி எண்... சரியாக தெரிவியுங்கள்.**

**பிரதான ஆசிரியர் அலுவலக தொலைபேசி எண்:** 0877-2264543



தாயாரும் மனமுவந்து உன் சரணாகதி பலிதமாகட்டும் (அஸ்துதே) என்று கருணை புரிந்தார். எம்பெருமானாராகிய ராமானுஜரின் வைப வத்தைச் சொல்ல வந்த திருவரங்கத்தமுதனார் தொடங்கும்போதே பிராட்டியின் பெருமையோடு தான் தொடங்குகிறார். *''பூ மன்னு மாது பொருந்திய மார்பன்''* என்று திருமகள் சேர்த்தியைப்பாடி பலம் பெறு கின்றார். மந்திர ரத்னமாகின த்வயத்தின் முதல் பதம் *''ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே''* என்பது. இதன் பொருள், பெரிய பிராட்டி யாரை முன்னிட்டு எம்பெருமானுடைய இரண்டு திருவடிகளையும் பற்றுகிறேன். இரண்டாவது தொடர் *''ஸ்ரீமதே நாராயணாய நம:''* பெரிய பிராட்டியும் பெருமானும் ஆகிற சேர்த்தியில் என்றும் கைங்கரியத்தை புரிவேனாக என்கிறது. பகவானின் பெருமையை சொல்லும் இடம் அத்தனைக்கும் பிராட்டிக்கும் சேர்த்து தான் என்பதே வைணவ மரபு. பிராட்டியின் பெருமை பேசும் பங்குனி வெகு சிறப்பான மாதம். பிராட்டி யின் ஏற்றத்துக்கே உரிய மாதம்.

பிராட்டியின் வாழித் திருநாமம் தொடங்கும்போது *''பங்குனியில் உத்திரநாள் பார் உதித்தாள் வாழியே''* என்று பங்குனி உத்திரத்தை சொல்லியே தொடங்குகிறது. பங்குனி உத்திரத்தில் ஸ்ரீயாகிய பிராட்டி யும் விஷ்ணுவாகிய பெருமாளும் ஒன்று சேர்ந்து சேர்த்தி உற்சவம் கண்ட ருளுவதால் அந்த நாள் ஸ்ரீவைஷ்ணவ உலகெங்கும் பொன்னாளாகக் கொண்டாடப்படுகிறது.

ஒவ்வொருவருக்கும் இந்த மிதுனமே (பிராட்டியும் பெருமாளும் சேர்ந்த நிலை) உத்தேச்யமாகும். அந்தத் திவ்யத் தம்பதிகளின் திருவடி களில் சரண் புகுவோம்.

வாழ்க்கை நெறிகள் தொடரும்...

# இராமனிடத்தில் சரணாகதி அடைந்தவர்களும் அதன் பயனும்



திரு. ஸ்ரீராம சேஷசயனன்,
இளையாண்டிபட்டு

ஸ்ரீமந் நாராயணன் ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீதேவி, பூதேவி, நீளா தேவி இவர்களுடன் நவரத்தின மண்டபத்தில் நித்திய சூரிகளும், முக்தர்களும் சதா காலமும் அவனுக்கு பாத சேவை செய்து கொண்டு திவ்விய தம் பதிகளுடன் ஆனந்த அனுபவத்தில் சுகமாக அங்கே வீற்றிருக்கலாம். ஆனால் பூலோகத்தில் தம் பூர்வ கர்ம வினையால் துன்பப்படும் ஜீவர்களைக் கண்டு மனம் இறங்கி அவர்களை கறையேற்றுவதற்காக மகா விஷ்ணு மேலிருந்து கீழே இறங்கி வந்து (அவதாரம்) ஜீவர்களை காப்பாற்றுகிறான்.

இராமாயணத்தில் இராமன் தன்னிடத்தில் யார் சரணாகதி பண்ணுகிறார்களோ அவர்களை ரட்சிப்பதற்காக எடுத்த அவதாரமே இராமாவதாரம். தர்மங்களை தானே நடத்திக் காட்டி மனிதர்களையும் நடக்கச் செய்வதே இராமனின் நோக்கம். தர்ம, அர்த்த, காமம், மோட்சம் என்ற புருஷார்த்தங்களை அவன் உபதேசித்தான்.

தாய், தந்தை சொல் மதித்து நடப்பது, தனக்கு சாதகமாக இல்லாமல் சாஸ்திரங்களில் சொல்லியபடி நடத்திக் காட்டினான். சகோதர்களாய் பிறந்தவர்கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து நடப்பது. மூத்தவர்களிடம் காட்ட வேண்டிய அன்பு, பாசம் போன்றவைகளைக் காட்டியது. சாதுக்களைக் கண்டாள் அவர்களை மதித்து நடப்பது. பிறர் படும் துன்பங்களைக் கண்டு அது தனக்கு ஏற்பட்டதாக நினைப்பது. அரசன் தன் குடிமக்களுக்கு காட்ட வேண்டிய அன்பு, பிறர் மனைவியை நேசியாது இருப்பது போன்ற உபதேசங்களை உபதேசித்தான்.


இராமன் உபதேசித்த சரணாகதி காவியமான இராமாயணம் உலகம் உள்ள வரை, மலைகளும், நதிகளும் உள்ள வரை நிலைத்து நிற்கும். இராமன் அனேக தர்மங்களை சொல்லியிருந்தாலும் அதில் சரணாகதி மார்க்கமே மிக முக்கியமாகும். அதில் பயன் பெற்றவர்களும் அனேகம் பேர். இதற்கு தேச கால நியமனம் கிடையாது. யார், யார் தான் சரண்புக வேண்டும் என்ற அதிகார நியமனமும் கிடையாது. பிரகார நியமனமும் கிடையாது. இதற்கு உதாரணமாக, காகாசுரன், விபீஷணன், குகன், சபரி, விராதன் போன்றவர்களை நாம் எடுத்துக் கொள்ளலாம். வேடுவர் குலத்தில் பிறந்த குகனிடத்தில் அவன் மேன்மையைக் கண்டு அவனை தன்னோடு பிறந்த சகோதரனாக்கிக் கொண்டான். துருவன் அப்படி என்ன வயது முதிர்ந்தவனா? விஷ்ணுவைக் குறித்து தவம் செய்து விஷ்ணுவை நேரில் கண்டான்.

ராட்சசர்களின் கொடுமை தாங்காமல் மகா விஷ்ணுவை சரணமடைந்ததால் தேவர்கள் எண்ணம் நிறைவேறியது. சரணமடைந்தவர்களைக் காப்பாற்றும் உத்ம குணம் உள்ளவன் அவன் ஒருவனே என்று திரிசங்கு போன்றவர்களால் நாம் உணர முடியும். தாயாரை முன்னிட்டு கொண்டே பகவானை சரணமடைய

வேண்டும் என்ற தத்துவத்துக்கு ஏற்ப லட்சுமணன் இராமன் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி தானும் காட்டிற்குப் புறப்பட்டு போக இராமனிடம் அனுமதிப் பெற்றான். காட்டிற்குப் புறப்பட்டு போன இராமனைப் பார்த்து அண்ணா! நீங்கள் அயோத்திக்கு வராவிட்டால் இங்கே உயிர் விடுவேன் என்று, இராமன் திருவடியில் சரணாகதி பண்ணியதில் பரதனுக்கு மர வடியை கொடுத்து பாதுகா ஆராதனம் செய்யும் பாக்கியம் பெற்று, "பாதுகா சேவகன்" என்ற பெயரும் பெற்றான். தண்டகாரண்யத்தில் மகரிஷிகள் இராமன் திருவடிகளை சரணமடைந்து வீழ்ந்து வணங்கியதால் அரக்கர் கொடுமையின்றி அவ்வனத்தில் பயமின்றி வாழ்ந்தனர்.

பிராட்டியிடத்தில் பொறுக்க முடியாத துன்பத்தை செய்த காகாசுரன் இராமன் திருவடியில் வீழ்ந்து சரணாகதி பண்ணியதால் ராமபாணத்தால் அவன் உயிர் காப்பாற்றப்பட்டான். சீதையை தேடும் பொருட்டு இராமன் ஆணையை ஏற்றுக் கொண்ட சுக்ரீவன் சொன்ன சொல் தவறியதால், இராம னின் கோபத்தினின்று சுக்ரீவன் சரணமடைந்ததால் அவன் பிழையை பொறுத்து அருளினான். மனைவி, மக்கள், இராஜ்ஜியம், உற்றார் உறவினர் கள் எல்லாவற்றையும் விட்டு விட்டு இனி சர்வலோக சரண்யனான இராமனே என்று அவனை விபீஷணன் சரணமடைய, பகைவனிடத்திலிருந்து வந்தவ னாயினும் இவன் ஸத்வ குணம் உள்ளவன். இவனைக் காப்பாற்றுவதே மேல் என்று எண்ணி அவனை ஏற்றுக் கொண்டான். இலங்கை இராஜ்ஜி யத்தை ஆளும் சுகத்தைக் கொடுத்தான். விபீஷணன் இராமனிடம் அடைந்த சரணாகதியால் அவனுடன் கூட துணையாக வந்த மந்திரிகளும் காப்பாற் றப்பட்டார்கள்.





இராவணா! உன் கோரமான மர ணம் உன்னை நெருங்கிக் கொண்டி ருக்கிறது. என் பிரபுவான இராமனை இப்பொழுது கூட சரணமடைந்தால் உன் பிழையெல்லாம் பொறுத்துக் கொள்வான் என்று சீதை சொல்ல, கேளாத இராவணன் இறுதியில் மாண்டு போனான். தேவர்கள் பண் ணின சரணாகதியால் ராமனுக்கு அனேக கைங்கரியம் செய்யும் பாக்கி யம் பெற்றனர். பரதன் சரணாகதியால் பாதுகைக்கு எல்லா வகையிலும் கைங்கரியம் செய்யும் பாக்கியம் பெற் றான்.லட்சுமணன் சரணாகதியால் சர்வ காலத்திலும், சர்வ அவஸ்தையிலும் இராமனுக்கு துணை புரியும் பாக்கி யம் பெற்றான். சீதையை தேடிச் சென்று கண்டு பிடித்த அனுமனுக்கும் சுக்ரிவனுக்கும் இராம கைங்கரியம் செய்யும் பாக்கியம் கிடைத்தது.

பகவானைக் காட்டிலும் அவன் அடியார்களுக்கு செய்யும் கைங்கரி யமே மேலானது என்று பரதனிடத்தில் சத்ருக்னன் நடந்து காட்டினான்.

வைணவம்

# திருக்கச்சி நம்பிகள் அருளிச் செய்த தேவராஜாஷ்டகம்



திருமகள் கேள்வனான எம்பெருமான் அனைவரும் வாழ்ச்சி பெற்றிட, இவ்வுலக இருள் நீங்க, நித்ய சூரிகளில் சிலரை இவ்வுலகத்தில் பிறப்பிக்கும்படி செய்து, அவர்களின் ஞான, அனுட்டானங்களால் உலகத்தைத் திருத்தி வாழ்வித்தருள்கிறான். பரமாசாரியரான ஆளவந்தாரின் முக்கிய சீடர்களில் ஒருவரான திருக்கச்சி நம்பிகள் பரமபத நாதனின் கணாதிபரில் ஒருவரான "சுப்ரதிஷ்டர்" என்பவரின் அம்சமாகவும், *"யோகர்தி ஸங்க்ய சகவர்ஷ கணே வ்யதீதே"* என்கிறபடியே 931– என்கிற கணக்கின் படி ஸௌம்ய வர்ஷத்தில், மாசி சுக்ல பக்ஷ ம்ருக சீர்ஷ நஷத்திரத்தில் வியாழக்கிழமை தசமியன்று திரு அவதரித்தார்.

ஸ்ரீகாஞ்சீ பூர்ணர், காஞ்சீ முனி, பேரருளாள தாசர், கஜேந்திர தாசர், திருக்கச்சி நம்பிகள், பார்க்கவ ப்ரியர், கமலாபதி நந்தனர், ராமாநுஜ மாந்யர் என பல நாமங்களும் இவருக்கு உண்டு. ஆசார்ய நிர்வாஹகரான ஆளவந்தார் திருவடிகளிலே ஆஸ்ரயித்தவர். அத்திகிரி அண்ணலுக்கு திருவாலவட்ட கைங்கர்யம் புரிந்து பலரின் சந்தேகங்களையெல்லாம் தேவப்பெருமாளிடம் விண்ணப்பித்து அப்பெருமாளின் திருவுள்ளத்தை எல்லோருக்கும் அருளிச் செய்தவர்.

*"யதா ஸர்வேஷு தேவேஷு நாஸ்தி நாராயணாத் பர: |*
*ததா ஸர்வேஷு மந்த்ரேஷு நாஸ்திச அஷ்டாக்ஷராத் பர: ||"*

என்கிற ப்ரமாண வசனத்தின்படி, எல்லா தேவர்களுக்குள்ளும் நாராயணனைக் காட்டிலும் மேலானவன் இல்லாதது போல், எல்லா மந்த்ரங்களுக்குள்ளும் அஷ்டாக்ஷரத்தை காட்டிலும் மேலானது இல்லை என்கிற படியேயும், தேவப்பெருமாளுக்கு ப்ரதிஷ்டா மந்த்ரம் என்பதனைக் கொண்டும், அதே கணக்கிலேயே, தேவராஜ அஷ்டகத்தை அருளிச் செய்தார்.

### திருநக்ஷத்திர தனியன்

*"கும்பே ம்ருகசிரோத்பூதம் யாமுநார்ய பதாச்ரிதம் |*
*தேவராஜ தயா பாத்ரம் ஸ்ரீ காஞ்சீ பூர்ணம் ஆச்ரயே ||"*

தேவராஜ தயாபாத்ரம் – தேவப்பெருமாளின் கருணைக்கு இலக்கானவரும், யாமுநார்ய பதாச்ரிதம் – பரமாசார்யரான ஆளவந்தாரின் திருவடித்தாமரைகளில் அடி பணிந்தவரும், கும்பே ம்ருக சிரோத்பூதம் – மாசி மாதம் ம்ருகசீர்ஷ நக்ஷத்திரத்தில் திருஅவதரித்தவருமான, ஸ்ரீகாஞ்சீ பூர்ணம் ஆச்ரயே – திருக்கச்சி நம்பிகளை அடி பணிகிறேன்.

### மற்றைய தனியன்கள் :

திருக்கடன்மல்லை என்கிற திவ்ய தேசத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்தல சயனப்பெருமாளுக்கு அநவரத கைங்கர்யம் செய்து போந்த பிள்ளை லோகஞ்சீயரின் திருவடியான "ஸ்ரீஇராமாநுசப் பிள்ளை" என்னும் பெரியோன் அருளிச் செய்த "ஸ்ரீகாஞ்சீ பூர்ண சதகம்" என்கிற ஸ்துதியிலிருந்து எடுத்து அநுஸந்திக்கப்பட்டு விளங்குகிறது.

### தனியன் (1)

*"ஸ்ரீமத் காஞ்சீ முநிம் வந்தே கமலாபதி நந்தநம்|*
*வரதாங்க்ரி ஸதா ஸங்க ரஸாயன பராயணம் ||"*

திரு. பி.டி. சேஷாத்ரி, சென்னை.

அம்ருதாக்ஷரத்தில் அமைந்த தனியன்களில் இதுவும் ஒன்று.

வரத – தேவப்பெருமாளுடைய கேட்ட வரம் தரும் பெருமாளின், அங்க்ரி – திருவடித் தாமரைகளில், ஸதா – ஒழிவில் காலமெல்லாம், ஸங்க–உடனாகி, ரஸாயன – மருந்தும் பொருளும் அமுதமாக, பராயணம் – ஊற்று முடைத்தவருமான, கமலாபதி நந்தனம் – திருமகள் கேள்வன் என்னும் பெயரை உடையவரின் திருக்குமார ராகிய, ஸ்ரீமத் காஞ்சீ முநிம் – திருக்கச்சிநம்பியை, வந்தே – வணங்குகின்றேன்.

### தனியன் (2)

*"தேவராஜ தயா பாத்ரம் ஸ்ரீகாஞ்சீ பூர்ணமுத்தமம்।*
*ராமாநுஜமுநேர் மாந்யம் வந்தேஹம் ஸஜ்ஜனாச்ரயம் ॥"*

தேவராஜ – தேவாதி தேவர்களின் தலைவனான எம்பெருமானுடைய, தயா – கருணைக்கு, பாத்ரம் – இருப்பிடமானவரும், ராமாநுஜ முநேர் மாந்யம் – "ஜய ராமாநுஜ ஹஸ்தி தாம்நி நித்யம்" என்கிறபடியே விளங்குகின்ற உடையவரால் கொண்டாடத் தக்கவரான, ஸஜ்ஜனாச்ரயம் – கைங்கர்ய ஸ்ரீயை உடையவர்களுக்கு புகலானவரும், உத்தமம் – மேலான பெருமை படைத்தவருமான, ஸ்ரீகாஞ்சீபூர்ணம் – திருக்கச்சி நம்பிகளை, அஹம் – நான் (இவ்வடியான்), வந்தே – வணங்குகின்றேன்.

### திருக்கச்சி நம்பிகள் அருளிய ஸ்தோத்ரம்

*"நமஸ்தே ஹஸ்திசைலேச! ஸ்ரீமந் அம்புஜலோசன!*
*சரணம் த்வாம் ப்ரபன்னோஸ்மி, ப்ரணதார்த்தி ஹர அச்யுத!"*

ஸ்ரீமந் – பிராட்டியோடு கூடியவனே! பெருந்தேவியின் நாயகனே!, அம்புஜலோசன–தாமரைப் போன்ற கண்களையுடையவனே!, ஹஸ்திசைலேச – கரிகிரியின் தலைவனே!, தே – தேவரீரின் பொருட்டு, நம: – வணங்குகின்றேன். ப்ரணத – அழைத்து வாழ்வித்து அடியவர்களின், ஆர்த்தி – துக்கத்தை, ஹர – போக்குபவனே, அச்யுத – அடியார்களை கைவிடாதவனே, த்வாம் – தேவரீரை, சரணம் ப்ரபந்ந: – சரணம் அடைந்தவனாக, அஸ்மி – இருக்கின்றேன்.

எம்பெருமானின் ஐந்து நிலைகளான பரம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை என்னுமத்தை இம்முதல் சுலோக மூலமாக அருளிச் செய்தார்.

### (2)

*"ஸமஸ்த ப்ராணி ஸந்த்ராண, ப்ரவீண கருணோல் பண।*
*விலஸந்து கடாக்ஷாஸ்தே மய்யஸ்மின் ஜகதாம்பதே ॥"*

ஸமஸ்த – பற்பல்லாயிரம், ப்ராணி – உயிர்களை, ஸந்த்ராண – காப்பதில், ப்ரவீண – வல்லவனே, கருணோல்பண – அருள் மிக்கவனே, ஜகதாம்பதே – விண் முதல் முழுவதற்கும், நில விசும்பு ஒழிவற எல்லா லோகங்களுக்கும் தலைவனே, அஸ்மின்மயி – இவ்வடியானிடத்தில், தே – தேவரீருடைய, கடாக்ஷ – திருக்கண் நோக்கு, விலஸந்து – ஒளிவிடுதல் வேண்டும்

"ஸதா பச்யந்தி சூரய" என்னும்படி இருப்போர் உம்மை ஸேவிப்பது போன்று, அவர்களுக்கு உன் திருக்கண் கடாக்ஷங்களை அனுக்ரஹிப்பது போல, அடியேன் மீதும் தேவரீர் அனுக்ரஹத்தை காட்டிட வேண்டும்.

### (3)

*"நிந்திதாசார கரணம் நிவ்ருத்தம் க்ருத்ய கர்மண: ।*
*பாபீயாம் ஸம மர்யாதம் பாஹிமாம் வரத ப்ரபோ ॥"*

வரதப்ரபோ – வரம் அருளும் ஸ்வாமின், நிந்தித – சாஸ்த்திரங்களால் விலக்கப்பட்ட, ஆசார – செயல்களை, கரணம் – செய்பவனும், க்ருத்யகர்மண – செய்தே தீர வேண்டிய செயல்களை, நிவ்ருத்தம் – செய்யாமல் விலகியிருப்பவனும், பாபீயாம்ஸம் – புண்யம் என்கிற எதுவும் இல்லாதவனும், அமர்யாதம் – எல்லைக் கடந்து இருப்பவனுமான, மாம் – இவ்வடியவன் பொருட்டு, பாஹி – திருவருள் புரிவீராக.

"ஸாஸ்த்ர ஜ்ஞானம் பஹுக்லேசம்" என்கிறபடியே உள்ள இவ்வடியானுக்கு "உன் தன்னை பிறவி பெறும் தனை புண்ணியம் யாமுடையோம்" என்று உள்ள அடியேன் பொருட்டு உம் அழைத்து வாழ்விக்கும் தன்மையினால் அடியேனை ரக்ஷிக்க வேண்டும்.

### (4)

*"ஸம்ஸார மருகாந்தாரே துர்வ்யாதி வ்யாக்ர பீஷணே ।*
*விஷய க்ஷுத்ர குல்மாட்யே, த்ருஷா பாதப சாலினி ॥"*

துர்வ்யாதி – கொடிய நோய்களாகிற, வ்யாக்ர – புலிகளால், பீஷணே – பயங்கரமாயும், விஷய – சப்தாதி விஷயங்களாகிற, க்ஷுத்ர – கீழ்மையான, குல்மாட்யே – சிறு புதர்கள் நிறைந்ததாயும், த்ருஷா – ஆசை என்கிற, பாதபசாலினி – மரங்களை அடர்ந்து பெற்றதாயும்.

### (5)

*"புத்ர தார க்ருஹ க்ஷேத்ர ம்ருக த்ருஷ்ணாம்பு புஷ்கலே ।*
*க்ருத்ய அக்ருத்ய விவேகாந்தம் பரிப்ராந்தம் இதஸ்தத: ॥"*

புத்ர – மக்கள், தார – கொண்ட பெண்டிர், க்ருஹ – வீடு க்ஷேத்ர – நிலம் முதலிய, ம்ருகத்ருஷ்ண – கானல், அம்பு

– நீரால், புஷ்கலே – நன்கு நிறைந்துள்ள, ஸம்ஸார – அஸாரமான வாழ்வாகிய, மருகாந்தாரே – கொடிய வனத்தில், க்ருத்ய அக்ருத்ய – செய்ய வேண்டிய, செய்யக்கூடாததும் ஆகிய, விவேகாந்தம் – பகுத்தறியும் தன்மை இல்லாத குருடனாயும், இதஸ்தத: – இங்கும் அங்கும் என்று, பரிப்ராந்தம் – சுற்றி வருபவனாயும்

**(6)**

*"அஜஸ்ரம் ஜாத த்ருஷ்ணார்த்தம் அவஸந்நாங்க அக்ஷமம்|*
*க்ஷீண சக்தி பல ஆரோக்யம், கேவலம் க்லேச ஸம்ச்ரயம்||"*

அஜஸ்ரம் – தினைபொழுதும் (முப்பொழுதும்), ஜாத – உண்டான, த்ருஷ்ணார்த்தம் – கொடிய ஆசையினால் துன்புறுத்தப்பட்டவனாயும், அவஸந்ந – இளைத்தும், மெலிந்தும், அங்கம் – சரீரத்தை உடையவனாயும், அக்ஷமம் – திறன் இல்லாதவனாயும், க்ஷீண – குறைந்த, சக்தி பல ஆரோக்யம் – ஆற்றல், வலிமை, நன்னிலை உடையவனாய், கேவலம் க்லேச – துன்பங்களுக்கே, ஸம்ச்ரயம் – இருப்பிடமாயும்.

**(7)**

*"ஸந்தப்தம் விவிதை: துஃகை: துர்வசைர் ஏவமாதிபி: !*
*தேவராஜ தயாஸிந்தோ! தேவ தேவ ஜகத்பதே!"*

துர்வசை – வார்த்தைகளினால் விவரிக்க முடியாத, ஏவமாதிபி – இது போன்ற, விவிதை – அனேக விதங்களான துஃகை – துன்பத்தினால், ஸந்தப்தம் – ஸம்ஸாரமாகிற பெருங்கடலில் நன்றாக தவித்துக் கொண்டும், மாம் – இருக்கின்ற அடியேனை, தயாஸிந்தோ – கருணைக் கடலே, ஜகத்பதே – உலகுக்கு முந்தை தாய் தந்தையே, ஆதிபகவனே!, தேவராஜ – அயர்வறும் அமரர்கள் அதிபதியே.

**(8)**

*த்வதீக்ஷண ஸீதாஸிந்து!: வீசிவிக்ஷேப சீகரை:!*
*காருண்ய மாருதா நீதை: சீதளைர் அபிஷிஞ்ச மாம்"*

காருண்ய – கருணை என்னும் அருளாகிற, மாருத ஆநீதை: – காற்றினால் கொண்டு வரப்பட்ட, சீதளை – குளிர்ந்ததான, த்வத் – தேவரீருடைய, ஈக்ஷண – திருக்கண் பார்வையின், ஸீதா ஸிந்து – அம்ருத நதியின், வீசி விக்ஷேப சீகரை – அலைகளின் திவலைகளினால், அபிஷிஞ்ச – நனைத்தருள வேணும், நீராட்ட வேண்டும்.

நான்காவது சுலோகம் தொடங்கி எட்டாம் சுலோகம் வரை உள்ள ஐந்து சுலோகங்களும் கூட்டுப் பொருளாக, தொடராக இருக்கின்றபடியாலே, இதற்கு "குலகம்" என்று பெயர்.

**திரண்ட பொருள் :**

"சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் என்கிற விஷயாந்தரங்களிலேயும், கொண்ட பெண்டிர் மக்கள் உற்றார் சுற்றத்தவர் பிறரும் கண்டதோடு பட்டதல்லால் காதல் மற்றுயாதுமில்லை" என்கிறபடியும், "எதைச் செய்வது, விடுவது என்கிற விவேகம் இல்லாதவனாயும், சாயலோடு மணிமாமை தளர்ந்தேன் நான்" என்கிறபடியும் உள்ள இவ்வடியானை, தேவப்பெருமாளே அழைத்து வாழ்விக்கும் எம்பெருமானே, தேவரீரின் நிர்ஹேதுக கருணையினால் அடியேனை நீராட்ட வேண்டும்.

பெரியஜீயர் திருக்கச்சி நம்பியையும், தேவப்பெருமாளையும் ஒரு சேர அநுபவித்தது இவ்விடத்தில் அநுஸந்தேயம்

*"ஸ்ரீகாஞ்சீ பூர்ண மிச்ரேண ப்ரீத்யா ஸர்வாபி பாஷிணே|*
*அதீத அர்ச்சா வ்யவஸ்தாய ஹஸ்த்ய த்ரீசாய மங்களம் ||"*

*" எய்துமவற்கு இந்நிலத்து அர்ச்சாவதாரம் எளிது"* என்னும் படியாக அர்ச்சா ஸமாதியைக் கடந்து, குலைத்துக் கொண்டு, மிகுந்த உகப்புடன் ஜகதாசார்யரான ஸ்வாமி எம்பெருமானார்க்கு ஆறு வார்த்தைகளை திருக்கச்சி நம்பி மூலமாக அருளிச் செய்தும், எப்பொழுதும் திருக்கச்சி நம்பியோடு வார்த்தையாடிக் கொண்டிருக்கும் திருஅத்திகிரி தேவப் பெருமாளே தேவரீருக்கு பல்லாண்டு, நித்ய ஸ்ரீர்! நித்ய மங்களம்!

*"கருணாகர பாதாப்ஜ சரணாய மஹாத்மனே*
*ஸ்ரீமத் கஜேந்த்ர தாஸாய காஞ்சீ பூர்ணாயதே நம:"*

ஸ்ரீதிருக்கச்சி நம்பியிரு திருவடிகள் வாழியே!

**65. சாஸ்த்திர நீதிகள் :**

அப்யாஸாநு சரீ வித்யா
புத்தி கர்மா நு சாரிணீ |
உத்யோகா சாரிணீ லக்ஷ்மீம்
பலம் பாக்யாநு சாரிணீ ||

படிப்பு அறிவு நிறைய இருந்தாலும், நிறைய அப்யாசம் செய்து வந்தால் தான் சபையில் நன்கு பிரகாசிக்க முடியும்! தனது வாழ்க்கை முறையில் எப்படி நடந்து கொள்கிறானோ! அப்படியே அவனது புத்தியும் இருக்கும்! உத்தியோகம் நல்ல முறையில் அமைவதால் பணம் வரவுகள் அதே போலவே கிடைக்கும்! அவரவர்கள் செய்யும் கர்மகாரியங்களுக்கு தக்க பலன் நிச்சயம் கிடைக்கும்!

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 31

**இடமிருந்து வலம்**

1. விஷ்ணுவின் சக்கரத்தின் அம்சமாக பிறந்தவர் … (9)
5. வில்லால் புகழ் பெற்ற பாண்டுவின் மைந்தன் ….(5)
10. நான்கு வேதங்களில் ஒன்று….(2)
12. வேதம் அனைத்திற்கும் வித்து…(5)
13. அனுமனின் இன்னொரு பெயர்…(5)
15. ஆண்டாள் சிறு பேர் என்று எந்த திருநாமத்தைப் பேசுகிறாள்….(7)
17. பூதேவித் தாயாரை இப்படியும் அழைக்கலாம்…(6)

**வலமிருந்து இடம்**


6. வைகுண்டத்தில் உள்ள காவலர்களில் ஒருவன்… (3)
7. தசாவதாரத்தில் முதல் அவதாரம்…(8)
8. ராமானுஜர் அவதரித்த தமிழ் மாதம்….(4)
9. அனுமனுக்குப் பிடித்த நாமம்….(2)
11. ராமாயணம் எழுதியவர்….(4)
20. திருச்சானூரில் ஸ்ரீதேவி என்று அழைக்கப்படுபவர்…..(8)
23. ராமானுஜருக்கு திருமந்திர ரஹஸ்யத்தை ஓதுவித்தவர்….(11)

**மேலிருந்து கீழ்**

1. நடுநாட்டில் உள்ள திவ்ய தேசங்களில் ஒன்று….(7)
2. ஸ்ரீதேவி, பூதேவி சமேத நரசிம்மர் இருக்கும் ஸ்தலம்…..(6)
3. அகத்தியரால் ராமனுக்கு உபதேசிக்கப்பட்ட சுலோகம்…(9)
4. “படியாய்க்கிடந்து உன் பவள வாய் காண்பேனே” என்று குலசேகராழ்வார் பாடிய திவ்ய தேசம்….(4)

**கீழிருந்து மேல்**

11. கிருஷ்ணரின் இன்னொரு பெயர்…..(5)




தொகுப்பு : திரு. எஸ். ராஜகுமார், சென்னை.

விடைக்கு 42 ம் பக்கம் பார்க்க

14. பிரம்மாஸ்திரத்திற்கு ராமானுஜர் அருளிச் செய்த உரை….(5)
16. பிரம்மாவின் வேறு பெயர்…..(5)
18. பெரியாழ்வாரை இப்படியும் அழைப்பர்….(10)
19. யமுனை நதியை கலப்பையால் தடுத்து நிறுத்தியவர்….(5)
21. முக்தி தரும் ஏழு தலங்களில் ஒன்று….(5)
22. மகாபலி யாகம் நடத்திய இடம்….(9)
23. திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திருத்தலம்…..(8)

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

**ஸப்தகிரி வாசகர்களுக்கு விண்ணப்பம்**

உங்கள் வாழ்க்கையில் நடந்த திருவேங்கடவன் லீலைகள், துணுக்குகள், சிறார் எழுதும் கதைகள், கட்டுரைகள், குறுக்கெழுத்துப் புதிர்கள் வரவேற்கப்படுகின்றன. சந்தேகங்கள் தெளிதல் பகுதிக்கான ஆன்மீக சந்தேகங்கள் வரவேற்கப்படுகின்றன.

–பிரதான ஆசிரியர்



# ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்

## வைகுண்ட துவாரபாலகர்கள் பெற்ற சாபம்

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : டாக்டர். சி. கோவிந்தசாமி.

வைகுண்டம், விஷ்ணு நிவாசம்; அதுவே இறைவன் வாழும் இடமாகும். "குண்டம்" இல்லாததே வைகுண்டம். அதாவது, துன்பம் இல்லாத இடமே வைகுண்டம். அங்கே அஞ்ஞானத்தால் உண்டாகும் அறிவீனமான செயல்கள், மன வேறுபாடுகள் எதுவும் இருக்காது. அங்கு ஆன்மீக உணர்வுகளே முழுமையாக நிறைந்திருக்கும். நாம் இருக்கும் பௌதீக லோகம் என்பது குண்டலோகம். "குண்ட லோகம்" என்றால் துன்பம் நிறைந்த உலகம் என்பது பொருள். ஆனால், இதில் உள்ள சிக்கல் என்னவென்றால், இந்த உலகத்தில் காணப்படும் மன மாசுகள் வீண் சச்சரவுகள் யாவும் சர்வ சாமான்யமாகவும், இங்கு எல்லாம் வைவித்யத்தோடு நிறைந்திருப்பதாகவும் தெரிவதேயாகும். ஆனால் குருசாது சாஸ்திர வசனங்கள் மூலமாக திவ்ய திருஷ்டி கிடைத்தால் இந்த உலகத்தைப் பற்றியும் ஆன்மீக உலகத்தில் உள்ள மேன்மைகளைப் பற்றியும் அறிந்து கொள்ள முடியும். பௌதீக உலகத்தில் மனபேதங்கள் என்பது எப்பொழுதும் காணக்கூடிய ஒன்றாக இருக்கும். சகோதரர்கள் இடையே கலகங்கள், கணவன்-மனைவியிடையே, உறவினர்களிடையே, குடும்பங்களிடையே, சாதிகளிடையே, வர்க்கங்களிடையே, மாநிலங்களிடையே, நாடுகளிடையே கலகங்கள் எனத் தொடர்ந்து கொண்டே இருக்கும். இவைகளை நாம் எப்பொழுதும் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருப்பதினால், அவைகள் நமக்கு மிகவும் சாதாரணமானவைகளாகத் தெரிகின்றன. ஆனால் இப்படிப்பட்ட வீண் துவேஷங்கள் எதனால் ஏற்படுகின்றன என்ற கேள்விக்குப் பதில் நமக்கு ஞானம் உண்டாகும் போது தான் புலனாகும். அப்படிப்பட்ட வீண் துவேஷங்கள் இல்லாத இடம் வைகுண்டம். எப்பொழுதும் இறைவனுடைய நினைவாகவே இருந்து, அவனை அடைய வேண்டும் என்னும் தீரா விருப்பத்தோடு யாரொருவர் இறக்கும் தறுவாயிலும் இறைவனை தன் சிந்தையில் வைத்திருக்கிறார்களோ அவர்களே இறைவனின் நிவாசமான வைகுண்டத்திற்குச் சென்று சேர முடியும். இது தான் கீதையின் அறிவுரையும் ஆகும்.

ஒரு சமயம் பிரமதேவனுடைய குமாரர்களான சனகர் முதலானோர் ஆகாய மார்க்கமாக உலகம் முழுவதும் சுற்றி விட்டு வைகுண்டம் சென்றனர். இவர்கள் நால்வரும் ஐந்து வயது இளம்பாலகர்களாய் வடிவம் கொண்டு ஆடைகள் ஏதுமின்றி காணப்பட்டார்கள். வைகுண்டத்திற்குச் சென்ற பிரம்ம குமாரர்கள் அங்கே இருந்த தேவர்கள் அனைவரும் பகவத் சேவையில் ஈடுபட்டிருந்ததைக் கண்டார்கள். அங்கு காணப்பட்ட புருஷர்கள் யாவரும் நான்கு கைகளுடன் காட்சி தந்தனர். அவர்கள் தாங்கள் செய்யும் சேவைகளுக்குப் பிரதிபலன் ஏதும் விரும்பாதவர்களாக இருந்தார்கள். தம்தம் துணைவியரோடு அவர்கள் விமானங்களில் சுற்றி வந்தார்கள். ஆனால், அவர்கள் அந்த சமயத்தில் இந்திரிய போகத்தில் மனதை செலுத்தாமல் ஹரிகுண கீர்த்தனைகளில் மனதை செலுத்தியவராக

இருந்தனர். பொதுவாக ஆணும் பெண்ணும் இருவரும் சேர்ந்து தனிமையில் இருக்கும் போது ஒருவர் மீது ஒருவர் கவரப்பட்டவர்களாக இருப்பார்கள். அவர்களிடையே காமவிகாரங்கள் உண்டாவதும் இயல்பே ஆகும். ஆனால், வைகுண்ட பிரபாவத்தால் அங்கு ஆண், பெண் இருவரிடையே எந்தவொரு காம பாவமும் ஏற்படவில்லை. எல்லோரும் அங்கு பகவத் சேவையிலேயே கவனம் கொண்டிருந்தனர். வைகுண்டத்தில் இருப்பவர்களுக்கு உள்ளத்தில் காமவிகாரமே உண்டாகாது என்று பாகவதத்தில் சொல்லப்பட்டுள்ளது. அதற்குக் காரணம் அவர்கள் எப்பொழுதும் ஸ்ரீகிருஷ்ணனைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பதே ஆகும். சனகர் முதலான நால்வரும் வைகுண்டத்தில் வேண்டியவர்களுக்கு வேண்டியதை வழங்கும் அற்புத மரங்களான கல்ப விருட்சங்கள் பலவும் கண்டனர். அங்கே எல்லா வனங்களிலும் குயில்கள், மயில்கள் போன்ற பறவைகள் பலவும் சுற்றித் திரிந்தன. அந்த வனத்தில் மிகவும் மணம் வீசக் கூடிய மலர்கள் பலவும் மலர்ந்திருந்தன. அந்த மலர்களின் வாசனைக்காகப் பூவண்டுகள் பலவும் ரீங்காரம் விட்டபடி இருந்தன. இப்படியாக எத்தனை மணமிக்க பூஞ்செடிகள் அங்கே இருந்த போதிலும் அவைகள் எல்லாம் அங்கு வளர்ந்து மணம் வீசிக் கொண்டிருந்த துளசி செடிகளுக்கு உதவுவனாக இருந்தன. இவ்வாறாக வைகுண்டத்தில் வேறுபாடற்ற தன்மையைக் காண முடிந்தது. உண்மையில் முரண்பாடற்ற சூழ்நிலை இந்த உலகத்தில் கூட சாத்தியமே. எவரிடத்திலும் எதனிடத்திலும் எம்மாத்திரமும் வேறுபாடு இல்லாத குடும்பத்திற்குச் சரியான எடுத்துக்காட்டு சிவபார்வதிதேவி குடும்பமே ஆகும். சிவனின் வாகனம் நந்தி, பார்வதி தேவியின் (துர்கா தேவி) வாகனம் சிம்மம், இருந்த போதிலும் சிவ பார்வதி இருவரும் நித்தியம் பகவத் தியானத்தில் இருப்பதினால் நந்திக்கும் சிம்மத்திற்கும் இடையே பகைமை பாராட்டும் குணம் இருக்காது. சிவனின் கழுத்தில் பாம்பு இருக்கும், சிவபார்வதியின் குமாரனான குமார சுவாமியின் வாகனம் மயில், இருப்பினும் அங்கே அவை இரண்டிற்கும் இடையே பகைமை இருக்காது. சிவன் கழுத்தில் உள்ள பாம்புக்கும் விநாயகரின் வாகனமான எலிக்கும் கூட பகைமை இல்லை. எனவே வீட்டில் உள்ளவர்கள் யாவரும் கிருஷ்ண சேவையிலாவது அல்லது விஷ்ணு பக்தியிலாவது எப்பொழுதும் திளைத்திருந்தால் எவரிடத்திலும் நமக்கு சண்டை சச்சரவுகளும் மனப்பூசல்களும் நிச்சயம் ஏற்படாது.

அங்கே இருந்த பூங்காவனம் ஒன்றில் ஸ்ரீலட்சுமி தேவி ஸ்ரீமஹா விஷ்ணுவை துளசி இலைகளால் பூஜித்து கொண்டிருந்தாள். இறைவனை வணங்கிய வண்ணம் அருகிலிருந்த தடாகத்தில் உள்ள தூய்மையான நீரில் தன் அழகிய முகத்தைப் பார்த்துக் கொள்ள முயற்சித்தாள். நிர்சலனமும் நிர்மலமுமான அத்தடாகத்து நீரில் அவள் சௌந்தர்யம் மிகவும் அழகாகக் காணப்பட்டது. எனவே தான் இந்தப் பௌதீக உலகத்தில் காணப்படும் ஒவ்வொன்றும் ஆன்மீக உலகமான வைகுண்டத்தில் உண்மையில் காணப்படுகின்றன. யோக பலத்தால் வைகுண்டத்திற்குச் சென்ற சனகர் முதலானோர் அங்கிருந்த ரம்மியமான சூழலையும், அழகான காட்சிகளையும் கண்ணாரக் கண்டு அனுபவித்துக் கொண்டே வைகுண்டத்தின் ஆறு வாயில்களையும் கடந்து ஏழாவது வாயிலைச் சென்றடைந்தனர்.

வைகுண்டத்தில் ஏழு வாயில்கள் உள்ளதாகச் சொல்வார்கள். எனவே தான் வைகுண்ட ஏகாதசி அன்று பகவானின் திருக்கோயில்களில் ஏழு வாயில்களை ஏற்பாடு செய்து, ஏதோ ஒரு விதத்தில் இறைவனின் சேவையில் ஈடுபட்டிருப்பது என்பது மங்களகரமானதாகக் கருதப்படுகிறது. பின்பு, ஏழாவது வாயிலைக் கடந்தவுடன் இறைவனின் தரிசனம் தமக்குக் கிடைக்கும் என்ற எண்ணத்திலேயே இருந்தபடியால் அப்பொழுது அவர்கள் மனம் அழகை இரசிக்கும் நிலையில் இல்லை. வயதில் அவர்கள் சிவனைக் காட்டிலும் முதியவர்களே ஆயினும், யோக பலத்தால் காமவிகாரம் ஏதுமில்லாத 5 வயது சிறுவர்கள் வடிவத்தில் இருந்தார்கள். பரமானந்தத்தில் அவர்கள் ஏழாவது வாயிலைக் கடக்கப் போகும்போது அங்கே இருந்த இரண்டு வாயில் காப்பாளர்கள் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். அவர்களே ஜயவிஜயர்கள். விரைந்து உள்ளே செல்லும் தறுவாயில் தம்மை யாரோ தடுத்து நிறுத்தியதைக் கண்டு அவர்கள் மேல் கோபம் கொண்டனர். மஹரிஷிகளுக்கு கோபம் வருவது என்னவென்று சிலர் கேட்கக் கூடும். ஆனால் பகவத் சேவையில் அல்லது பகவத் தரிசனத்திற்கு எவராவது தடை ஏற்படுத்தி னால் எவ்வளவு சாதுவாக இருந்தாலும் கோபம் வரும். சாதாரணமாக ஜீவனுக்கு தன் இந்திரிய போகங்களில் தடை செய்பவர்கள் மேல் கோபம் வரும். அதற்குக் காரணம் காமம். ஆனால் பகவத்சேவையில் தடை செய்பவர் மீது ஏற்படும் கோபத்திற்குக் காரணம் காதல் (பிரேமை). அதுவே பகவத் பிரேமை. பேதைமனம் கொண்ட இவர்கள் இங்கு இருப்பதற்குக் கொஞ்சமும்

தகுதி இல்லாதவர்கள். எனவே பூலோகத்தில் போய்ப் பிறப்பீர்களாக என ஜயவிஜயர்களுக்குச் சாபமிட்டார்கள்.

வைகுண்டத்திற்குள்ளே இருந்த விஷ்ணு மூர்த்தி தன் சேவகர்கள் செய்த தோஷத்தை உடனே தன்னுடைய திவ்விய திருஷ்டியில் அறிந்து கொண்டார். உடனே அந்த தேவாதிதேவனான பகவான் இலட்சுமி தேவியுடன் வெளியில் வந்தார். தாம் தரிசிக்க வேண்டும் என்று நினைத்து வந்த அந்த ஸ்வாமியே தானாக தங்கள் முன்னே வந்து தரிசனம் கொடுத்ததைக் கண்ட சனகர் முதலான மஹரிஷிகள் மிகவும் மனம் மகிழ்ந்தனர். அச்சமயத்தில் ஸ்வாமியின் சௌந்தர்யம் அவர்கள் கண்களுக்கு விருந்தாகப்பட்டது. விஷ்ணு பகவானின் அருள் பார்வை அவர்களுடைய இருதயத்தை மயக்கும் வண்ணம் இருந்தது. அவருடைய கழுத்தில் வைஜயந்தி மாலை அழகாக அசைந்து கொண்டிருந்தது. சியாமள வண்ணனான அந்த ஸ்வாமியின் இருதயத்தில் லட்சுமி தேவி வாசம் செய்வதைக் காணமுடிந்தது. அவருடைய திருமார்பின் மீது கௌதுப மணி காணப்பட்டது. ஸ்வாமியின் தரிசனத்தினால் ரிஷிகள் மனம் குளிர்ந்தனர். சனகர் முதலான ரிஷிகள் நால்வரும் தேவாதி தேவனாகிய இறைவனின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்கள். ஸ்வாமியின் திருப்பாதங்களின் மேல் இருந்த துளசி இலையின் வாசம் அவர் தம் மூக்கின் துவாரங்களில் நுழைந்த உடன் அவர்கள் பகவத் பிரேமையில் முழுவதுமாக மூழ்கிப்போனார்கள்.

சனகர் முதலான மஹரிஷிகள் பகவத் பிரேமையில் மெய்மறந்த நிலையில் இருப்பதைக் கண்டு ஸ்ரீமஹாவிஷ்ணு பிராமணர்களின் மகிமையைப் போற்றினார். தன் சேவகர்கள் செய்த தவறான செயலைக் கண்டித்தார். அவர்கள் செய்த தவறுக்காகத் தான் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதாகக் கூறினார். சாபத்தினால் அவர்கள் இந்த வைகுண்டத்தை விட்டு செல்ல வேண்டியிருந்தாலும், விரைவில் மீண்டும் வைகுண்டத்தை வந்து அடையும் வழியைக் காட்டும்படி அந்த தேவாதி தேவன் பிரார்த்தித்தார். ஸ்ரீமஹாவிஷ்ணுவின் வார்த்தைகள் சனகர் முதலான ரிஷிகளுக்கு மிகவும் சங்கடத்தை ஏற்படுத்தியது. தேவையில்லாமல் தாம் வைகுண்ட வாயில் காப்பாளர்களைச் சபித்து விட்டோமோ என்று நினைத்து வருந்தினர். அவர்கள் மன நிலையை அறிந்து கொண்ட தேவாதி தேவன் நடந்ததெல்லாம் தன்னுடைய சங்கல்பம் என்றும் அதற்குத் தாங்கள் வருத்தப்பட வேண்டியது இல்லை என்றும், விரைவிலேயே தன் சேவகர்கள் மீண்டும் வைகுண்டத்திற்கு வந்து விடுவார்கள் என்றும் கூறினார்.



சனகர் முதலான ரிஷிகள் கொடுத்த சாபத்தின் காரணமாக ஜயவிஜயர்கள் வைகுண்டத்தை விட்டு கீழே இறங்கி பூலோகத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அவர்கள் நேராக திதி கர்ப்பத்தில் பிரவேசித்தார்கள். வைகுண்டத்தில் சனகர் முதலான ரிஷிகள் ஸ்ரீமஹா விஷ்ணுவிற்கு பிரதட்சண நமஸ்காரங்கள் செய்தார்கள். அவர்களுடைய துதிகளையும் வணக்கங்களையும் ஏற்றுக் கொண்ட அந்த தேவாதி தேவன் வைகுண்டத்திற்குள்ளே சென்று விட்டார். சனகர் முதலான ரிஷிகள் பகவானின் தரிசனத்தைக் கண்ட மகிழ்ச்சியில் மீண்டும் தங்கள் இருப்பிடத்திற்கு வந்து சேர்ந்தனர். சாபத்தின் காரணமாக ஜயவிஜயர்கள் முதல் ஜென்மத்தில் இரண்யாட்சன் இரண்யகசிபுவாகவும், இரண்டாம் ஜென்மத்தில் இராவணன் கும்பகர்ணனாகவும், மூன்றாவது ஜென்மத்தில் சிசுபாலன் தந்தவக்ருரர்களாக பிறந்து ஸ்வாமியின் திருக்கரங்களாலேயே மரணம் அடைந்து மீண்டும் வைகுண்டத்திற்குச் சென்றனர். இவ்விதமாக மூன்று ஜென்மங்களிலும் அவர்கள் ஸ்வாமியுடன் விரோதம் பாராட்டி, அவரோடு போராடி அவருடைய திருக்கரங்களாலேயே மரணம் அடைந்து, அவர் தம் சாபம் தீர்ந்து போனதும் வைகுண்டம் சேர்ந்து மீண்டும் துவார பாலகர்களாகத் திகழ்ந்தார்கள்.

பாகவத கதை சாகரம் தொடரும்...



# ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி திருக்கோயில் –தரிகொண்டா

தெலுங்கு மூலம் : திரு. கோபிகிருஷ்ணா.
தமிழாக்கம் : திருமதி. எஸ். வைஷ்ணவி.

தரிகொண்டாவில் கண்டெடுக்கப்பட்ட ஸ்வாமி தரிகொண்டா சாளக்கிராம நரசிம்மர். ஒரு கதையின்படி, ராயதுர்க்கத்தில் வறட்சி நிலவியபோது பிரதிமிட்ட பாலசூயி என்ற குட்டையின் அருகில் பசுக்களை மேய்ப்பதற்காக வந்த ராமநாயன் என்ற பால்காரனின் கனவில் தோன்றி, தனக்கு ஆலயம் அமைக்க வேண்டும் என்று ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி கேட்டு ஆலயத்தை அமைத்துக் கொண்டார் என்று கூறுவர். அதற்கு முன்னரே அந்த பால்காரனின் மனைவி தயிர் கடையும் போது தயிர் குடத்திலிருந்து ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி சாளக்கிராம வடிவாகக் கிடைத்ததாகவும், அதையும் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகக் கூறுவர். ஸ்வாமி கனவில் கட்டளையிட்டபடி கிராமத்தினர் லக்ஷ்மி நரசிம்மஸ்வாமி ஆலயம் அமைத்து விக்ரகத்தை பூமியிலிருந்து தோண்டி எடுத்து பிரதிஷ்டை பண்ணினர். இவ்வாறாக தரிகொண்டாவில் ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி எழுந்தருளினார்.

வாயல்பாடுவிலிருந்து (வால்மீகிபுரம்) குர்ரம் கொண்டாவிற்குச் செல்லும் வழியில் சுமார் ஐந்தாறு கி.மீ. தூரத்தில் "தரிகொண்டா" உள்ளது. இக்கிராமத்தில் வெங்கமாம்பா பிறந்து அவ்வூர் பெயரையே வெளிச்சத்திற்கு கொண்டு வந்தார். இந்த ஆலயத்தில் மூன்று கல்வெட்டுகள் உள்ளன. முதலாவது கல்வெட்டு கி.பி. 1559, விஜய நகர சக்ரவர்த்தி சதா சிவதேவ மஹாராயருடையது. ராஜா அனுமதியுடனும் மஹாமண்டலேஸ்வர ராம ராஜதேவ மஹாராயர் ஒப்புதலுடன் மாவட்டத்தில் வெங்களராஜதேவ மஹாராய மங்களி அவர்கள் வரிகுறைப்பு குறித்து குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து இவ்வாலயம் கி.பி.1559 ஆண்டே இருந்ததை அறிய முடிகிறது.

இரண்டாவது கல்வெட்டு கி.பி.1846 ஆம் வருடத்தில் ஹோமத்திற்கான அறைகள், சமையல் அறைகள் மண்டபத்தை குருபாஸ்கராசார்யரின் சீடரான எர்ரப்பா கட்டினார். மூன்றாவது கல்வெட்டு கி.பி.1862 ஆம் வருடத்தைச் சார்ந்தது. ஸ்ரீ லக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமிக்கு கிருஷ்ணம செட்டி கல்யாண மண்டபத்தைக் கட்டினார்



என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மொத்தத்தில் ஆலயம் 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்பதை நாம் அறியலாம். இவை யாவும் இருந்தாலும் ஆலயத்தைக் கட்டியவர் பெயர் இல்லை. ஆலய அதிகாரி, கிராம அதிகாரி ராமதுர்கம் ராமநாயன் என்பதையும் அறியலாம்.

ராமதுர்க்கம் எங்கே ! தரிகொண்டா எங்கே! பசுக்களை மேய்க்க வந்து இங்கேயே நிரந்தரமாக தங்கி இருந்தது, ராமநாயனின் மனைவி தயிர் கடையும்போது அதில் லஷ்மி நரசிம்மர் சாளக்கிராமம் கிடைக்க, முதலாளிக்கு நரசிம்ம ஸ்வாமி கனவில் தரிசனமளித்து தன்னுடைய விக்ரகத்தை பூமியிலிருந்து தோண்டி எடுத்து ஆலயம் அமைத்து பிரதிஷ்டை செய்வது, கட்டிடம் அமைக்கும் போது தனநிதிகள் கிடைப்பது, ஆலயம் நிறைவடைவது, அதில் லக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி அருகில் சாளக்கிராமம் பிரதிஷ்டை செய்து, தரிகொண்டா லக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமியாக புகழ் அடைந்தது எல்லாம் எம்பெருமானின் திருலீலைகளே ஆகும்.

இக்கிராமத்தில் தரிகொண்டா வெங்கமாம்பா பிறந்தது மற்றொரு தெய்வ லீலை. ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி கருணையால் வெங்கமாம்பா மேன்மையான நிலையை அடைந்தாரோ அல்லது அவரால் ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி கீர்த்தி பெற்றாரோ என்று சொல்லவே முடியாது. இவ்விரு நிகழ்வும் நடக்க வாய்ப்பு உண்டானது. கானாலகிருஷ்ணய்யா மங்கம்மா தம்பதியருக்கு வெங்கமாம்பா பிறந்தார். பக்தியும் இவருடனே பிறந்தது எனலாம். பக்தி மார்க்கத்தில் இருந்த இவரை திருமணம் செய்வித்தால் இவருடைய பக்தி மார்க்கத்தை சிறிது மாற்றலாம் என்று எண்ணிய பெற்றோர் சித்தூர் நாரகுண்டா பாளையம் இன்ஜேடி வெங்கடாசலபதியை திருமணம் செய்து வைத்தனர். எந்நேரமும் அவருடைய மனது திருவேங்கடமுடையானிடமே இருந்தது. வெங்கமாம்பா இவ்விஷயத்தை தனது கணவரான வெங்கடாசலபதியிடம் தெரிவித்தார். விதி வசத்தினால் வெங்கடாசலபதி மரணமடைந்தாலும், வெங்கமாம்பா தன் கணவர் திருவேங்கடமுடையானே என்று கூறி தனது மங்கள சின்னங்களை அழிக்காமல் தன்னுடைய பணிகளைத் தொடர்ந்தார்.

மதனபள்ளியில் ரூபாவதாரம் சுப்ரமண்ய குருவிடம் கானாலகிருஷ்ணய்யா தன்னுடைய மகளின் வாழ்கையை சரிசெய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அவர் வெங்கமாம்பாவிற்கு மந்திரம், தந்திரம், யந்திரம், ரகஸ் யங்களையும், யோக சாஸ்திரங்களையும் போதித்து இவையெல்லாம் அடிதளமே.



ஆனால் பகவானிடம் உன்னை நீ அர்ப்பணித்துக் கொள்வதே சிறந்தது என்று அறிவுரையும் கூறினார். ஹயக்ரீவ நரசிம்ம மந்திரங்கள் வெங்கமாம்பாவிற்கு ஒரு நற்திசையைக் காட்டியது. காவியம் புனைவதற்கு வழிவகுத்தது. திருவேங்கடமுடையானைத் தேடி அலைந்து காட்டு வழி பாதையில் சென்றார். வழியில் மொகிலிபெட்டா ஆஞ்சநேய ஸ்வாமி ஆலயம் அருகில் சாதனைகள் புரிந்து, திருவேங்கடமுடையானின் கட்டளை யின்படி வேங்கடாத்ரி சென்று சேர்ந்தார். ஹாதிராம்ஜி மடத்தைச் சேர்ந்த ஆத்மராம்ஜி மஹந்த் வராஹ ஸ்வாமி ஆலயம் எதிரில் கல்தேர் அருகில் ஒரு ஓலை குடிசையை வெங்கமாம்பாவிற்கு இருப்பிடமாகக் கொடுத்தார். அக்குடிலில் வெகு நாட்கள் வெங்கமாம்பா நிவாசம் செய்யவில்லை.

கீகாரண்யத்தில் உள்ள தும்புரு தீர்த்தத்திற்கு புறப்பட்டுச் சென்றார். அங்கு ஓர் குகையில் (இன்றும் அவரின் பெயரில் வெங்கமாம்பா குகை என்று அழைக்கப்படுகிறது) ஒரு புஷ்கர காலம்(12 வருடங்கள்) தவம் புரிந்து “மஹாயோகினி”யாக திவ்ய சக்திகள் அடைந்து திருமலைக்கு திரும்பினார். தாள்ளபாக்கத்தினர் அவருடை திவ்ய தியானத்தை கவனித்து தங்களுடைய வீட்டிற்கருகிலேயே வெங்கமாம்பாவிற்கும் இடமளித்த

## STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT

## SAPTHAGIRI

(MONTHLY)
FORM IV
See Rule 8

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | TIRUPATI |
| 2. Periodicity of its Publication | : | Monthly |
| 3. Honorary Editor | : | **Sri. Anil Kumar Singhal,** I.A.S., Executive Officer, TTD |
| 4. Printer's Name | : | **Sri. R.V. Vijaya Kumar,** B.A., B.Ed. |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | Dy. E.O., (Publication & Press), T.T.D., Tirupati. |
| 5. Editor & Publisher's Name | : | **Dr. K. Radha Ramana,** M.A.,M.Phil., Ph.D. |
| Whether citizen of India | : | Yes |
| Address | : | Chief Editor, Sapthagiri T.T.D. Journal, Tirupati. |
| 6. Name and address of individuals who own the News paper and partners or share holders holding more than one percent of the Total Capital | } | Board of Trustees represented by the Executive Officer on behalf of T.T.D., Tirupati |

*I, K. Radha Ramana, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.*

TIRUPATI — **(Sd.) Dr. K. Radha Ramana**
Date : 28-2-2019 — *Signature of the Publisher*

னர். தரிகொண்டா வெங்கமாம்பா மடம் உருவானது. வராஹ ஸ்வாமி ஆலயத்திற்கு அருகில் அவருக்கு ஓர் பூந்தோட்டம் இருந்தது. இப்பொழுது அங்கு அவருடைய சமாதி உள்ளது. அவருக்கு வந்த தானங்கள் சுமார் 35. அவற்றின் உதவியால் நித்ய பூஜைகள், நரசிம்ம ஜெயந்தி மிகவும் சிறப்பாக நடத்தி னார். கவிதைகள், பாடல்கள், நாடகங்கள், முக்கிய மாக யக்ஷ கானத்தினால் ஸ்வாமியை பூஜிப்பதோடு அல்லாமல் பூஜைக்கு பூமாலைகள், ஆத்மார்த் தமான பூஜைகள் மற்றும் பலவிதமான நைவேத்தியங்கள் அளித்தும் பூஜைகளை செய்தும் ஸ்வாமியை மெய்மறக்கச் செய்தார். அதற்காகவே ஸ்வாமி அவருக்கு தனது ஏகாந்த சேவையில் முத்து ஆரத்தி கொடுக்கும் பாக்கியத்தை வழங்கினார். இன்றும் அவரு டைய வம்சத்தினர் முத்து ஆரத்தி (முத்யால ஹாரதி) கொடுத்து வருவதைக் காணலாம்.

அவருடைய படைப்புகளை எழுதி வைத்த “அஷ்ட கண்டகல” எனும் எட்டு பால்காரர்கள் அவரு டனே இருப்பர். அவர் படைப்புகள் ஓலைச் சுவடி களில் வடித்து தேசம் முழுவதும் பரவ வழிவகுத்த னர். அவருடைய படைப்புகள் 18ற்கும் குறையாமல் உள்ளன. ஒவ்வொரு படைப்பிலும் தரிகொண்டா லக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமியும், திருமலையப்ப ஸ்வாமி யும் ஒன்றே என்பது போன்று தோன்றும். அவருடைய மகிமைகளை எழுத்தினாலும் அளவிட முடியாத ஒன்றாகும்.

தரிகொண்டாவைச் சார்ந்த ஒரு வைஷ்ணவர் 1940 ஆம் ஆண்டில் வெங்கமாம்பாவின் விக்ரகத்தை தயார் செய்து ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி ஆலயத் தில் பிரதிஷ்டை செய்து புண்ணியரானார். அங்கே அவருக்கு தினமும் பூஜைகள் நடைபெறுகிறது. வெங்கமாம்பா பிறப்பு : சுமார் கி.பி.1730 மஹா சமாதி : கி.பி.1817. மூன்றடுக்கு ராஜகோபுரத்தோடு உயரமான பிரகாரங்களோடு உள்ள ஸ்ரீலக்ஷ்மி நர சிம்ம ஸ்வாமி ஆலயத்தில் ஒன்பது நாட்கள் பிரம் மோத்ஸவம் வைபவமாக நடைபெறும். இந்த ஆல யத்தின் பலி பீடத்தின் முன் நின்று யாராவது சத்தியம் செய்தால் அதை நீதிமன்றத்தில் கூட அனைவரும் ஏற்க வேண்டியதே. அத்தகைய மகிமை உடைய சத்தி யத்திற்கு பெயர் பெற்ற ஆலயமே இந்த ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி ஆலயம்.

## சிறுவர் பகுதி விடைகள்

1. விப்ர நாராயணர்.
2. அமலனாதி பிரான்.
3. வராக அவதாரம்.
4. பெரியவாச்சான்பிள்ளை.
5. திருவரங்கத்தமுதனார்.
6. ஸ்ரீராமானுஜர்.
7. திருமங்கையாழ்வார்.
8. ஹனுமன்.
9. ஆழ்வார் திருநகரி.
10. ராஜேந்திர சோழன்.

தொகுப்பு : திரு. கே. ரங்கநாதாச்சாரியார், காஞ்சிபுரம்.

## 2019, ஜனவரி 27, 28 தேதிகளில் தமிழ்நாடு, கன்னியாகுமரியில் தி.தி.தேவஸ்தானம் புதிதாகக் கட்டிய ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயத்தில் நடைபெற்ற விக்ரஹ பிரதிஷ்டை, கலச ஸ்தாபனம், மஹாகும்பாபிஷேக திருக்காட்சிகள்



யாக நிகழ்ச்சி



பூர்ணாஹுதி



புனித கலசத்துடன் தி.தி.தே. அர்ச்சக குழு, தி.தி.தே. செயலாட்சித் தலைவர்



கர்பாலய மஹாசம்ப்ரோக்ஷணம்



ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயத்திருக்காட்சி–கன்னியாகுமரி

## ஜனவரி 31, 2019 அன்று ஆந்திர மாநில தலைநகர் அமராவதியில் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி புதிய ஆலய நிர்மாண பூமி பூஜையின் ஒரு பகுதியாக பூகர்ஷண, பீஜாவாபன திருக்காட்சிகள்



வாஸ்து ஹோமம் முதலானவற்றை
நிர்வகிக்கின்ற ருத்விக்குகள்



எம்பெருமானின் புதிய ஆலய நிர்மாணத்தை முன்னிட்டு ஆ.மா.
முதல்வருக்கு, மக்களுக்கு மங்களாசாசனம் பண்ணும் தி.தி.தே.
பெரிய ஜீயர் ஸ்ரீஸ்ரீஸ்ரீ சடகோபராமானுஜ ஜீயர் ஸ்வாமிகள்




மஹாபூர்ணாஹுதி




உபய நாச்சிமார்களுடன் ஸ்ரீவேங்கடேஸ்வர
ஸ்வாமிக்கு நட்சத்திர ஹாரதி



சதுர்வேத பாராயணம்



மாண்புமிகு ஆ.மா. முதல்வர் திரு நாரா சந்திரபாபு நாயுடு
அவர்கள் நிர்வகிக்கின்ற நிலம் உழும் காட்சி (பூகர்ஷணம்)

**ஜனவரி 31, 2019 அன்று ஆந்திர மாநில தலைநகர் அமராவதியில்**
**ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி புதிய ஆலய நிர்மாண பூமி பூஜையின்**
**ஒரு பகுதியாக பூகர்ஷண, பீஜாவாபன திருக்காட்சிகள்**



உபய நாச்சிமார்களுடன் திருமலையப்ப ஸ்வாமிக்கு
ஸ்நபன திருமஞ்சனம்




ஸ்ரீநிவாச கல்யாணோத்ஸவம்





ஆலய நிர்மாண திட்டம் மற்றும் ஆலய மாதிரியை மாண்புமிகு ஆ.மா. முதல்வர்
திரு நாரா சந்திரபாபு நாயுடு அவர்களுக்கு விவரிக்கின்ற தி.தி.தே. செயலாட்சித்தலைவர்
திரு. அனில் குமார் சிங்ஹால், ஐ.ஏ.எஸ்.



மாண்புமிகு ஆ.மா. முதல்வர் திரு நாரா சந்திரபாபு நாயுடு
இடுகின்ற பீஜாவாபனம்



அதிக அளவில் பங்குபெற்ற பக்தகோடிகள்





ஜனவரி 21 அன்று தி.தி.தேவஸ்தானம் பெரிய ஜீயர் ஸ்ரீஸ்ரீஸ்ரீ சடகோபராமானுஜ ஜீயர் ஸ்வாமிகள் சார்பில்
திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி மூலமூர்த்திக்கு பட்டு வஸ்த்திரம், முத்துக்கவசம், சங்கு சக்கரம், கிரீடங்களை
தி.தி.தே. செயலாட்சித்தலைவருக்கு அளிக்கும் காட்சி





21-01-2019 அன்று திருமலையில் நடைபெற்ற ஸ்ரீராமகிருஷ்ண தீர்த்த முக்கோட்டி நிகழ்ச்சி





ஜனவரி 26 அன்று 70 வது குடியரசு தினத்தை முன்னிட்டு தி.தி.தே. நிர்வாகக்
கட்டிட வளாகத்தில் உள்ள விளையாட்டு மைதானத்தில் தேசியக் கொடியை
ஏற்றி வைத்து அணி வகுப்பு மரியாதையை ஏற்கும் தி.தி.தே. செயலாட்சித்
தலைவர் திரு. அனில் குமார் சிங்ஹால்,ஐ.ஏ.எஸ்., இந்நிகழ்ச்சியில் தி.தி.தே.
இணைச் செயலாட்சித் தலைவர் (திருப்பதி), கண்காணிப்பு மற்றும்
பாதுகாப்பு அதிகாரி திரு. கோபிநாத் ஜெட்டி, ஐ.பி.எஸ்.,
உயர் அதிகாரிகள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

# ஏழுமலைகளில் மஹாசிவராத்திரி உத்ஸவம்

தெலுங்கு மூலம் : திரு. ஜு. பாலசுப்ரமணியம்.
தமிழாக்கம் : திருமதி. பா. காயத்ரி.

ஈரேழுலகங்களும் பொறாமைக் கொள்ளும் அளவில் எழில் மற்றும் சிறப்பு மிகுந்ததாக நமது பூலோகம் அமைந்துள்ளது! இந்த பொறாமையின் முக்கிய காரணம்தான் என்ன? நமது பூலோகத்தில் அமைந்திருக்கும் இரு கல்ப விருக்ஷங்கள் தான் அதன் முக்கிய காரணம்! அதில் முதலாவது வா"சு" தேவர், இரண்டாவது வா"ம" தேவர். இவ்விரு விருக்ஷங்களும் போட்டியிட்டு பக்தர்களின் கோரிக்கைகளை நிறைவு செய்யும் தெய்வீக மரங்களாகத் திகழ்கின்றன. இவ்விரண்டிற்கும் "சு,ம" என்கின்ற எழுத்தில் தான் வித்தியாசமே தவிர அதன் குணங்களில் இல்லை. என்றென்றைக்கும் பக்தர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் விதமாக, இவ்வுலகம் முழுவதும் இம்மரங்கள் பரந்து விரிந்து இருக்கின்றன. மரங்கள் நிறைந்த இந்த ஏழுமலையின் மகிமைப் பற்றிக் கேட்கவா வேண்டும்!

## சேஷாசலத்தில் மஹாசிவராத்திரி :

நாகபூஷிதனான ஸ்ரீநிவாச பகவான் சேஷாசலத்தில் வாசுதேவ கல்ப விருக்ஷமாகத் திகழ்கிறார். அதே போன்று, கோயிலின் காவல் தெய்வமான வாமதேவர் இன்னொரு கல்ப விருக்ஷமாகத் திகழ்கிறார். வாமதேவர் வேறுயாருமல்ல. அந்த பரமசிவனே ஆவார். அவருக்கு தினசரி வழிபாடுகள் செய்வதோடு மட்டுமல்லாமல் மஹாசிவராத்திரியன்று பதினொரு வேத நாமங்கள் மற்றும் பாராயணத்தோடு கூடிய அபிஷேகமும் செய்யப்படுகிறது. இதில் எந்த ஐயமும் வேண்டாம்!

மஹாசிவராத்திரியன்று, காலை ஒன்பது மணியளவில் கோயில் அர்ச்சகர்களும், அதிகாரிகளும் ஸ்ரீவேங்கடேஸ்வர ஸ்வாமி ஆலயத்திலிருந்து மங்கள வாத்தியங்கள் முழங்கிட கோகர்ப (பாண்டவ) தீர்த்தத்தின் அருகே அமைந்திருக்கும் மகா ருத்ரரின் கோயிலுக்குச் சென்று அபிஷேகம் செய்து, நைவேத்தியம் படைப்பர். இது பக்தர்களுக்கு கண் கொள்ளா காட்சியாக அமைகிறது.

## ஆதிகால சேஷாசலத்தில் மஹாசிவராத்திரி உத்ஸவம் :

ஆதிதொட்டு சேஷாசலத்தில் வீற்றிருக்கும் எம்பெருமானை சிவன் ஆராதித்து வருவதாகக் கூறப்படுகிறது. அதாவது மலையின் கீழ் எழுந்தருளியுள்ள கபிலேஸ்வர ஸ்வாமியின் இஷ்ட தெய்வமாகத் திருமலையப்ப ஸ்வாமி திகழ்கிறார். பாதாள உலகத்தில் கபில முனி பூஜித்து வந்த லிங்கம் தானாக வளர்ந்து, பூலோகத்தில் சுயம்புவாக குகைக்குள் கபிலேஸ்வரராக வெளிப்பட்டார். சிவலிங்கத்தோடு போகவதி கங்கையும் வெளியே வந்தது. இதுவே கபில தீர்த்தமாக புகழ் பெற்றது. திருமலையிலிருந்து பாயும் பல்வேறு புனித தீர்த்தங்களின் சங்கமமாய் கருதப்படும் இந்த கபில தீர்த்தம் மனிதர்களின் பாவங்களைப் போக்கும் வல்லமை படைத்ததாகும். கோபாலகனாக மகாவிஷ்ணுவும், பசு வடிவத்



தில் பிரம்ம தேவரும் வந்து பால் சுரந்து அபிஷேகம் செய்த இக்கபிலேஸ்வர லிங்கத்தைதான், திருமலைக்கு வரும் பக்தர்கள் முதலில் தரிசிக்க வேண்டும் என்பது ஐதீகம். தி.தி.தேவஸ்தானத்தால் நிர்வகிக்கப்பட்டு வரும் இத் திருக்கோயிலில் தினசரி வழிபாடு, அபிஷேகம், நைவேத்தியம் என்று மட்டுமல்லாமல், மஹாசிவ ராத்திரி அன்று கோலாகலமாக பிரம்மோத்ஸவமும் நடத்தப்படுகிறது.

சிவராத்திரி அன்று இரவு வெள்ளி நந்தீஸ்வர வாகனத்தில் எழுந்தருளும் சிவபெருமானின் அழகையும், அடுத்த நாள் நடக்கும் தேவி காமாக்ஷி கபிலேஸ்வர ஸ்வாமியின் திருக்கல்யாண உத்ஸவத்தையும் வர்ணிக்க வார்த்தைகளே கிடையாது. ஸ்ரீபத்மாவதி ஸ்ரீநிவாசரின் திருக்கல்யாணம் ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமியின் முன்னிலையில் நடைபெற்றதாக வேங்கடாசல புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

**தென்கைலாயத்தில் மஹாசிவராத்திரி உத்ஸவம்:**

*தஸ்ய தக்ஷிணகைலாஸ நாமகம் ஸ்தாநமுத்தமம்*
*காளஹஸ்தீதி விக்யாதம் ஸிரோதேஸ: ப்ரகீர்தித:*

–வேங்கடாசல மஹாத்மியம் – பிரம்மாண்ட புராணம்.

தென் கைலாயம் என்று போற்றப்படும் ஸ்ரீகாளஹஸ்தி சேஷாசல மலையின் தலைப் பாகத்தில் அமைந்துள்ளது. பஞ்ச பூத ஸ்தலங்களில் ஒன்றான, வாயு ஸ்தலமாகிய இக்கோயிலில் உள்ள வாயு லிங்க வடிவினனான சிவபெருமான் ஸ்ரீ(சிலந்தி), காள (பாம்பு) மற்றும் ஹஸ்தி (யானை) முதலியவற்றின் பக்தியை ஏற்று அவைகளுக்கு மோட்சமளித்தார் என்பது ஐதீகம். எனவே சுயம்பு வடிவினனான எம்பெருமான் இவைகளின் நினைவாக "ஸ்ரீகாளஹஸ்தீஸ்வரர்" என்று போற்றப்படுகிறார். பார்வதி தேவி, பக்தர்களின் கோரிக்கையை பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாமல் அவர்களுக்கு ஞானத்தையும் அளிப்பதால் ஞானபிரசுனாம்பிகையாகப் போற்றப்படுகிறார். முன்னொரு காலத்தில், திண்ணன் என்னும் வேடுவன், எம்பெருமான் மீது கொண்ட அளவிலா பக்தியின் காரணமாக லிங்கத்திற்கு தனது வாயினுள் நீர் கொண்டு வந்து அபிஷேகம் செய்து, தான் வேட்டையாடிய மாமிசத்தையும் நைவேத்தியமாக சமர்ப்பித்தான். பகவான் அவனை சோதித்ததில், வேடுவன் தன் இரு கண்களையும் அகழ்ந்து இறைவனுக்குத் தந்து, இறைவன் அருளால் பக்த "கண்ணப்ப நாயனார்" என்று போற்றப்பட்டார்.

ஒரு முறை, சிவபெருமான், பார்வதி தேவியின் கூந்தலிலிருந்து தான் வாசம் வருகிறது என்ற வாதத்தை மறுத்த நக்கீரர் என்ற புலவருக்கு, கோபமடைந்து தொழுநோய் வர சபித்தார். குற்றத்தை உணர்ந்த நக்கீரர் சாபவிமோசனம் கோர, கைலாயத்திற்கு சென்றால் சாபவிமோசனம் பெறலாம் என்று அருளினார். பிறகு சுப்ரமணிய ஸ்வாமியின் ஆணையின்படி ஸ்ரீகாளஹஸ் திக்குச் சென்று சாபவிமோசனம் அடைந்தார். இக்கோயிலில் ராகு–கேது தோஷ நிவாரண பூஜை செய்ய, எம்பெருமானின் திருக்கல்யாண வைபவத்தைக் காண ஆயிரக்கணக்கில் பக்தர்கள் கூடுவர். மஹா சிவராத்திரி உத்ஸவத்தன்று திருமலைக் கோயில் சார்பாக, ஸ்ரீஞானபிரசுனாம்பிகை தேவி சமேத ஸ்ரீகாளஹஸ்தீஸ்வர ஸ்வாமிக்கு புது வஸ்திரங்கள் சமர்ப்பிக்கப்படும். வேங்கடாசல மஹாத்மியத்தில் இதனை குறித்து குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். இக்கோயில் திருமலையைக் காட்டிலும் பழமை வாய்ந்தது என்றும் கூறப்பட்டுள்ளது.

**பூகைலாயத்தில் மஹாசிவராத்திரி உத்ஸவம்:**

*"ப்ரஸித்த: புச்சதேஸோம் ஸ்ரீசைல இதி விச்ருத:*
*ஸ்ரீசைலஸ்ய ப்ரதேசே உஸ்மீந் நீலகண்டாச்ரமே*
*சுபே"*

–வேங்கடாசல மஹாத்மியம் – பிரம்மாண்ட புராணம்.


கோகர்ப தீர்த்தம்


கபில தீர்த்தம்


ஸ்ரீகாளஹஸ்தி

சுமார் 30 யோஜனை (300 மைல்) பரப்பளவில், ஆதி சேஷன் வடிவுடையதான சேஷாசல மலையின் தலைப் பகுதியில் ஸ்ரீவேங்கடேஸ்வரர் ஆலயமும், வால் பகுதியில் ஸ்ரீசைல மல்லிகார்ஜுனர் ஆலயமும் அமைந்துள்ளன. ஸ்ரீசைலத்தில் இருக்கும் மல்லிகார்ஜுன மஹாலிங்கம், பன்னிரெண்டு ஜோதிர் லிங்கங்களில் இரண்டாவதாகும். தனது பக்தையான பர்வதாவின் விருப்பத்திற்கேற்ப இங்கு ஸ்ரீபர்வதா என்ற பெயரில் பிரதிஷ்டையான சிவபெருமான், சந்திரமதி என்ற மற்றொரு பக்தையின் விருப்பத்தின்படி அவளை மல்லிகைப்பூ மாலை வடிவில் அணிந்ததால் ஸ்ரீகிரி மல்லிகார்ஜுனர் எனும் திருநாமத்தைப் பெற்றார். அதேபோன்று, சிவபிரானைத் தேடி பூலோகத்திற்கு வந்த பார்வதி தேவி, தேனீ வடிவெடுத்து அருணாசுரன் என்னும் அரக்கனை கொன்று, ஸ்ரீமல்லிகார்ஜுனரோடு ஒன்று கலந்தார்.

இவ்வாலயத்தில் தினசரி, வார சேவைகள், நவராத்திரி சிறப்பு பூஜைகள் மற்றும் மஹாசிவராத்திரி அன்று சிறப்பு வழிபாடு, திருவீதி உலா, சிறப்பு அபிஷேகமும், மஹாசிவராத்திரியன்று மஹாலிங்கம் உத்பவித்ததை முன்னிட்டி மூன்று மணி நேரத்திற்கு ஒரு முறை மஹந்யாசமும் நடைபெறுகிறது. பத்மஷாலி என்னும் இனத்தைச் சேர்ந்த பக்தர் மஹாசிவராத்திரி அன்று நள்ளிரவில் கர்பகிருஹ கோபுரத்தை "பாகா" என்னும் நீளமான துணியால் சுற்றி அலங்கரிப்பார். இப்பக்தர் நாளுக்கு ஒரு கஜம் என்ற கணக்கில் 365 கஜம் துணி நைவார். தி.தி.தே. சார்பில் ஸ்ரீபிரமராம்பிகை சமேத ஸ்ரீமல்லிகார்ஜுன ஸ்வாமிக்கு புது வஸ்திரங்கள் சமர்ப்பிக்கப்படுவது சாம்பிரதாயம்.

### நந்தி மண்டலத்தில் மஹாசிவராத்திரி உத்ஸவம் :

ஸ்ரீசைலத்திற்கருகே மஹாநந்தி என்னும் ஸ்தலம் அமைந்துள்ளது. முன்னொரு காலத்தில், நந்தி என்னும் பக்தர் தன் தவத்தால் பகவானை மகிழ்வித்து அத்தலம் நந்தி மண்டலம் என்னும் பெயரால் அழைக்கப்பட வேண்டும் மற்றும் எம்பெருமான் தனது பெயரால் எழுந்தருள வேண்டும் என்று வரம் கோர, சிவபெருமான் மஹா நந்தீஸ்வரராகவும், பார்வதி தேவி காமேஸ்வரியாகவும் இங்கு எழுந்தருளினர். இக்கோயிலைச் சுற்றி ஒன்பது நந்திகள் இருப்பதால் "நவ நந்தி" என்றும், "நந்தி மண்டலம்" என்றும் இத்தலம் அழைக்கப்படுகிறது. தினசரி சேவைகளிலும் மஹாசிவராத்திரி பிரம்மோத்ஸவத்தில் பங்கு பெறவும் ஆயிரக்கணக்கில் பக்தர் கூடுவர்.

### நாராயணவனத்தில் மஹாசிவராத்திரி உத்ஸவம் :

ஸ்ரீபத்மாவதிஸ்ரீநிவாசர் திருக்கல்யாணம் நடந்த இடமே நாராயணவனமாகும். ஆகாச ராஜாவின் தலை நகரான இத்தலம், "கோயில் நகரம்" எனவும் கூறலாம். இவ்விடத்தில் தான் ஸ்வாமி ஸ்ரீநிவாசர் சுமார் ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் மூன்று கோடி தேவர்களோடு வந்து ஆகாச ராஜாவின் மகளான ஸ்ரீபத்மாவதியை திருக்கல்யாணம் செய்ததின் நினைவாகவே இங்கு ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி கோயில் அமைக்கப்பட்டது.

ஸ்ரீசக்தி விநாயகர் கோயில், ஸ்ரீசம்பகவல்லி சமேத ஸ்ரீபரசரேஸ்வரர் கோயில், ஸ்ரீமரகதாம்பிகை சமேத ஸ்ரீஅகஸ்த்தீஸ்வரர் கோயில், ஸ்ரீகல்யாண வீரபத்ர ஸ்வாமி கோயில் மற்றும் புதுமணத் தம்பதியினரான ஸ்ரீநிவாசர் ஸ்ரீபத்மாவதி தாயருடன் மஞ்சள் உடையணிந்து தரிசித்த ஸ்ரீஅவநாக்ஷி அம்மன் கோயில் போன்ற பண்டையகால பெருமைகளோடு பொலிந்து நிற்கும் பல்வேறு ஆலயங்களும் உள்ளன.

தி.தி.தே.வின் நிர்வாகத்தின் கீழ் இவ்வனைத்து கோயில்களும் சிறப்பாக செயல்பட்டு, பக்தர்களின்


ஸ்ரீசைலம்


நாராயணவனம்


நந்தி மண்டலம்

கோரிக்கைகளை பூர்த்தி செய்யும் திவ்ய திருத்தலங்களாக விளங்குகின்றன. இங்குள்ள சிவாலயங்களில் மஹாசிவராத்திரி அன்று சிறப்பு வழிபாடும் நடைபெறும்.

## தொண்டவாடாவில் மஹாசிவராத்திரி உத்ஸவம் :

திருமலைக்கருகில் வடக்கு திசையில் சுவர்ணமுகி நதிக்கரையோரத்தில் ஸ்ரீஅகஸ்த்தேஸ்வர ஸ்வாமி கோயில் அமைந்துள்ளது. அகஸ்திய முனிவரால் ஸ்தாபிக்கப்பட்ட மகாசிவலிங்கத்தையுடைய இக்கோயில் "ருத்ரபாதாள முக்கோடி கோயில்" என்றும் அழைக்கப்படுகிறது. பார்வதி தேவி இங்கு பகவானுடன் ஆனந்தவல்லி என்னும் திருப்பெயருடன் காட்சியளிக்கிறார்.

புதுமணத் தம்பதியினரான ஸ்ரீபத்மாவதி–ஸ்ரீநிவாசர், திருமலையிலிருக்கும் ஆதி வராஹ ஸ்வாமி கோயிலுக்குச் செல்லும் வழியில், தொண்டவாடாவில், அகஸ்திய முனிவரை சந்திக்கிறார்கள். அவர்களை சேவிக்கும் போது அகஸ்தியரும் லோபாமுத்திரையும், "ஸ்வாமி ஸ்ரீநிவாசா! புதுமணத் தம்பதியினர் ஆறு மாத காலத்திற்கு கோயில் தரிசனம் செய்யக் கூடாது. ஆதலால் நீங்கள் இருவரும் இங்கேயே தங்க வேண்டும்" என்று வேண்டினார். அகஸ் திய முனிவரின் வேண்டுகோளுக்கு இணங்க இங்கு தங்கினார்.

எனவே இங்கு ஸ்ரீநிவாசமங்காபுரம் கல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி கோயிலும் அமைக்கப்பட்டது. தொண்டவாடாவில் இக்கோயிலின் அருகேதான் ஆனந்தவல்லி சமேத ஸ்ரீஅகஸ்த்தேஸ்வர கோயில் உள்ளது. இக்கோயில் ஆ.மா. அறநிலையத் துறையின் கீழ் செயல்படுகிறது. தினசரி வழிபாடுகள் மற்றும் அபிஷேகத்தைத் தவிர, கோலாகலமாகவும் விமரிசையாகவும் இங்கு மஹாசிவராத்திரி உத்ஸவம் நடத்தப்படுகிறது.

## தலைக்கோனையில் மஹாசிவராத்திரி உத்ஸவம் :

புகழ் பெற்ற தலைக்கோனை கோயில் சரியாக வேங்கடாத்ரி ஏழு மலைகளுக்குப் பின்னால் இயற்கை எழிலில் ஓர் அருவியருகே அமைந்துள்ளது. சித்தேஸ்வர ஸ்வாமியின் லிங்கத்திற்கும், சித்தேஸ்வரி தாயாருக்கும் தினசரி வழிபாடுகளும், மஹா சிவராத்திரியன்று அபிஷேகமும் சிறப்பாக நடத்தப்படுகிறது.

திருச்சானூர் ஸ்ரீபத்மாவதி கோயிலிலிருந்து சிறிது தூரத்தில் சுக முனிவரின் ஆஸ்ரமத்தில் அமைந்துள்ளது யோகி மல்லாவரம் கோயில். இங்குள்ள பராசரேஸ்வர ஸ்வாமி, வியாசரின் தாத்தா, அதாவது பராசர முனிவரால் ஸ்தாபிக்கப்பட்டார். இங்கு தினசரி வழிபாடுகளும், மஹா சிவராத்திரி அன்று மஹந்யாஸத்தோடு கூடிய சிறப்பு அபிஷேகமும் மிகவும் கோலாகலமாக நடத்தப்படும்.

இங்ஙனம், மஹாசிவராத்ரியன்று ஏழுமலையில் உள்ள அனைத்து சைவ கோயில்களிலும், "ஓம் நம சிவாய: ஹர ஹர மகாதேவ" என்று ஒலித்து கொண்டே இருக்கும். ஆதலின் வாசுதேவரும் வாமதேவருக்கு மிடையே ஒற்றுமையும் அதே சமயம் வேற்றுமையும் உண்டு.

அப்பய்யா தீக்ஷிதலு இதனை சரியாக வர்ணிக்கிறார். ஒருவர் வேங்கடரமணர் என்றால் மற்றொருவர் உமா ரமணர். ஒருவர் சேஷ சர்பத்தில் உறங்குகிறார் என்றால் மற்றொருவர் சர்பத்தை ஆபரணமாக கழுத்தில் அணிகிறார். ஒருவர் முராசுரனை கொன்றார்.

மற்றொருவர் திரிபுராசுரனைக் கொன்றார். ஒருவனுடைய பகைவன் பாணாசுரன் என்றால் மற்றொருவருடைய பகைவன் மன்மதன் ஆவான். எனவே சிறப்பான திவ்ய குணங்களையுடைய வாசுதேவருக்கும் வாமதேவருக்கும் நாம் வணக்கங்களையும் பக்தியையும் சமர்பிக்கலாம்.


தொண்டவாடா


தலைக்கோணை


யோகிமல்லாவரம்



# வளங்களை அள்ளித் தரும் வடகரை மகாலக்ஷ்மி!

திரு. பனையபுரம் அதியமான், சென்னை.

**மகாலஷ்மியின் தோற்றம் :**

அமுதம் தேடி தேவர்களும், அசுரர்களும் பாற் கடலைக் கடைந்தபோது, வெளிப்பட்டவள் லஷ்மி எனப் புராணம் கூறகிறது. அலைமகள், திருமகள், விஷ்ணு வின் துணை என லஷ்மி பலவிதப் பெயர்களில் அழைக் கப்படுகின்றார். செல்வம் அருளும் தெய்வமாக இவள் போற்றப்படுகின்றாள். லஷ்மி, அஷ்டலஷ்மி என எட்டு விதமாகவும் பதினாறு லஷ்மி என பதினாறு விதமாகவும் விளங்குகின்றாள். இதில் ஒரு வடிவமே மகாலஷ்மி. பத்மா, கமலா, பத்மப்பிரியா, ஸ்ரேயா என பலவிதப் பெயர்களும் லஷ்மிக்கு உள்ளது.

இந்தியாவில் மகாலஷ்மிக்கு, மகராஷ்டிரா, கேரளா, தமிழ்நாடு என பல்வேறு மாநிலங்களிலும் திருக் கோயில்கள் அமைந்திருந்தாலும், மும்பையில் அமைந் துள்ள மகாலஷ்மி கோயில் பிரசித்தி பெற்றதாக விளங்கு கிறது. மகாலஷ்மிக்கு, வரலஷ்மி விரதமே விழாவாக அமைந்துள்ளது. ஸ்ரீசூக்தம், அஷ்டலஷ்மி ஸ்தோத்திரம், லலிதா சகஸ்ரநாமம் ஆதியில் லஷ்மியின் துதிகளாகவும், மந்திரங்களாகவும் அமைந்துள்ளன.

தமிழ்நாட்டில் மகாலக்ஷ்மிக்கு புகழ் பெற்ற ஆலய மாக விளங்குவது சென்னை பெசண்ட் நகரில் அமைந் துள்ள அஷ்டலக்ஷ்மி ஆலயம். ஆனால் மிகப் பழமை யான ஆலயமாக வெளியுலகிற்கு தெரியாத ஆலயமாக விளங்கும் வடகரை மகாலக்ஷ்மி ஆலயம், காஞ்சிபுரம் ஐயங்கார் குளம் திருத்தலத்தில் அமைந்துள்ளது. இதன் பெருமையும், பாரம்பரியமும், பக்கத்து மாநிலமான கேரளவாழ் மக்களால் தற்போது தெரிய வந்துள்ளது. அவர்கள் தங்களின் குலதெய்வம் குறித்து பிரசன்னம் பார்த்தபோது, அதில் மகாலஷ்மியின் ஆதிகோயிலாக அமைந்த வடகரை மகாலஷ்மி திருக்கோயில் தெரிய வந்துள்ளது.

**தல வரலாறு :**

இலங்கையில் இராவண யுத்தத்தின் போது, இலட்சு மணன் மூர்ச்சையாகி வீழ்ந்தான். அவனைக் குணப் படுத்த எடுத்த ஆலோசனையின் பேரில், தெய்வீக சஞ் சீவி மலையை எடுத்துக் கொண்டு அனுமன் பயணமா னான். வழியில் ஐயங்கார்குளம் என்ற தலத்தில் சிறிது நேரம் இளைப்பாறி, மீண்டும் இலங்கை சென்றடைந் தான். இலட்சுமணனும் குணம் பெற்றான் என்பது இராமா யணம். இதில் தங்கி இளைப்பாறிய ஐயங்கார் குளத்தில் மலையின் சிறு பகுதி கீழே விழுந்தது. அதன் பயனால் இப்பகுதியில் மருத்துவ குணங்களும், அனுமனின் அருள் தன்மையும் கிடைத்தது. இதன் பெருமையால் கவரப்பட்ட விஜய நகர மன்னனின் முகவரான எச்சூர் லஷ்மி குமார தாதாச்சாரியார், அனுமன் மீது அளவற்ற பற்று கொண்டிருந்தார். அதன் பயனால், அனு மனுக் கென தனி ஆலயம் எழுப்பினார். அத்தோடு ஆலயத்தின் பின்புறம் 133 ஏக்கர் பரப்பளவில் ஏரி போன்ற மிகப் பெரிய திருக்குளம் உருவாக்கினார். இதன் வட கரையில் அமைந்த தலமே, வடகரை மகாலஷ்மி திருக் கோயில் ஆகும். இதன் அருகே கண்ணன், இராமாயணச் சிற்பங் கள் என நிறைந்து காணப்படுகின்றன. இத்திருக்குளத் தில் நீராடினால் நோய்கள் குணமாகும் என்பதும் நம்பிக் கையாக உள்ளது.

### ஐயங்கார் குளம் அனுமன் :

தமிழ்நாட்டில் அனுமனுக்கென தனிக்கோயில் இருப்பது அரிதானது. அதிலும் பிரம்மாண்டமாக அனுமனையே மூலவராகக் கொண்ட அனுமன் ஆலயம் இங்கே வெகு சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. அயோத்தியை நோக்கி காட்சி தரும் அனுமன் மிகவும் சக்தி மிக்கவராகவும், வரப்பிரசாதியாகவும் விளங்குகிறார்.

### வடகரை மகாலஷ்மியின் ஆலயம் :

ஐயங்கார் குளம், வடகரையில் மகாலஷ்மி ஆலயம் அமைந்துள்ளது. கரையின் உள் பகுதியில் மகாலஷ்மி வடிவம் உள்ளது. திருப்பணியின் போது கரை மீது புதிய மகாலஷ்மி ஆலயம் எழுப்பப்பட்டுள்ளது.

### ஆலய அமைப்பு :

ஆலயம் வடகரையில் மேற் புறத்தில் கிழக்கு முகமாய் அமைந்துள்ளது. இதில் புதிதாக வடிக்கப்பட்ட தாயார் மகாலஷ்மி பிரதானமாக நிறுவப்பட்டுள்ளது.

ஆலய நுழைவு வாயிலில் வேம்படி கருப்பண்ண சாமி, விநாயகர், வலம் வரும் போது சப்த கன்னியர்கள், ராகு, கேது சிலை வடிவங்கள் அமைந்துள்ளன. படியிறங்கினால், பழைய ஆலயத்தில் தாயார் மகாலஷ்மி ஏற்கனவே அமர்ந்துள்ள இடத்திலேயே அமர்ந்துள்ளார். தாயார் கஜலஷ்மியுடன் கூடிய கலை வடிவான பிரபையில் சங்கு, சக்கரம் தாங்கி, கிழக்கு முகமாய் காட்சியளிக்கின்றார்.

### விழாக்கள் :

சித்திரைப் பௌர்ணமி அன்று 108 சங்காபிஷேகம், ஆவணியில் கடைசி வெள்ளி பால்குடம் உற்சவம், மாதந்தோறும் கடைசி வெள்ளிக்கிழமையன்று அதிகாலை 5.00 மணிக்கு கோமாதா பூஜை நடைபெறும். பௌர்ணமி நாட்களில் மாலையில் பஜனைகளுடன் திருக்குளத்தையும், அனுமன் ஆலயத்தையும் சுற்றி திருவலம் நடைபெறும். திருமலை திருப்பதி ஆழ்வார் திவ்யப் பிரபந்தச் செயல் திட்டத்தின் கீழ், வைணவ சொற்பொழிவு ஆண்டுக்கு ஒரு முறை 3 நாட்கள் நடைபெறும்.

### தரிசன நேரம், நிர்வாகம் மற்றும் தொடர்புக்கு :

அதிகாலை 4.00 மணி முதல் முற்பகல் 11.00 மணி வரையிலும், மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரையிலும் ஆலய தரிசனம் செய்யலாம். ஸ்ரீதில்லை நாயகம் சுவாமிகள், அறங்காவலர், அருள்மிகு வடகரை ஸ்ரீமகாலஷ்மி திருக்கோயில், ஐயங்கார் குளம், காஞ்சிபுரம் மாவட்டம் 631 502. தொலைபேசி : 94446 61434.

### அமைவிடம் :

காஞ்சிபுரம் – கலவை வழித் தடத்தில், காஞ்சிபுரத்தில் இருந்து தென் மேற்கே 8 கி.மீ. தொலைவில், ஐயங்கார் குளம் என்ற ஊர் அமைந்துள்ளது. அங்குள்ள பழைமையான அனுமன் ஆலயத்தின் பின்புறம் மிகப் பெரிய திருக்குளம் அமைந்துள்ளது. அதன் வடக்கே, வடகரையில் மகாலஷ்மி திருக்கோயில் அமைந்துள்ளது. காஞ்சிபுரம் பேருந்து நிலையத்தில் இருந்து பஸ் வசதி மற்றும் ஷேர் ஆட்டோ வசதியும் உள்ளன.

### பூமிக்கு அடியில் சித்ரா பௌர்ணமி :

வடகரை மகாலஷ்மி கோயிலின் வடக்கே, சில அடிகள் தொலைவில் சிறப்பு மிக்க நடவாவிக் கிணறு அமைந்துள்ளது. இக்கிணறு 30 அடி அகலம், 80 அடி நீளம் கொண்டுள்ளது. கிணற்றுக்குள் செல்ல 21 படிகள் அமைந்துள்ளன. எப்பொழுதும் நீர் நிறைந்து காணப்படும் இக்கிணற்றில் சித்திரா பௌர்ணமியன்று, நீர் முழுவதும் வெளியேற்றப் பட்டு, புகழ் பெற்ற காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் ஸ்ரீதேவி பூதேவியோடு எழுந்தருள்வார். மறுநாள் ஐயங்கார் குளம் ராமர், லஷ்மணன், அனுமன் இறங்கி காட்சியளிப்பர். இது வேறெங்கும் இல்லாத அதிசய நிகழ்வாகும்.

### கேரள பக்தர்கள் :

பிரசன்னம் மூலமாக தங்கள் குலதெய்வத்தை அடையாளம் கண்டு கொண்ட கேரள மாநிலம், ஆலப்புழா மாவட்டம், சேத்தலா வட்டத்தில் உள்ள வல்லிபுரம் கிராமத்து மக்களும், அதைச் சுற்றியுள்ள மக்களும், மாதந்தோறும் இவ்வாலயம் வந்து, தரிசித்து செல்கின்றனர்.

நெல்லையும், காசுகளையும் மஞ்சள் நிறத்துணியில் மூட்டை கட்டியும், அத்துடன் குத்து விளக்கையும் காணிக்கையாகச் செலுத்துகின்றனர். அஷ்ட ஐஸ்வர்யங்கள் அள்ளித் தருபவள், வடகரை மகாலஷ்மி என கேரள பக்தர்கள் போற்றுகின்றனர்.

# திருவேங்கடவனின் தெப்போத்ஸவம்



திருமதி. டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி,
திருப்பதி.

*“விஷ்ணும் ஜிஷ்ணும் மஹாவிஷ்ணும்*
*ப்ரபவிஷ்ணும் மஹேஸ்வரம் ।*
*அனேகரூப தைத்யாந்தம் நமாமி புருஷோத்தமம் ॥”*

ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ர நாமத்தில் பீஷ்மாசாரியார் மேற்கண்ட சுலோகத்தில் குறிப்பிட்டிருப்பதைப் போல ஸ்ரீவைகுண்ட லோகத்தில் பரவாஸுதேவராக ஸ்ரீ,பூ,நீளா சமேதராய் வீற்றிருக்கும் ஸ்ரீமஹாவிஷ்ணு பக்த கோடிகளை ரக்ஷிப்பதற்காக இந்த பூலோகத்தில் எடுத்துள்ள அவதாரங்கள் எத்தனையோ? அவற்றுள் திரேதாயுகத்தில் தசரத மஹாராஜாவின் திருக்குமாரனாக அவதரித்த ஸ்ரீராமசந்திரன், துவாபர யுகத்தில் வசுதேவ ஸுதனாக அவதரித்து பின்பு நந்த கோப குமாரனாக வளர்ந்த ஸ்ரீகிருஷ்ண பரமாத்மா, இந்த கலியுகத்தில் நம்மையெல்லாம் கலிபுருஷனின் பிடியிலிருந்து கடைத்தேற்ற அர்ச்சாரூபியாய் இந்த திருமலையில் எழுந்தருளியிருக்கும் திருவேங்கடத்து எம்பெருமான் என மூன்றுயுக எம்பெருமான்களும் ஒரே ஸன்னிதியில் எழுந்தருளியிருப்பது நமது திருமலையில்தான். இந்த திருமலையில் திருவேங்கடமுடையானுக்கு நித்யோத்ஸவம், வாரோத்ஸவம், மாஸோத்ஸவம், பக்ஷோத்ஸவம், வருடாந்திர உற்சவம் என்று தினமுமே விசேஷந்தான். அவற்றுள் வருடத்திற்கொருமுறை புரட்டாசி மாதத்தில் நடைபெறும் பிரம்மோத்ஸவமும், மாசி மாதத்தில் நடைபெறும் தெப்போத்ஸவமும் மிகவும் விசேஷமானது என்று சொல்லப்படுகிறது.

தெப்போத்ஸவம் மாசி மாதம் சுக்லபக்ஷ ஏகாதசியில் தொடங்கி பௌர்ணமி சுபதினத்தில் முடிவடைகிறது. மொத்தம் ஐந்து நாட்கள். தெப்பம் என்றால் படகு என்று கூட சொல்லுவார்கள். அந்த கால ராஜாக்கள் தங்கள் ராணிமார்களுடன் அலங்கரிக்கப்பட்ட அன்னபக்ஷி போன்ற படகில், முழு நிலா வானில் பவனி வரும் வேளையில், அரண்மனைக்கு சமீபமாக உள்ள தடாகத்திலோ, ஆற்றிலோ படகுசவாரி செய்வார்களாம். அவர்களே இப்படி அனுபவிக்கும் போது, ஈரேழு புவனங்களையும் ஆளுகின்ற சக்கரவர்த்தி அல்லவா நமது திருவேங்கடமுடையான். ஆகவே அந்த எம்பெருமானுக்கும், அவரது உபய தேவிமார்களுக்கும் ஸ்வாமி புஷ்கரணியில் தெப்போத்ஸவம் காண்பது பொருத்தந்தானே. இந்த வருடம் இந்த தெப்போத்ஸவம் மார்ச் மாதம் 16ஆம் தேதி தொடங்கி, 20ஆம் தேதி பௌர்ணமியன்று முடிவடைகிறது. இனி இந்த தெப்போத்ஸவ விவரங்களைப் பார்ப்போம்.

**முதல் நாள் :** ரகுகுல நந்தனனாக ஸ்ரீஇராமச்சந்திர பிரபுவிற்கு. தசரத சக்கரவர்த்தியின் புத்ரனாக அவ தரித்து, மிதிலையில் சிவதனுசை வளைத்து ஜனக மகா ராஜனின் திருமகளான ஸ்ரீசீதா தேவியைக் கரம் பிடித்து, பித்ரு வாக்ய பரிபாலனத்திற்காக கானகம் சென்று இராவ ணாதிகளை ஸம்ஹாரம் பண்ணின சூர்ய வம்ச திலகரான ஸ்ரீராமபிரான் அருமை மனையாள் சீதாப் பிராட்டியுட னும், இளவல் லக்ஷ்மண பெருமானுடனும், சிறிய திருவடி பக்தனுமானுடன் தெப்போத்ஸவம் காணுகிறார். புஷ்பங்களாலும், அலங்கார விளக்குகளாலும் ஜொலிக் கும் தெப்பத்தில் பவனி வரும் ஸ்ரீகோதண்ட இராமனைத் தரிசிக்கும் பாக்யம் பக்தர்களுக்குக் கிடைக்கிறது. "ராம" என்கிற இரண்டெழுத்து மந்திரமே மதுரமானது.

*"ஸ்ரீராம ராம ராமேதி ரமே ராமே மனோரமே ।*
*ஸஹஸ்ர நாம தத்துல்யம் ராம ராம வராநநே ॥"*

இந்த ஸ்ரீராமச்சந்திர மூர்த்தி நமது திருமலைக்கு வந்ததில் ஒரு விசேஷம் உள்ளது. திருமலையின் முதல் ஆசார்ய புருஷரும், திருமலையானுக்குத் தீர்த்த கைங் கர்யம், மந்த்ர புஷ்ப கைங்கர்யம் செய்து வந்த மஹானு மான ஸ்ரீசைலபூர்ணர் என்கிற பெரிய திருமலை நம்பி தனது மருமானும், அபிமான சீடருமான ஸ்ரீபகவத் இராமா னுஜருக்கு, திருமலையின் அடிவாரத்திற்குச் சென்று தினமும் ஸ்ரீமத் இராமாயணத்தின், சரணாகதி தத்துவத் தின் இரஹஸ்யார்த்தங்களை உபதேசித்து வந்தார். அதைக் கேட்டுப் பூரித்துப் போன ஒரு பக்தர் அவருக்கு இந்த ஸ்ரீராம விக்ரகத்தைக் காணிக்கையாகத் தர, திருமலை நம்பி அத்துடன் ஸ்ரீசீதா, லக்ஷ்மண, ஆஞ்ச னேய விக்ரகங்களையும் சேர்த்து திருவேங்கடமுடையா னின் ஸன்னதிக்கு உள்ளே ஏளப்பண்ணினாராம். ஸ்ரீராம பிரானின் திருநக்ஷத்ரமான புனர்வஸு தினத்தன்றும், வருடாந்திர தெப்போத்ஸவத்தின் முதல் நாளும் ஸ்ரீராம பிரானுக்கு வீதி புறப்பாடு கண்டருளி, பின்பு தெப்பத்தில் ஏளப் பண்ணி பக்தர்களுக்கு அருள்பாலிக்கச் செய்வது வழக்கமாக நடந்து வருகிறது.

**இரண்டாம் நாள் :** *"கொண்டல் வண்ணனைக் கோவல னாய் வெண்ணெய் உண்ட வாயன் என் உள்ளம் கவர்ந் தானை"* என்று பாணர் பாசுரமிட்ட கண்ணபிரான் தேவகி யின் திருவயிற்றில் உதித்து, அன்றிரவே யமுனையைக் கடந்து ஆயர்பாடியில் யசோதை இளஞ்சிங்கமாக வளர்ந்து, கோப, கோபியருடன் மாடு, கன்று மேய்த்து, வெண்ணையுண்டு, மண்ணை உண்ட மாயன் கம்ஸனால் ஏவிவிடப்பட்ட அசுரர்களை மாய்த்து, பின்பு கம்சனை வதம் செய்து தனது பெற்றோர்களை சிறை மீட்ட கிருஷ் ணன், பூபாரம் தீர்க்க, பாரதப் போர் நடத்த, பாண்டவ இள வல் அர்ச்சுனனுக்குத் தேரோட்டி, அவனுக்கு மட்டுமின்றி லோகத்துக்கே கீதையை உபதேசித்த கீதாசார்யன், கையிலே வெண்ணையுடன், அருகில் ஸ்ரீருக்மணி பிராட்டியுடன் லீலாமானுடவிக்ரகமாக தெப்பத்தில் பவனி வந்து பக்தர்களின் கண்களுக்கு விருந்தளிக்கிறார்.

*"வஸுதேவ ஸுதம் தேவம் கம்ச சாணூர மர்த்தனம்।*
*தேவகீ பரமானந்தம் கிருஷ்ணம் வந்தே ஜகத்குரும் ॥"*

**மூன்றாம் நாள் :**

*"ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி*
*வழுவிலா அடிமை செய்ய வேண்டும் நாம்*
*தெழிகுரலருவித் திருவேங்கடத்து*
*எழில்கொள் சோதி எந்தை தந்தை தந்தைக்கே"*

என்று நம்மாழ்வார் பாசுரமிட்ட திருவேங்கடமுடை யான் உபய நாச்சிமார்களோடு சர்வாபரண பூஷிதனாய் தீபகாந்தியால் அலங்கரிக்கப்பட்ட தெப்பத்தில் பவனி வருகிறார். பக்தர்களின் "கோவிந்தா! கோவிந்தா!!" என் கிற ஆரவாரம் திருமலையெங்கும் எதிரொலிக்கிறது. அந்த கோவிந்தன் கலியுக வரதனாக, மலையப்ப ஸ்வாமி யாக, ஸ்ரீநிவாஸப்பெருமானின் உற்சவ மூர்த்தியாக, ஸ்ரீதேவி, பூமிதேவித் தாயார்களுடன் ஸ்வாமி புஷ்கரணி யில் திவ்ய அலங்கார ஸ்வரூபனாக தெப்போத்ஸவம் காணுகிறார்.

ஒவ்வொரு நாளும் மூன்று சுற்றுகள். முதல் சுற்றின் போது வேதப் பிரியனான எம்பெருமானுக்கு வேத பண்டி தர்களின் வேத பாராயணம். அடுத்த சுற்றில் திருவேங்கட முடையானைக் கருப்பொருளாகக் கொண்டு பக்தி கீர்த்த னைகளை புனைந்த மஹாகவி அன்னமாசார்யரின் கீர்த்த னைகள், மூன்றாவது சுற்றில் மேள, தாளத்தோடு மங்கள வாத்யம். இதில் திருமலை நாயகனான திருவேங்கடத்து எம்பெருமானுக்கு மட்டும் மூன்றாம் நாள் மூன்று சுற்று கள், நான்காம் நாள் ஐந்து சுற்றுகள், கடைசி நாள் ஏழு சுற்றுகளாக தெப்போத்ஸவம் நடைபெறுவது சம்ப்ரதா யமாக இருந்து வருகிறது. ஒவ்வொரு நாள் முடிவிலும், தீக்கண்களின் திருஷ்டி அனைத்தும் காற்றிலே கற்பூரம் போல கரைய, கற்பூர மங்கள ஹாரத்தி காட்டப்பட்டு தெப்போத்ஸவம் நிறைவுக்கு வருகிறது.

*"ஸ்ரீவைகுண்ட விரக்தாய ஸ்வாமி புஷ்கரிணி தடே।*
*ரமயா ரமமாணாய வேங்கடேசாய மங்களம் ॥"*

– ஸ்ரீவெங்கடேச மங்களம்

ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டம் நாகுலாபுரத்தில் ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி ஆலயம் அமைந்துள்ளது. இது திருப்பதியிலிருந்து 70 கி.மீ. தூரத்திலும், சென்னையிலிருந்து 90 கி.மீ. தூரத்திலும் உள்ளது. இங்கு ஸ்வாமி பத்து அவதாரங்களில் முதன்மையான மச்ச அவதார வடிவில் கொலுவீற்றிருக்கிறார். இவ்வாலயம் விஜய நகர பேரரச ரான ஸ்ரீகிருஷ்ண தேவராயர் தன் தாயாரான நாகுலா தேவியின் நினைவாக கட்டியதாகக் கூறப்படுகிறது. அதற்கு முன்னர் இவ்வூர் ஹரிகந்த புரம் என்று அழைக்கப்பட்டது. பின்னர் நாகுலாம்பாபுரம் என ஸ்ரீகிருஷ்ணதேவராயர் தம் தாயாரின் நினைவாகப் பெயர் சூட்டினார்.

இக்கோயில் விஜய நகர கட்டிடக்கலை பாணியில் அமைந்துள்ளது. வேத நாராயண ஸ்வாமி மேற்கு முகமாக எழுந்தருளியுள்ளார். வேதங்கள் இல்லாது இவ்வுலகம் இயங்காது என்பதற்காக எம்பெருமான் மச்ச அவதாரத்தில் மீன் வடிவில் ஆழ்கடலின் அடியில் சென்று வேதங்களை தன் வசப்படுத்தியிருந்த சோமுகாசுரனுடன் போரிட்டு நான்கு வேதங்களையும் மீட்டு படைப்பு கடவுளான பிரம்மாவிடம் பத்திரமாக கொடுத்தார். அதனால் அவர் ஸ்ரீவேத நாராயண ஸ்வாமியாக புகழும் பெற்றார். இவ்வாறு வேதங்களை மீட்டு மிகவும் குளிர்ச்சியாக இருந்த ஸ்ரீமந்நாராயணனுக்கு சிறிதளவு வெப்பத்தை அளிக்கும் நோக்கத்துடன் சூரிய தேவன், ஸ்ரீமந்நாராயணனின் திருப்பாதத்திலிருந்து கிரீடம் வரை தன் ஒளிக்கதிர் படும்படிச் செய்தார். இந்நிகழ்ச்சியின் சிறப்பினை இன்றும் நாகுலாபுரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி திருக்கோயிலில் காணலாம்.



நாகுலாபுரத்தில் மச்சாவதார வடிவில் எம்பெருமான் எழுந்தருளியுள்ளார். இவ்வாலயம் பரந்து விரிந்த அளவில் ராஜகோபுரம் மற்றும் பெரிய பிராகாரத்துடன் அமைந்துள்ளது. திருமலை திருப்பதி தேவஸ்தான நிர்வாகத்தின் கீழ் இவ்வாலயம் இருக்கிறது. இங்கு ஒவ்வொரு வருடமும் பங்குனி மாதம் சுக்ல பக்ஷ துவாதசி, திரியோதசி மற்றும் சதுர்தசி நாட்களில் சூரிய பூஜை மிகவும் விமரிசையாக நடைபெறுகிறது.

சூரிய ஒளிக்கதிரானது மாலையில் சூரியன் மறையும் நேரத்திற்கு முன்னர் மேற்கு முகமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவேத நாராயண ஸ்வாமியின் மீது படும் நிகழ்வையே சூரிய பூஜையாகக் கொண்டாடப்படுகிறது. இந்த சூரிய ஒளிக்கதிர்கள் கோபுரத்தின் மேலிருந்தோ அல்லது ஏதாவது ஒரு நுழைவு வழியாகவோ வருவது இல்லை. இக்கதிர்கள் மேற்கில் சூரியன் மறையும் போது கோபுர நுழைவாயிலின் வாயிலாக வந்து இவ்வாலயத்தின் 600 மீட்டர் தூரத்தில் கருவறையில் கொலு வீற்றிருக்கும் ஸ்ரீவேத நாராயண ஸ்வாமியின் மீது படுவது சிறப்பான ஒன்றாகும். முதல் நாள் சூரிய ஒளிக்கதிர்கள் ஸ்வாமியின் திருப்பாதங்களிலும், இரண்டாம் நாள் ஸ்வாமியின் நாபிப்பகுதியிலும்,

# ஸ்ரீவேதநாராயண ஸ்வாமிக்கு சூரியனின் பூஜை

**செல்வன். சி. வாசுதேவா**
எட்டாம் வகுப்பு,
த/பெ. சி.சேஷகிரி,
எண்-46, ஆர்.என், மாடா வீதி, திருப்பதி




மூன்றாம் நாள் ஸ்வாமியின் நெற்றியின் மீதும் (கீரிடம்) படும். ஒவ்வொரு ஆண்டும் இந்த மூன்று நாட்கள் மட்டுமே சூரிய ஒளிக்கதிர்கள் ஸ்வாமி மீது விழும். இவ்வாறு நிகழ்வதை சூரிய தேவன் ஸ்வாமியை தன் ஒளிக்கதிர்களின் வாயிலாக வணங்குவதாக எண்ணத் தோன்றுகிறது. எனவே இதனை சூரிய பூஜை என்றும் கூறுவர். இந்நிகழ்ச்சியை திருமலை திருப்பதி தேவஸ்தானம் ஐந்து நாட்கள் அடங்கிய நிகழ்ச்சியாக சிறப்பாகக் கொண்டாடுகிறது. அன்று சிறப்பு கலை நிகழ்ச்சிகள், கச்சேரிகள் நடைபெறுவதும் வழக்கம். அன்றைய நாட்களில் சூரிய பூஜை தரிசனம் மாலை 5.30 மணி முதல் 6.30 மணி வரை நடைபெறும். அதனை தொடர்ந்து உபய நாச்சிமார்களுடன் ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி "திருவீதி உத்ஸவம்" நடைபெறும். அந்நிகழ்ச்சிக்கு அடுத்து ஸ்வாமிக்கு "தெப்போத்ஸவம்" மிகவும் விமரிசையாக நடைபெறும். இந்த தெப்போத்ஸவம் பக்தர்களின் கண்களுக்கு குளுமையான விருந்தாக அமையும். முதல் நாள் ஸ்வாமி "ஸ்ரீராமர்" ஆக எழுந்தருள்வார். 2ம் நாள் முத்துப்பந்தல் வாகனத்திலும், 3ம் நாள் சேஷ வாகனத்திலும் எழுந்தருளி பக்தர்களின் கண்களுக்கு விருந்தாகிறார். நாமும் இந்த சூரிய பூஜையில் கலந்து கொண்டு எம் பெருமானின் அருளைப் பெறுவோம்.

---

**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி**

**ஸப்தகிரி சந்தாதாரர்களுக்கு விண்ணப்பம்**

- "ஸப்தகிரி" மாத இதழ் தொடர்பான ஆலோசனைகள்/அறிவுரைகள்/புகார்களை sapthagiri_helpdesk@tirumala.org வாயிலாக தெரியப்படுத்தவும்.
- ஸப்தகிரி சந்தாதாரர்கள் தயவு செய்து முகவரியை முறைபடுத்துவதன் பொருட்டு **0877-2264543** தொலைபேசி எண்ணிற்கு தங்கள் முழு முகவரி, அஞ்சல் எண், செல்போன் எண்ணை அலுவலக பணி நாட்களில் (காலை 10:30 மணி முதல் மாலை 5:00 மணிக்குள்) மீண்டும் ஒரு முறை தெரியப்படுத்தவும்.
- மேற்குறிப்பிட்ட தொலைபேசி எண் வாயிலாக மட்டுமின்றி sapthagiri_helpdesk@tirumala.org க்கு இமெயில் அனுப்புவதன் வாயிலாகவும் தெரிவிக்கலாம்.
- ஆன்லைன் சந்தாதாரர்கள் தங்களுடைய முழு முகவரியை தி.தி.தே. இணையதளத்தின் வாயிலாக கட்டாயம் தெரியப்படுத்தவும்.

–பிரதான ஆசிரியர்

---




தும்புருவர் ஒருமுறை மானிடரான ஒரு சக்ரவர்த்தியைப் போற்றிப்பாடி, அபூர்வமான வீணையைப் பரிசாகப் பெற்றார். அதனால் சினம் கொண்ட நாரதர் அவரை சபித்தார். அதனால் தும்புருவர் வேங்கடாத்ரியில் உள்ள அருவியின் அருகில் வந்து, "வேங்கடேஸோ மாம் ரக்ஷது" என்று ஒரு வருட காலம் தவம் புரிந்து வேங்கடவனை நேரில் தரிசித்த தும்புருவர், அந்த தீர்த்தத்தை தன் பெயரிலேயே அழைக்க வேண்டுமென வரம் கோரினார் என்று பிரம்மோத்தர காண்டம் குறிப்பிடுகிறது. திருமலை ஆலயத்திலிருந்து சுமார் 7.5 மைல் தூரத்தில் இருக்கும் தும்புரு அருவியின் முகப்பு வாயிலில் தும்புருவரின் விக்ரகத்தைக் காணலாம். தும்புருவின் வீணையே அருவியானதால் இது தும்புரு தீர்த்தமானது.

தீர்த்தமுக்கோட்டி : பங்குனி மாதம் உத்திர நட்சத்திர பௌர்ணமி (20-03-2019)

தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்

உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.

**நம்மாழ்வார் :**

நம்மாழ்வார் வைகாசி மாதம் விசாக நக்ஷத்ரத்தில் ஆழ்வார் திருநகரியில் அவதரித்தவர். இவர் அருளிய பிரபந்தங்கள் – திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய் மொழி.

*திருக்குருகைப் பெருமாள்தன் திருத்தாள்கள் வாழியே*
*திருவான திருமுகத்துச் செவ்வி என்றும் வாழியே*
*இருக்குமொழி என்னெஞ்சில் தேக்கினான் வாழியே*
*எந்தை எதிராசர்க்கு இறைவனார் வாழியே*
*கருக்குழியில் புகாவண்ணம் காத்தருள்வோன் வாழியே*
*காசினியில் ஆரியனாய்க் காட்டினான் வாழியே*
*வருத்தமற வந்து என்னை வாழ்வித்தான் வாழியே*
*மதுரகவி தம்பிரான் வாழி வாழி வாழியே.*

–மணவாள மாமுனிகள்.

(பதவுரை) திருக்குருகைப் பெருமாள்தன் – திருக்குருகூரில் எழுந்தருளியுள்ள பெருமாளான நம்மாழ்வார், திருத்தாள்கள் – அழகிய திருவடிகள், வாழியே – எப்போதும் வாழ வேணும், திருவான – அழகான, திருமுகத்து – திருமுகத்தின், செவ்வி – புதுமை, என்றும் வாழியே – எப்போதும் வாழ வேண்டும், இருக்குமொழி – ருக் வேதப் பொருளான திருவிருத்தம், என் நெஞ்சில் – என்னுடைய (மாமுனிகளுடைய) மனத்தில், தேக்கினான் – நிலைபெறச் செய்தவன். எந்தை – எங்களுக்கு தந்தையராய், எதிராசர்க்கு – யதிகளுக்கு தலைவரான இராமாநுசருக்கு, இறைவனார் – தலைவனானவர். கருக்குழியில் – பிறவியாகிய குழியில், புகா வண்ணம் – செல்லா வண்ணம், காத்தருள்வோன் – காப்பவன். காசினியில் – பூமியில், ஆரியனாய் – ஆசார்யனாய், காட்டினான் – பிரசித்தி பெற்றவன். வருத்தமற – துன்பமின்றி, வந்து என்னை (மாமுனிகளை), வாழ்வித்தான் – வாழும்படி செய்தவர். மதுரகவி தம்பிரான் – மதுரகவிக்கு உதவி செய்த தலைவரான நம்மாழ்வார், வாழி, வாழி வாழியே – பல்லாண்டு வாழ வேணும்.

(சிறப்புரை) (திருக்குருகை) – பாண்டிய நாட்டில் தாமிரபரணி என்ற பொருனையாற்றங் கரையில் நம்மாழ்வாரால் பாடப்பெற்ற திவ்ய தேசங்களில் ஒன்று திருக்குருகூராகும். இந் நாட்டைத் தலைநகராகக் கொண்டு குருகன் என்ற அரசன் நீதி தவறாமல் ஆண்டு வந்ததால் திருநகரி, திருக்குருகூர் என்று அழைக்கப் பட்டது. திருக்குருகை – பிரமன் தவம் செய்து எம்பெருமானை வேண்ட தாமிரபரணி தென் கரையிலுள்ள ஆதி க்ஷேத்ரத்தைக் காட்டிக் கொடுத்து *''குரு க அத்ர மதர்ச்சனம்''* என்கிற படியே *''ஆதிநாதனான எனக்கு இங்கு அர்ச்சனையைச் செய்''* என்று நாராயணன் அருளியதால் பிரமனும் பெருமானை நோக்கி



''குரு க அத்ர மதச்சனம்'' என்கிறபடியே தங்களுக்கு தர்சனம் கொடுக்க அந்த ஆதி க்ஷேத்ரத்துக்கு குருகாபுரி என்ற மற்றொரு பெயர் இருக்க விரும்பினான். எம்பெருமானும் இசைந்ததால் அது குருகையாயிற்று. குருகராஜன் தலைநக ராகக் கொண்டே திருநகரி குருகா புரி என்று அழைக்கப்பட்டது. "குருகு" என்ற தமிழ்ச் சொல்லுக்கு நாரை, குருக்கத்தி மலர், சங்கு என்று பல பொருள்கள் உண்டு. சங்கு வடிவம் கொண்ட சங்க முனிவர் பேறு பெற்ற தலமாதலால் இத் தலம் குருகூர் எனப் பெயர் பெற்றதாகக் கூறுவர்.

(திருக்குருகைப்பெருமாள்) – ஆழ் வார் திருநகரியில் கோயிலில் நடக்கும் அரையர் சேவையில் தொன்று தொட்டு நம்மாழ்வாரை "திருமுலை உண்ணா மலே திருப்புளியில் வாழும் பெரு மாளே" என்று அழைப்பதனால் "திருக் குருகைப் பெருமாள்" என்று சொன்ன படி. பார்க்கவ புராணத்தில் குருகாபுரி மஹாத்ம்யத்தில் ''தத்தாத்ரேய க்ருத யுகே, த்ரேதாயாம் ரகுநந்தன: துவாபரே வாஸுதேவஸ்து கலௌ தேவ: பராங்குச:'' என்று அருளியதற்கு ஏற்ப இந்தக் கலி யுகத்தில் பெருமாள் நம்மாழ்வார் என்றபடி.

(திருத்தாள்கள்) – அழகிய திருவடி கள். ஆளவந்தார் தாம் அருளிய ஸ்தோத்ர ரத்னத்தில் "மாதா பிதா..." என்ற ச்லோகத்தில் நம்மாழ்வாருடைய திருவடிகளைத் தமக்கு எல்லாமாகத் துதித்து அத்திருவடிகளையே தலை யால் வணங்குவதாகக் கூறுவர். ஆளவந் தாருடைய குமாரரான சொட்டை நம்பி கள் நம்மாழ்வார் விஷயமான தனியனில் ''தனத்தாலும் ஏதும் குறைவிலேன் எந்தை சடகோபன் பாதங்கள் யாமுடைய பற்று'' என்று பணிப்பர். பராங்குச அஷ்டகத்தில் ''யத் வா சரண்யம் அசரண்ய ஜநஸ்ய புண்யம்'' என்று ஸர்வலோக சரண்யனான எம்பெருமானாலும் கைவிடப்பட்டவர்களுக்கு ஆழ்வார் திருவடிகளே தஞ்சம் என்கிறார். திருக்குருகைப் பெருமாளான நம்மாழ்வார் திருவடி களானது ''மாறன் பதம் பணிக என் சென்னி வாழ்த்திடுக என்னுடைய வாய்'' என்று திருவாய்மொழி நூற்றந்தாதியில் (10) அருளியபடியே ''திருக்குருகைப் பெருமாள் தன் திருதாள்கள் வாழியே என்று என் வாக்கானது மங்களாசாசனம் பண்ணியிடுக'' என்று பிள்ளை லோகம் சீயர் மாமுனிகள் அருளிய இந்த தொடரைக்காட்டி அவர் மனமுணர்ந்து அருளியது காண்க. மேலும் ''மாறன் தாள் உள்ளினர்க்கு தீங்கை அறுக் கும்'' என்று நூற்றந்தாதியில் அருளியபடியே ''தன்னை மனத்தாலே நினைப்பவர்களுக்குத் தடைகளைத் தானே ஒழித்திடும்'' என்று திருத் தாளின் பெருமை சொன்னது காண்க. இங்ஙனே திருவாய்மொழி நூற்றந்தாதியில் பல பாசுரங்களில் திருத்தாள் பெருமை சொல்லப் பட்டுள்ளது. மாமுனிகள் அருளிய ஆர்த்திப் பிரபந்தத்தில் (10) சட கோபர் தேமலர்த் தாட்கே ஏய்ந்தினிய பாதுகமாம் எந்தை இராமாநுசன் என்பர். அதாவது ஆழ்வார் திருவடிகளுக்கு மிகவும் அந்தரங்கரான ஆகாரத்தைக் குறித்து இனிய பாதுகையாக இராமாநுசன் இருப்பதாகக் கூறுவர். அத்தகைய திருத்தாள்களை வாழ்த்த வேண்டும்.

(திருவான முகம்) – அழகான முகம் என்றபடி. மாமுனிகளின் திருப் பேரரான ஜீயர் நாயனார் அருளிய நக்ஷத்ரமாலிகையில் "ஜந்மத்வம்..." என்ற ச்லோகத்தில் கூறியபடியே ஆழ்வாருடைய திருமுகமானது

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் – 31க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | ரு | 2 ம | ழி | சை | யா | ழ் | வா | ர் | | 3 ஆ | 4 தி |
| ரு | ர் | ங் | 5 அ | ர் | ஜு | ன | ன் | ய | 6 ஜெ | தி | ரு |
| க் | ட | க | | ம் | ர | தா | வ | யா | ஸ் | த் | 7 ம |
| கோ | ட் | ள | ரை | தி | த் | 8 சி | தே | | ம் | ய | லை |
| வ | ப | கி | க | ம் | 9 ரா | | சு | ன் | ய | ஹி | டி |
| லூ | ன் | 10 ரி | க் | கி | மீ | ல் | 11 வா | க | ஷ் | ரு | கு |
| ர் | ரா | ர் | 12 தி | ரு | ப் | பா | வை | மு | பா | த | ங் |
| தி | பி | ம | ந | 13 சு | ந் | த | ர | ன் | 14 ஸ்ரீ | ய | று |
| ப | ப் | ரா | தை | 15 நா | ரா | ய | ண | 16 நா | ம | ம் | கு |
| ப் | த | ல | 17 ம | ண் | ம | ட | ந் | தை | | | க் |
| ரு | 18 வே | 19 ப | ர் | யா | தா | தி | வ | மா | த் | 20 ப | ரு |
| 21 தி | பி | ம் | 22 ந | ர் | யூ | டி | ட் | கோ | க் | ரு | 23 தி |

அழகிய உதடுகளை உடையதும், புன்முறுவல் பொருந்தியதும் அருளாகிய அமுத தாரையைப் பெருக் குவதும், வில் போலே புருவத்தை உடையதும், கபோல ஸௌபாக்யம் உடையதுமாகும். சேவிப்பவர்களுக்கு மாறி மாறிப் பல பிறப்பும் பிறக்கும் நிலையைப் போக்குவதாகும். வாணுதல் – அழகான நெற்றியை உடையவள் என்று தாய்ப்பாசுரத்தில் உரைப்பர். "செல்வி" என்று பாடமாகும்போது – இலக்குமி, தலைவி, புதல்வி என்று பல பொருள்கள். திருவாய்மொழியில் "கங்குலும் பகலும்" (7.2) பதிகத்தில் "கொழுந்து" என்ற பாசுரத்தின் முடிவில் *''என் செய்கேன் என் திருமகட்கே''* என்று தாய்ப் பாசுரமாக உரைப்பர். அதாவது *''என்னுடைய லக்ஷ்மீ ஸமானையான இவளுக்கு''* (பராங்குச நாயகிக்கு) என்று வாதிகேசரி உரை. நம்பிள்ளையும் *''ஸாக்ஷாத் லக்ஷ்மியோடு ஒக்கச் சொல்ல லாமாகாதே இவளை''* என்பர். மேலும் ஆசார்ய இருதயத்தில் *''இரானெனில் .... பெரு மகளோடே''* என்ற சூத்ரத்தில் (125) *''அகலகில்லா முற்றுவமை பெருமகளோடே''* என்பதற்கு ஏற்ப ஆழ்வாருக்கு எல்லா முறையாலும் ஒப்புமை பெரிய பிராட்டியோடே என்று மாமுனிகள் உரையில் நம்மாழ்வாரை இலக்குமிக்கு ஒப்பாகச் சொன்னபடி. திருவாய்மொழியில் தலைவி பாசுரமாக பதினேழு பதிகங்களும், தாய்ப்பாசுரமாக ஏழு பதிகமும் உள்ளதால் தலைவி, புதல்வி என்று அழைக்கத்தகும்.

(இருக்குமொழி) : இருக்கு – ருக் வேதம். மொழி – எம்பெருமானுடைய மேன்மையைப் பரவலாக விளக்குகிற புருஷ சூக்தம். அதாவது எம்பெருமானுடைய ஸ்வரூபம், வடிவு, குணம், செல்வங்கள் ஆகியவற்றைப் பேசுமிடத்தில் ஸ்வரூபம், ரூபம், குணம், செல்வம் ஆகியவற்றில் பிரமிப்பார்க்கும் பிரமிக்க இடமில்லாதபடி பேசுகிற நாராயண அநுவாகம் முதலானவற்றைச் சொல்லுகிறது. *''இருக்கார்மொழியால்''* என்று ஆழ்வார் திருவிருத்தத்தில் (64) அருளியது காண்க. திருவிருத்தம் ருக்வேத சாரம் என்பர். இதில் பிறப்பு, இளமை, யௌவனம், கிழத்தனம், மரணம், நரகம் என்று ஏழு விதமான மிக்க துக்கத்தை உண்டுபண்ணுவதாய் இருக்கிற நிலைமைகளை மாறி மாறி அநுபவித்துக் கொண்டு அங்கிருந்து கரை ஏறச் சக்தி அற்றவர்களாய்த் திரிகிற உயிரினங்களைக் குறித்துச் சொல்லுவதாகும். அதாவது உடலே உயிராகும் என்ற மயக்கத்தை விட்டு குருகைக்குத் தலைவரான நம்மாழ்வார் அருளின திருவிருத்தத்தில் முதல் பாசுர அடியை கற்றுப் பயமற்றவராயிருந்து உடலைக் காட்டிலும் சிறப்பானதாய் இருக்கிற உயிரை இப்பிறவியிலிருந்து விலக்கி பரமபதத்தை அடைவிக்கப் பாருங்கோள் என்பதாகும். இக்கருத்து மாமுனிகள் மனத்தில் எப்போதும் நிலவுவதாகையாலே *''என் நெஞ்சில் தேக்கினான்''* என்கிறார். இதுபற்றியே *''ஸாமவேத சுருக்கமான ருக்கானது அதன் விவரணமாய், தனக்கு சுவையாயிருந்துள்ள கான ரூபமான ஸாமத்தாலே சுவையோடு கூடியதாய் ஹாவு ஹாவு என்று ஸ்தோபத்தாலே பரந்த ருக்வேத இடம் சொல்லார் தொடையலான திருவிருத்தம்''* என்பர் மாமுனிகள்.

(எந்தை எதிராசர்க்கு இறைவனார்) எந்தை – எம் தந்தை. *''எந்தை இராமாநுசன்''* என்று அமுதனார் நூற்றந்தாதியில் (69) அருளியதற்கு ஏற்ப அந்த நாராயணனுடைய திருவடிகளே உபாயமாகவும் உபேயமாகவும் காட்டிக் கொடுத்த பிதா என்பர் சீயர். அதனால் "எந்தை" எனப்பட்டார். "எந்தை எதிராசர்" என்று மாமுனிகள் உபதேசரத்ன மாலையில் (29) அருளியதற்கு ஏற்ப எதிராசர் – யதி குல துர்யர். நம்முடைய இருப்பு, வளர்ச்சி முதலானவற்றுக்கெல்லாம் காரணமாய் யதிகளுக்குத் தலைவரானவர் என்பர் சீயர். எந்தையான முறையாலே மற்றும் *''எந்தை எதிராசர்''* என்ற பாடலில் (73) எல்லா ஆத்மாக்களுக்கும் பேறு சொல்லும்படியான நம்பிக்கையையுடையவரான எம்பெருமானார் என்பர் சீயர். அப்படிப்பட்ட எதிராசருக்கு இறைவனார் – ஸ்வாமியானவர் நம்மாழ்வார் என்றபடி.

(கருக்குழியில் புகாவண்ணம்) கருக்குழியாவது கர்ப்பஸ்தானமான பள்ளம். அதாவது கரு என்று கருப்பமாய் அதனால் உண்டான பிறப்பு. அறிவில்லாத இளைமைப் பருவம், விஷயாநுபவமான யௌவனம், அது கழிந்த பிறகு வரும் கிழத்தன்மை, பின்னர் மரணம், இப்படி பிறவி வேதனைகளில் அடிப்பட்டு அதுவே யாத்ரையாய் புகா வண்ணம் தம்முடைய பிரபந்தமாகிய திருவிருத்தம் மூலமாகக் காத்தருளுபவர் நம்மாழ்வார் ஆவார். (காசினியில் ஆரியன்) காசினி – பூமி. ஆரியன் – ஆசாரியன். *''லக்ஷ்மீநாத ஸமாரம்பாம்''* என்ற பொதுத் தனியனில் "ஸமாரம்பாம்" என்ற சொல்லுக்கு "திருமா லால் அருளப்பட்ட சடகோபன்" என்னும்படியான ப்ரபந்த ஜநகூடஸ்தரான நம்மாழ்வாரையும் ஆசார்யராக குறிப்பிடுவர் பிள்ளைலோகம் சீயர். மேலும் ஆளவந்தார் அருளிய "மாதா பிதா..." என்ற தனியனில் "ஆத்யஸ்ய ந:" என்பதற்குச் சேர வைஷ்ணவ ஸந்தாநத்துக்கு (குலத்துக்கு) முதல் ஆசார்யர் நம்மாழ்வார் என்பர்.

வாழித்திருநாமம் வளரும்...

34



108 திவ்யதேச வைபவம்

# திருப்பார்த்தன் பள்ளி

உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.

**புராண வரலாறு :**

பார்த்தன், தாங்க முடியாத தண்ணீர் தாகத்தால் தவித்து, இங்கு வர, இந்த திவ்ய தேசத்தில் அகத்தியர், பார்த்தனிடம் தன்னுடைய தீர்த்த கமண்டலத்தைக் கொடுத்தார். அதில் தீர்த்தமில்லாது இருக்கவே, பார்த்தன் மிகவும் தாகத்தால் வருந்தினான். அப்போது அகத்தியர், உனக்கு எல்லாமாகக் கண்ணன் இருக்கும்போது, அவரை தியானித்து இருக்கலாமே என்றார்.

உடனே, பார்த்தன் கண்ணனை நினைத்தான். கண்ணன் அர்ஜுனன் முன்பு தோன்றி, ஒரு சிறிய கத்தியை கொடுத்து, பூமியைக் கீறச் சொன்னான். பார்த்தன் அப்படியே செய்ய, கங்கை பெருக்கெடுத்தது. பார்த்தனின் தாகமும் தீர்ந்தது. அதனால், இத்திவ்ய தேசம் பார்த்தன் பள்ளி ஆயிற்று. பகவான் இங்கு சிறு கத்தியுடன் காக்ஷி தருகிறான்.

இன்னொன்று...

அகத்தியர், சிவபிரானின் ஆணைப்படி கமண்டலத்தில் காவிரி நீருடன் தெற்கே வர, விநாயகர் கமண்டலத்தைக் கவிழ்க்க, காவிரி நிலத்தில் ஓடிப் பெருக, அகத்தியர், காவிரியின் பெருக்கத்தைத் தொடர்ந்து இந்தத் திவ்ய தேசத்துக்கு வந்தபோது, இங்கேயுள்ள இயற்கை வளத்தைக் கண்டு, இங்கேயே தங்கி விடுகிறார்.

கர்ப்ப க்ருஹத்தில், ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி சமேதராய், கோலவில்லி ராமனாகப் பகவான் இங்கு காக்ஷி தருகிறார். வருணனின் குறையை நீக்கியதாகவும் பதினோரு ருத்ரர்கள் வழிபட்ட ஸ்தலம் என்றும் சொல்வர்.

| | | |
|---|---|---|
| **பெருமாள்** | – | தாமரையாள் கேள்வன் மேற்கு நோக்கி நின்ற திருக்கோலம். |
| **உத்ஸவர்** | – | பார்த்தசாரதி.... கோலவில்லி ராமன். |
| **தாயார்** | – | தாமரை நாயகி. |
| **தீர்த்தம்** | – | சங்க சரஸ், கங்கா தீர்த்தம், கற்க புஷ்கரணி. |
| **விமானம்** | – | நாராயண விமானம். |
| **ப்ரத்யக்ஷம்** | – | வருணன், ஏகாதச ருத்ரர்கள், இந்திரன், அர்ஜுனன். |
| **மங்களாசாஸனம்** | – | திருமங்கை ஆழ்வார், |
| **ஆகமம்** | – | பாஞ்சராத்ரம். |
| **சிறப்பு** | – | பார்த்தனுக்கு அருளியதை நினைவுபடுத்தும் ஸ்தலம். |

**ரஹஸ்யத்ரயத்தில்**

| | | |
|---|---|---|
| **அஷ்டாக்ஷரம்** | – | திருமணங்கொல்லையிலும், |
| **த்வயம்** | – | திருவெள்ளக்குளத்திலும் |
| **சரம சுலோகம்** | – | திருப்பார்த்தன் பள்ளியிலும் விளக்கம் பெற்றதாகச் சொல்வர் |

அர்ஜுனனுக்குத் தனி சந்நிதி உண்டு. ஸ்ரீபார்த்த சாரதிக்கு, மீசையுடன் நான்கு கரங்கள்.... (சங்கு, சக்ரம் தாங்கி இரண்டு கரங்கள்)உள்ளன.

### த்யான சுலோகம்

*ஸ்ரீமத் பார்த்த புரே ஹரிஸ்து கமலா நாதச்ச கங்கா ஸரஸ்*
*தீர்த்தம் திவ்ய விமாந மத்ர ஸுபகம் தத்ச்ராவணம் நாமத।*
*தேவி தாமரஸாஹ்வயா வருணதிக் ஸம்வீக்ஷ மாணோர்ஜுந*
*ப்ரத்யக்ஷ: கருணாப்தி ரத்ர வருணா பீஷ்டப்ரதாதா நிசம்।।*

----

### பாசுரம்

*நாடி என்றன் உள்ளம் கொண்ட நாதன் என்றும் நான்மறைகள்*
*தேடி என்றும் காணமாட்டாச் செல்வன் என்றும் சிறைகொள் வண்டு*
*சேடுலவு பொழில் கொள்நாங்கைத் தேவதேவன் என்று என்று ஓதி*
*பாடகம் சேர் மெல் அடியாள் பார்த்தன் பள்ளி பாடுவாளே*

-------

*"ஒத்து அமர் ஏத்தும் ஒளி விசும்பும் பாற்கடலும்*
*இத்தலத்தில் காண்பரிய என் நெஞ்சே! - சித்து உணர்ந்த*
*தீர்த்தன் பள்ளிக்கு இருந்து செப்ப, வெளி நின்றானை*
*பார்த்தன் பள்ளிக்குள் பணி."*

(பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் பாசுரம்)

### நாமாக்கள்

291. *ஓம் பூதபவ்யபவந்நாதாய நம:*

(முக்காலத்தை உணர்ந்தவர்களுக்கும் நாதனே)

*ஓம் பூர்ணசேவத்யை நம:*

(குறைவிலா நிதியே)

292. *ஓம் பவநாய நம:*

(காற்றைப் போல, இயல்பாக எங்கும் செல்பவனே)

*ஓம் ஸுவர்ணருசிர ப்ரக்யாயை நம:*

(தங்கம் போல அழகிய காந்தியை உடையவளே)

293. *ஓம் பாவநாய நம:*

(எல்லாவற்றையும் பரிசுத்தமாக்குபவனே)

*ஓம் போகிந்யை நம:*

(ஆதிசேஷனின் ஸுகுமாரத் திருமேனியை ஆஸனமாக உடையவளே)

294. *ஓம் அநலாய நம:*

(பக்தர்களை நன்கு காத்து, அதுவும் போதாது என்று நினைப்பவனே)

*ஓம் போக தாயிந்யை நம:*

(கொள்ள மாளா இன்ப வெள்ளத்தைக் குறைவறக் கொடுக்கும் வள்ளலே)

295. *ஓம் காமக்நே நம:*

(தன்னிடம் விருப்பமுள்ளவர்களின் மற்ற விருப்பங்களை அழிப்பவனே)

*ஓம் வஸுப்ரதாயை நம:*

(அடியார்களுக்கு அளவற்ற செல்வத்தையும், அதைப் பெற்றதால் வரும் காந்தியையும் அளிப்பவளே)

296. *ஓம் காமக்ருதே நம:*

(விரும்பிய பலன்களை அளிப்பவனே)

*ஓம் உத்தம வத்வை நம:*

(சர்வ ஜீவராசிகளையும் நன்கு வியாபித்து, போஷித்து வரும் ஸ்வாமியான பகவானுக்கு ஏற்றபடி சர்வ வ்யாபிநியாய் போஷிக்கும் ஸ்வாமிநியான உத்தம நங்கையே)

297. *ஓம் காந்தாய நம:*

(மிகவும் அழகானவனே)

*ஓம் காயத்ர்யை நம:*

(காயத்ரி மந்திரத்தால் வர்ணிக்கப்படுபவளே)

298. *ஓம் காமாய நம:*

(தன் குணங்களால் எல்லோராலும் விரும்பப் படுபவனே)

*ஓம் கமலோத்பவாயை நம:*

(தாமரை மலரின் நறுமணத்தைக் காட்டிலும் மிக உயர்ந்த மணத்துடன் அவதரித்தவளே)

299. *ஓம் காமப்ரதாய நம:*

(விரும்பியவை அனைத்தையும் கொடுத்து, மேலும் கொடுப்பவனே)

*ஓம் வித்வத் ப்ரியாயை நம:*

(சாஸ்த்ரஞான பண்டிதர்களின் உகப்புக்குப் பாத்ரமானவளே)

300. *ஓம் ப்ரபவே நம:*

(எல்லார் மனத்தையும் கவரும் சக்தி உள்ளவனே)

*ஓம் பத்மசிஹ்நாயை நம:*

(தாமரை மலரைக் கையில் சின்னமாக ஏற்று மஹா லக்ஷ்மி என்று புகழப்படுகிறவளே)

*ஸ்ரீமதே கமலநாயிகா, ஸ்ரீ,பூ,நீளா ஸமேத ஸ்ரீபார்த்த ஸாரதி ரூப ஸ்ரீகமலாபதயே பர ப்ரஹ்மணே நம:*

**திவ்ய தேச வைபவம் வளரும்...**



பகவத் கீதை - இளைய சமுதாயம்

# புத்தி மங்கினால் அனைத்தும் மங்கும்

மானிடன் தனக்கு அளிக்கப்பட்ட புத்தியினால் அனைத்து மனித குலத்திற்கும் இலாபகரமான பணிகளைச் செய்து வரலாற்றில் நிரந்தரமான இடத்தைப் பெறுகின்றான். பெரும் புகழ் பெற்றவனாகவும் விளங்குகின்றான். இதற்கு மாறாக தன் புத்தியினால் பேரழிவிற்கான பணிகளைச் செய்தால், பாபம் புரிந்தவனாகவும், கயவனாகவும் தூற்றப்படுவான். அதாவது மானிடன் புகழோடு வாழ்வதற்கும், கயவன் என்று பிறரால் தூற்றுவதற்கும் காரணமாக அமைவது புத்தியே ஆகும். உண்மையைக் கூற வேண்டுமெனில் மனிதனை விலங்குகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது புத்தியே அன்றி வேறொன்றுமில்லை. நமக்குத் தேவையான அனைத்து விதமான விவரங்களையும் ஞானேந்திரியங்களின் வாயிலாகவே சேகரிக்கின்றோம். இதனையே தகவல் அறிதல் என்போம். எவற்றையெல்லாம் புத்தியின் வாயிலாக அறிந்து கொள்கிறோமோ அதுவே கல்வியாகும். எவற்றையெல்லாம் பயன்படுத்துகிறோமோ அதுவே தெளிவு ஆகும். இவற்றையெல்லாம் எங்கு எப்படி எவ்விதமாக பயன்படுத்த வேண்டும் என்பதை அறிதலே நம் அறிவியலாகும். இந்த அனைத்து செயல்களுக்கும் முதன்மையான இடமாகத் திகழ்வது நம்முடைய அறிவியல் ஞானம் ஆகும். அது தான் புத்தி. புத்தியை உபயோகித்து விண்வெளிக்கலன் மூலமாக துணை கிரகங்களுக்குச் செல்லும் விஞ்ஞானிகளும் உள்ளனர். அதே போன்று புத்தியை தவறான செயல்களுக்கு உபயோகித்து இந்தப் பிரபஞ்சத்தில் உள்ள மானிடருக்கு துன்பத்தை விளைவிக்கும் தீவிரவாதிகளும் உள்ளனர்.

மானிடரிடம் உள்ள உடல், மனது, புத்தி, ஆத்மா எனும் நான்கில் ஆத்மாவே மிக மேன்மையான இடத்தில் உள்ளது. ஆத்மாவிற்கு பிறகு புத்தியும், புத்திக்குப் பிறகு மனதும், மனதிற்குப் பிறகு உடலும் உள்ளது. மூன்றாவது இடத்தில் இருக்கும் புத்தி, தனக்கும் மேலான இடத்தில் உள்ள, அதாவது நான்காவது இடத்தில் உள்ள ஆத்மாவுடன் இணையும்போது உலக நலக்காரியங்களில் ஈடுபடுகிறது. அதுவே தன்னை விட அல்பமான இடத்தில் இருக்கக் கூடிய மனதுடன் இணையும்போது உலக அழிவிற்கான செயல்களிலும் தன் அழிவிற்கான செயல்களிலும் ஈடுபடும். பகவத்கீதையிலிருந்து நமக்கு இந்த செய்தி கிடைக்கின்றது. புத்தி நாசமானால் அனைத்தும் நாசமாக நடைபெற்றதாகவே தெரிந்துக் கொள்ளல் வேண்டும். அதாவது இந்த புத்தி நாசம் எங்கு ஆரம்பமாகின்றன என்பதனை கீதாசார்யன் மிக அழகாக கீதையில் கூறுகின்றார்.


*த்யாயதோ விஷயாந் பும்ஸ: ஸங்கஸ்தேஷூ*
*பஜாயதே |*
*ஸங்காத்ஸஞ்ஜாயதே காம: காமாத்க்ரோதோऽபி*
*ஜாயதே ||*
*க்ரோதாத்பவதி ஸம்மோஹ: ஸம்மோ*
*ஹாத்ஸ்ம்ருதி விப்ரம: |*
*ஸ்ம்ருதிப் ரம்சாத் புத்திநாசோ புத்திநாசாத்*
*ப்ரணச்யதி ||*

–பகவத் கீதை 2:62,63

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : திரு. வ.ஒ. சுரேஷ்.

“புலன் நுகர் பொருட்களைப் பற்றியே அதிகமாக சிந்தித்துக் கொண்டிருக்கின்ற மனிதனுக்கு, அவற்றின் மீது பற்று ஏற்படுகிறது. அந்தப் பற்றுதலிலிருந்து காமம் உண்டாகிறது. காமத்திலிருந்து கோபம் உண்டாகிறது. கோபத்திலிருந்து ஆசை உண்டாகிறது. ஆசையினால் நினைவு தடுமாற்றம் உண்டாகிறது. நினைவு தடுமாற்ற மானது புத்தியை வீழ்ச்சியடைய வைக்கின்றது. புத்தி வீழ்ச்சியடைவதனால் மனிதனும் தன் நிலையிலிருந்து வீழ்ச்சியடைகின்றான்.

புத்தி அழிவிற்கும், அதன் காரணமாக மனிதன் ஒழுக்கமற்றவனாக விளங்குவதற்கும் இதை விட தெளி வான விளக்கம் எங்கும் நமக்கு கிடைக்காது. ஒழுக்க மற்று சிறைச்சாலையில் இருப்பவரை கவனித்தால், நோய்வாய்ப்பட்டவரை கவனித்தால், சமுதாயத்தினால் அப்புறப்படுத்தப்பட்டவரை கவனித்தால் இவை யாவும் நமக்கு தெளிவாகப் புரியும். கீதையில் கூறப்பட்ட இந்த புத்தி சீரழிவதற்கான காரணங்கள் இவ்வுலகில் நம் கண் முன்னே காணப்பட்டுக் கொண்டே உள்ளன. காதல் மோகத்தால் ஒரு இளைஞன் ஒரு இளம்பெண்ணை கொலை செய்தல் அல்லது முகத்தில் அமிலம் வீசுதல் போன்றவை இதற்கு உதாரணமாகின்றன.




திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

**பக்தர்களுக்கு விண்ணப்பம்**

கல்யாண கட்டாவில் பக்தர்கள் தலை முடி காணிக்கை செலுத்தும்பொழுது முடி இறக்குபவர்கள் பணம் கேட்டால் அவர்களின் விவரங்களை டோல் ப்ரீ எண் : 1800-425-4141 க்கு தெரிவியுங்கள்.

– செயலாட்சித் தலைவர்


இளைஞன் ஒரு இளம் பெண்ணால் ஈர்க்கப்பட்டான் என்று வைத்துக் கொள்வோம். அவளைப் பார்த்ததும் அவனுக்கு ஆசை அதிகரிக்கின்றது. அங்கிருந்துதான் காமம் உண்டாகின்றது. ஆனால் அந்த இளம் பெண் அவனின் காதலை ஏற்கவில்லை எனில் அந்த இளைஞ னுக்கு கோபம் உண்டாகிறது. அந்த கோபத்திலிருந்து மோகம் உண்டாகிறது. மோகம் என்பது ஒரு இருளைப் போன்றது. அப்போது அவனுக்கு ஏதும் தெரியாது. அதனால் நினைவு தடுமாற்றம் ஏற்படுகிறது. அதாவது, அவனுக்கு தான் யார்? தன்னுடைய எதிர்காலம் என்ன? தன் குடும்ப மரியாதை என்ன? என்று அனைத்தையும் மறந்து விடுவான். அவையாவும் மறைந்தும் விடும். இதுவே நினைவு தடுமாற்றமாகும். இவ்விதமாக நினைவு தடுமாற்றம் புத்தியை நசித்து விடும்.

அதாவது பகுத்தறியும் ஞானமும் போய் விடுகின் றது. உடனே இதனால் ஏற்படக்கூடிய பின் விளைவுகளை ஆலோசிக்காமல் ஒரு மோசமான பாபத்திற்கு அவன் பலியாகின்றான். அந்த இளம் பெண்ணை கொலை செய்தோ அல்லது சிதைத்து விட்டோ சிறைச்சாலைக்குச் செல்கிறான். சமுதாயத்தினாலும் அப்புறப்படுத்தப் படுகிறான். இவ்விதமாக ஒரு இளம்பெண்ணின் ஈர்ப்பினால் உண்டான இது இறுதியில் சிறைச்சாலை வரை கொண்டு சேர்க்கிறது. இதனையே கீதாசார்யன் ‘‘புத்தி நாசாத்ப்ரணச்யதி’’ என்கிறார். ஆதலால் இளம் பெண்ணின் கவர்ச்சிக்கு ஆட்படாமல் இருந்தால் புத்தியானது பாதுகாப்பாகவே இருக்கும். அவர்களின் மீதான இணக்கம் என்பது கல்வியிலும், உயர்ந்த லட்சயங்கள் மீதும் மட்டுமே இருத்தல் வேண்டும். அவை ஆத்ம சக்தி நிரம்பியிருக்கும்போது மட்டுமே பெற முடியும். எப்பொழுது இளைஞன் ஆத்ம சக்தியால் நிரம்பி உயர்ந்த லட்சயங்களில் முன்னேறிச் செல்கின் றானோ அப்பொழுதே அவன் நிச்சயமாக வெற்றிச் சிகரங் களை அடைகின்றான்.

பகவத்கீதை தொடரும்...



# ஆடல் வல்லானும் ஆறு அபிடேகங்களும்

டாக்டர். காவிரி நாடன், சென்னை

**முகப்புரை :**

தில்லைச் சிற்றம்பலத்துள் நடனமிடும் ஆடல் வல்லானே ஆயக் கலைகள் அறுபத்தி நான்கிற்கும் தாயும் தந்தையுமாவார். ஆடல் வல்லான் தரிசிக்க முக்தி தரும் சிற்சபையில் ஐந்தொழில்களை அருள்கிறார். இடைவிடாத ஆனந்தக் கூத்தினால் இவ்வுலகில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற பஞ்சகிருத்தியங்கள் நிகழ்த்துகிறார்.

*"தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்*
*சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா*
*ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோதம் முக்தி*
*நான்ற மலர்ப்பதத்தே நாடு"*

என்ற சாத்திரப்பாட்டில் மணவாசகம் கடந்தார் தெளிவாக இறைவன் புரியும் ஐந்தொழில்களையும் விளக்குகிறார்.

**படைத்தல் :**

படைத்தல் என்பது உயிர்களுக்கு தனு, கரணம், புவனம், போகம் எனப்படும் உடம்பு கருவிகளும், உலகு நுகர்ப்பொருள்களைப் படைத்துக் கொடுத்து அது அதன் வழி நுகரச் செய்வதாகும். இப்படைத்தல் தொழிலை ஆடல் வல்லானின் அழகுக்கரத்தில் அணி செய்து ஒலிக்கும் உடுக்கை குறிக்கிறது. இடையீடின்றி ஒலித்தலால் நாத சக்திப்பிறக்கிறது.

**காத்தல் :**

இறைவன் தான் படைத்த உயிர்களை உரிய காலம் வரை நிலை பெறச் செய்து, அது, அதன் நுகர்ச்சியைச் செய்து காத்து வருவதே காத்தலாகும். இது நடராசபிரானின் அபய கரம் அருளுவதாக ஐதீகம்.

**அழித்தல் :**

படைக்கப்பட்ட உயிர்கள் பயன் கழிந்த பின் அழிந்துவிடும். அவ்வாறு அழித்தல் என்பது இல்லாமல் ஆக்குவது மட்டுமன்று நூலமானதை நுட்பமாக்குவதாம். ஒடுக்குவது பின்னர் வெளிப்படுத்துவதும் ஆகும். இதனை நடராச பெருமானின் தீ ஏந்திய கரம் செய்தருளும், அனைத்தையும் தீயானது கபலீகரம் செய்வதை உணரலாம்.

**மறைத்தல் :**

உயிர்கள் எடுத்த பிறவியில் செய்தது மறுபிறவிக்கு அறியச் செய்யாமல் செய்வதே மறைத்தலாகும். இவ்வாறு இறைவன் மறைத்தல் தொழிலைச் செய்வது உயிர்களின் மீது அவர் கொண்ட கருணையே ஆகும். முற்பிறவி பற்றியதை உயிர்கள் அறிந்தால் களிப்பிலோ, துக்கத்திலோ ஆழ்ந்து போகும். இவை போக்கவே மறைத்தலைப் பெருமான் கருணையோடு செய்கிறார். இதனை ஆடல் வல்லானின் ஊன்றிய திருவடி அருள்கிறது.

### அருளல் :

உயிர்கள் அது அதன் வினைகளுக்கேற்ப அடுத்த வினைகளை அடையச் செய்வதே அருளல் ஆகும். மலம் நீங்கப் பெறாத ஆன்மா மறுபிறவி எடுக்கும். மலம் நீங்கிய ஆன்மாவிற்கு அருளல் செய்து முக்தி என்ற மாறாப் பேரின்பத்தை நல்குவதாகும். இதனை ஆடல் வல்லானின் எடுத்த பொற்பாதம் (தூக்கிய பாதம்) செய்யும்.

### ஆடல் வல்லானும் ஐந்தெழுத்தும் :

ஐந்தொழிலாற்றும் ஆடல் வல்லான், பஞ்சாட்சரத்தைக் கொண்டவராக விளங்குகிறார். இதனை,

*"சோகும் துடி "சி" கரம் சிறக்க "வா" வீசுகரம்*
*ஆர்க்கும் "ய" கரம் அபயகரம் - பார்க்கில்*
*அங்கி "ந" கரம் அடிக்கீழ் முயலகனார்*
*தங்கும் "ம" கரமது தான்."*

என்ற பாடல் ஆடல் வல்லானின் அழகு மேனியில் ஐந்தெழுத்துரு அணியாக உள்ளதை விளம்புகிறது. ஆடல் வல்லானின் கரத்தில் உள்ள உடுக்கை "சி"கரத்தையும், வீசுகரம் "வ"கரத்தையும், அனல் ஏந்திய கரம் "ந"கரத்தையும், "ம"கரம் ஊன்றிய திருவடியையும் விளக்குகிறது. சிவயநம என்ற சூக்கும பஞ்சாட்சரத்தை விளக்குகிறது.

ஆடல் வல்லானின் அருள் கொஞ்சும் திருமேனியில் தூல பஞ்சாக்கரமான (ந,ம,சி,வ,ய) என்பது வெளிப்படுவதை உணரலாம். அவை திருவடியில் "ந"; வயிற்றில் "ம"; தோளில் "சி"; முகத்தில் "வ"; முயலகனை அழுத்தும் திருவடியில் "ய" என்ற அமைப்பில் தூலபஞ்சாக்கரம் வெளிப்படுகிறது.

### ஆடல் வல்லானின் ஆறுகால அபிடேகங்கள் :

சிவம் பெருக்கும் தில்லையில் உருவமாக சிற்றம்பல நடராச மூர்த்தியும், அருவமாக சிதம்பர இரகசியமும், அருவுருவமாக நித்தலும் ஆறு கால அபிடேகம் ஏற்கும் சிற்றம்பல உடையாரும்(படிகலிங்கம்) விளங்குகின்றன. அருள் தரும் ஆடல் வல்லான் ஞானக்குளியலாக வருடத்திற்கு ஆறு முறை அபிடேகங்களை ஏற்கிறார்.

### தேவநாள் :

மனிதர்கள் அறுபது நாழிகையை (24 மணி நேரம்) இரவு பகலாக ஒரு நாள் என்பர். விண்ணுலக தேவர்கள் 12 மாதங்களை (ஒரு ஆண்டு) ஒரு நாளாகக் கொள்வர். இதுவே தேவநாளாகும். தை மாதம் முதல் ஆனி மாதம் முடிய உள்ளது பகல் காலமாகும். இதனை உத்தராயணம் என்பர். ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரை உள்ள காலம் இரவுக் காலமாகும். இதனை தட்சணாயணம் என்பர். இவ்வாறு வரும் ஒரு தேவ நாளையே ஒரு நாளாகக் கொண்டு தேவர்களின் தலைவனான ஆடல் வல்லானுக்கு ஆண்டொன்றிற்கு ஆறு முறை அபிடேகங்கள் நடைபெறுகிறது. மூலாதாரம் முதல் ஆஞ்ஞை வரையில் உள்ள ஆறு ஆதாரங்களில் நடனமியற்றும் தில்லை நடராசருக்கு ஒவ்வொரு ஆதாரக் கமலத்திலும் தியானம் செய்து ஆறு அபிடேகங்கள் நிகழ்த்தப் பெறுகின்றன. அந்தந்த அபிடேகங்களை அதி தேவதைகள் அன்புடன் நிகழ்த்தி அருள் பெறுகின்றனர்.

ஆறு அபிடேகம் நிறைவுற்ற பின் புரட்டாசி சதுர்த்தசி அர்த்த யாமத்திற்குப் பின் பெருமான் விகார காலமாக ஆயிரம் இதழ் தாமரையில் வீற்றிருந்தருள்வார். ஆகையால் ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் இடையீட்டுக் காலமாகும்.

### முதல் கால அபிடேகம் :

ஒவ்வொரு ஆண்டும் மார்கழி திருவாதிரை நட்சத்திரம் நாளில் நிறைந்த மூலாதார பூசையாக ஆடல் வல்லானுக்கு ஞானக்குளியல் நடத்தப்படுகிறது. இதனை விநாயகரும் வல்லபையும் நடத்துவர். நடு இரவுக்குப் பின் தில்லையில் ஆயிரங்கால் மண்டபத்தில் நடக்கும். இவ்வபிடேகம் உலகம் போற்றும் திருவாதிரை ஆருத்ரா தரிசனமாகும்.

### இரண்டாம் கால அபிடேகம் :

ஒவ்வொரு ஆண்டும் மாசி மாதம் சுக்கில பட்ச (வளர்பிறை) சதுர்த்தி திதி அன்று இரவு ஏழு மணி தொடக்கத்தில் ஆடல்வல்லான் அருள் தரும் சிற்சபையிலிருந்து கனக சபைக்கு வந்து அபிடேகம் ஏற்பார். இப்பூசை, சுவாதிட்டான பூசையாகும். பிரம்மனும் சரஸ்வதியும் இவ்வபிடேகத்தை நிகழ்த்துவதாக ஐதீகம்.

### மூன்றாம் கால அபிடேகம் :

ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதம் திருவோண நட்சத்திரத்தன்று இரவு தொடக்கத்தில் ஆடல் வல்லானை கனக சபையில் எழுந்தருளச் செய்து நடத்தும் மகா அபிடேகம் மணிப்பூரக பூசையாகும். இதனைத் திருமாலும் இலக்குமியும் நிகழ்த்துவர்.

### நான்காம் கால அபிடேகம் :

ஆனி மாதம் உத்திர நட்சத்திரத்தன்று, தில்லை பிரம்மோட்சவ நாளில் தேரிலிருந்து இறங்கிய ஆடல்

வல்லான், ஆயிரங்கால் மண்டபத்தில் நடு இரவுக்குப் பின் ஏற்கும் மகா அபிடேகமாகும். இதனை ஆனித் திருமஞ்சனம் என்பர். சாயங்கால சந்தியாகால அநாகத பூசையாகும். இவ்வபிடேகத்தை உருத்திரனும் பார்வதி தேவியும் நிகழ்த்துவர்.

**ஐந்தாம் கால அபிடேகம் :**

ஆவணி மாதம் வளர்பிறை சதுர்த்தசி திதியில் ஆடல் வல்லானுக்கு கனக சபையில் இரவு 7 மணியள வில் நிகழ்த்தப்பெறும்அபிடேகமாகும். இது விசுத்தி பூசையாகும். இதனை மகேசுவரனும், மகேசுவரியும் நிகழ்த்துவர்.

**ஆறாம் கால அபிடேகம் :**

புரட்டாசி மாதம் வளர்பிறை சதுர்த்தசி திதியன்று ஆடல் வல்லானுக்கு கனக சபையில் அர்த்தயாம பூசையில் அபிடேகம் நடைபெறும். இது ஆக்ஞா பூசை என்பர். இதனை சதாசிவனும் மணோன்மணி தாயும் நிகழ்த்துவதாக ஐதீகம். இவ்வாறு ஆடல் வல்லானுக்கு வரையறுக்கப்பட்ட தேவநாளில் ஆறு காலங்களில் தில்லையில் அபிடேகம் நடைபெறும்.

**சிதம்பர சபைகள் :**

தேவர்கள் போற்றும் தில்லைச் சிதம்பரத்தில் ஐந்து சபைகள் திகழ்கின்றன. அவைகளாவன 1) சித் சபை, 2) கனகசபை, 3) தேவ சபை, 4) நிருத்த சபை, 5) இராச சபை ஆகும்.

**சித் சபை :** இதனைச் சிற்சபை எனவும் அழைப்பர். தில்லையில் அருள்மிகு ஆடல்வல்லானும், சிவகாமி யம்மையும் அருள் தரும் கருவறையாகும்.

**கனக சபை :** சிற்சபைக்கு அருகில் உள்ள அம்பலமே கனகசபையாகும். இங்கு நின்று அன்பர்கள் நடராசப் பெருமானை வணங்குவர். இங்குதான் சித்திரை, ஆவணி, புரட்டாசி, மாசி மாதங்களில் பெருமான் ஞானக் குளியல் ஏற்பார். மேலும் தினமும் படிக லிங்கத்திற்கும், இரத்தின நடராசருக்கும், ஆறுமுறை அபிடேகம் நடை பெறுமிடமாகும்.

**தேவ சபை :** இச்சபை பேரம்பலமாகும். சூக்கும உடலாகும். உற்சவ மூர்த்திகள் இருக்கும் இடமாகும்.

**நிருத்த சபை :** நடராச பெருமானின் கொடி மரத் திற்குத் தென்புறம் தேர்வடிவில் உள்ளதே நிருத்த சபையாகும். இங்கு ஊர்த்துவ தாண்டவ நடராசர் அருள் தருகிறார்.

**இராச சபை :** தூல உடல் என வழங்கும் ஆயிரங்கால் மண்டபமே இராச சபையாகும். இங்கு தான் மார்கழி, ஆனி மாதங்களில் அருள்மிகு ஆடல் வல்லான் ஞானக் குளியல் கண்டு தரிசனம் வழங்குகிறார்.

**சிற்சபைத் தத்துவம் :** சிற்சபை இதயவடிவமாக அமைக்கப்பெற்றுள்ளது. நாம் நாள்தோறும் 21600 முறை மூச்சுவிடுகிறோம். அது போல 21600 பொன்னோடுகளும் ஆணிகளும் வேயப்பட்டுள்ளன. உட்புறம் சந்தனப்பலகை அணி செய்கின்றன. 96 சிறுபல கணிகள், 96 தத்துவங்களாக கருதப்படுகின்றன. நான்கு தூண்களும் நான்கு வேதங்களாகும். 28 கம்பங்கள் 28 ஆகமங்களை உணர்த்துகின்றன. சிதம்பர இரகசியம் அருவுருவமாக புனுகு சாத்தப்பட்டு அதன் மேல் தங்க வில்வச்சரங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. விமானத் தின் மேல் 9 கலசங்கள் நவசக்திகளாகும். 7200 ஆணிகள் உள்ளன என்றும், இவை நம் உடலில் உள்ள 7200 நாடி நரம்புகளைக் குறிக்குமென ஆய்வாளர்கள் செப்புகின்ற னர்.

சிற்சபைக்குத் தரையிலிருந்துச் செல்ல, வலது பக்கம் உள்ள படிகள் குரு பஞ்சாட்சரப்படிகள் என்பர். இடப்பக்கம் உள்ள படிகள் சிவபஞ்சாட்சரப்படி சக்தி பஞ் சாட்ரபடி என்பர். கனக சபையும், சிற்சபையும் இணைந் திருக்கும். ஏன்எனில் கனக சபையான விஞ்ஞானமய கோசமும், சித் சபையாகிய ஆனந்த ஞானமயகோசமும் இணைந்திருத்தல் இயல்பு என்பதை ஒக்கும். இத னையே சாத்திர ஆசிரியர்கள், சித்சபை காரண உடல் என் றும், கனகசபை கஞ்சுக உடல் என்றும் கூறுவர். மேற் கூரையில் பொன்னோடுகள் ஐந்தெழுத்துப் பொறிக்கப் பெற்றுள்ளது என்பர். இதனைத் தில்லை உலா என்ற நூல் மெய்ப்பிக்கிறது. ஆயிரமாயிரம் தத்துவங்களை உள்ளடக்கிய ஞான பொக்கிசமே தில்லைக் கோயிலா கும்.

**முடிவுரை :**

அருள்மிகு ஆடல்வல்லான் தில்லைக் கோயிலில் ஆனந்த நடராசராக பொன்னம்பலத்தில் உள்ள சிற்றம் பலத்தில் நடனமிட்டு அருள் தருகிறார். இவரே உருவ முள்ள மூலமூர்த்தியாவார். தில்லையல்லாத பிற இடங் களில் அருள் தரும் ஆடல் வல்லான் திருவடிவங்கள் மகேஸ்வர வடிவங்களில் ஒன்றாகும். ஞானாகாய சிதம் பர சபாநாயகரல்லர். தத்துவாதீத ஐந்தொழில், ஐந்தெ ழுத்து வடிவான மூலவர் தில்லை ஆடல்வல்லானேயா னர்.

தொடர்



# ஆயுர்வேதம் திரிபலா

தெலுங்கு மூலம் : டாக்டர். சி. மதுசூதன சர்மா.
தமிழாக்கம் : திருமதி. வி. உஷா.

திரிபலா என்பது பாரம்பரிய ஆயுர்வேத மருந்து. மூன்று மூலிகைகள் சேர்ந்த கூட்டுப் பொருள் தான் திரிபலா. அவை என்னவென்றால் நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக்காய் என்பது ஆகும். இம்மூன்றின் கலவையே “திரிபலா” ஆகும். இம்மூன்றின் கலவை யானது அற்புதமான காயகல்பமாகி, தேவர்களின் அமிர்தத்தினைப் போன்று அற்புத சக்தியினைப் பெற்றுள்ளது.

### இரத்தத்தை சுத்திகரிக்க :

150 கிராம் திரிபலா பொடியில் 50 கிராம் பாவஞ் சாலப் பொடியைக் கலந்து வைத்துக் கொண்டு காலை, மாலை வேளைகளில் 2 அல்லது 3 கிராம் வீதம் தேனுடன் கலந்து, இப்பொடியை உட்கொள்ள வேண்டும். இப்பொடியை தயிருடன் கலந்து, சொரி, சிரங்கு, படர்தாமரை, சொரியாஸிஸ் போன்ற சரும வியாதிகள் உள்ள இடத்தில் தடவி வந்தால் விரைவில் குணமாகும்.

### நோய் எதிர்ப்பு சக்தி :

60 கிராம் திரிபலாப் பொடி, 60 கிராம் சீனா கற்கண்டு பொடி, 60 கிராம் தூய்மையான நெய், 120 கிராம் தேன் ஆகியவற்றை நன்கு கலந்து சீசாவில் வைத்துக் கொண்டு, காலை, மாலை வேளைக்கு ஒரு டீஸ்பூன் மருந்தை பால் அல்லது நீரில் கலந்து குடித்தால் நோய் எதிர்ப்பு சக்தியானது அதிகரித்து நோய் நொடியின்றி வாழலாம்.

### முகப்பருக்கள் நீங்க :

ஒரு பாகம் மஞ்சள் பொடி, 2 பாகம் திரிபலா பொடி ஆகியவற்றை எடுத்துக்கொண்டு தகுந்தளவு நீருடன் கலந்து முகப்பருக்களின் மீது பூசி ஒரு மணி நேரம் கழித்து வெதுவெதுப்பான நீரில் கழுவினால் பருக்கள் நீங்கும்.

### நகச்சுற்றிற்கு :

ஒரு பாகம் சமையலுக்கு உபயோகிக்கும் சோடா உப்பு மூன்று பகுதி திரிபலாப் பொடி ஆகியவற்றை தேவையான அளவு நீரில் கலந்து நகச்சுற்றின் மேல் வைத்தால் நகச்சுற்று குறையும்.

### மூலம், மலச்சிக்கல் குறைய :

150 கிராம் திரிபலா பொடியில் 50 கிராம் சுனாமுகிப் பொடியை கலந்து வைத்துக் கொண்டு இரவில் தூங்கும் முன் அரை ஸ்பூன் அல்லது ஒரு ஸ்பூன் அளவு எடுத்துக் கொண்டு தேனுடன் கலந்து உட்கொண்டால் நல்ல பலன் கிட்டும். மூலவியாதி உள்ளவர் இந்த மருந்தை உட்கொள் வதுடன் மட்டுமின்றி 400 மி.லி. நீரில் 50 அல்லது 100 கிராம் திரிபலா பொடியை போட்டு, 100 மி.லி. நீர் ஆகும் வரை நன்கு கொதிக்க வைத்து ஆறியபின் வடிகட்டி ஒரு டப்பா வில் வெதுவெதுப்பான நீரில் இதனை கலந்து 20 நிமிடம் மலத்துவாரம் அந்நீரில் மூழ்கும் படி உட்கார வேண்டும். இவ்வாறு மலம் கழித்தபின் செய்து வர வேண்டும்.

### உடல் எடை குறைய :

இரவு படுக்கும் போது 200 மி.லி. நீரில், 5 கிராம் திரிபலாப் பொடி மற்றும் சிறிது இஞ்சியை இடித்து காலை வரை ஊற வைத்து அந்நீர் 100 மி.லி. ஆகும் வரை கொதிக்க வைத்து ஆறிய பின் வடிகட்டி எலுமிச்சம் பழ ரசத்துடன்

கலந்து குடித்து வந்தால் உடலில் உள்ள கொழுப்பு குறைந்து உடல் பருமன் குறையும்.

**நரைமுடி கருப்பாக :**

ஒரு இரும்பு வாணலியில் ஒரு லிட்டர் எள்ளெண்ணெய் போட்டு, 125 கிராம் திரிபலா பொடியுடன், மாம்பழக் கொட்டையை நன்கு காய வைத்த பொடி, 125 கிராம் கலந்து சூடுபடுத்தி, ஒரு வாரம் காலை, மாலை கேச தைலமாக உபயோகித்தால் சிறுவயதில் ஏற்பட்ட நரைமுடி, முடி கொட்டுதல் ஆகிய பிரச்சனைகள் குறைந்து முடி நன்கு வளரும்.

**காயம், புண் மற்றும் கட்டிகள் குணமாக :**

திரிபலாவை நன்கு சுட்டு பிறகு பொடியாக்கி அந்தப் பொடியை சலித்து அதனுடன் தேன் அல்லது எள்ளெண்ணெய் கலந்து குழைத்து மருந்தாகப் பயன்படுத்தினால் நல்ல பலன் கிட்டும். அது மட்டுமின்றி அரிப்பு, எரிச்சல் ஆகியவையும் குறையும்.

**திரிபலா கஷாயம் :**

அரை லிட்டர் நீரில் 10 கிராம் திரிபலா பொடியைப் போட்டு கொதிக்க வைத்து ஆறிய பின் வடிகட்டிய நீரே திரிபலா கஷாயம் ஆகும். 1) இதனை தடவும் மருந்தாய் உபயோகித்தால் காயத்தினால் ஏற்படும் புண்கள் குறையும். 2) சிறிது நேரம் வாயில் வைத்து கொப்பளித்து உமிழ்ந்தால் வாய்ப்புண் குறையும். 3) இந்த கஷாயத்தை தூய்மையான துணி அல்லது பஞ்சில் நனைத்து கண் மீது வைத்தால் கண் பிரச்சனை தீரும். இக்கஷாயத்தை சூடு படுத்தி தலைக்கு தடவி, சிறிது நேரம் கழித்து சிகைக்காயால் தலைக்குளியல் செய்தால் முடி கருமையாகவும், மிருதுவாகவும், பார்ப்பதற்கு அழகாகவும் இருக்கும். அதுமட்டுமின்றி பொடுகுத் தொல்லையும் நீங்கும்.

**மூல வியாதிக்கு :**

ஒன்று அல்லது இரண்டு முறை இந்த பொடியை தேவையான அளவு விளக்கெண்ணெய் உடன் கலந்து குழைத்து மலத்துவாரத்தைச் சுற்றி தடவி வந்தால் வலி குறையும்.

**வியர்வை வெளியேற :**

30 கிராம் திரிபலா பொடி, 10 கிராம் சுக்குப்பொடி 10 கிராம் துங்க முஸ்தல பொடி, 10 கிராம் அதிமதுரப் பொடி ஆகியவற்றுடன் 10 கிராம் ஜடாமாம்சி பொடி கலந்து நாள்தோறும் ஒவ்வொரு வேளையிலும் 1 அல்லது 2 கிராம் பொடியை நீரில் கலந்து உட்கொண்டால் நம் உடலில் உள்ள கெட்ட நீர் வியர்வையாக வெளியேறும்.

**சர்க்கரை வியாதியைக் கட்டுப்படுத்த :**

நாள்தோறும் காலை, மாலை – வேளைக்கு 2 அல்லது 3 கிராம் பொடியை 50 கிராம் நீரில் கலந்து குடித்து வந்தால் சர்க்கரை வியாதி மட்டுமின்றி மூளை, நரம்பு, கண், சருமம், சிறுநீரகம் ஆகியவற்றிற்கு ஏற்படக் கூடிய பாதிப்புகள் வராமல் தடுக்கலாம்.

**பல் சம்பந்தப்பட்ட வியாதிகள் :**

நாள்தோறும் ஒரு முறை திரிபலா பொடியை பல் துலக்கப் பயன்படுத்தினால் பல் வலி, பல் சொத்தை, பல் ஈறிலிருந்து இரத்தம் கசிதல் ஆகிய பிரச்சனைகள் தீரும். மஹத்ரி பலாதிக்ருதம், திரிபலாசவ, திரிபலா – குக்குலு, சப்தாமிருத லோஹ முதலிய மருந்துத் தயாரிப்பிலும் இந்த திரிபலாவை உபயோகிக்கின்றனர். இப்பொடி ஆயுர்வேத மருந்துக் கடையில் விற்பனை செய்கின்றனர். இந்த திரிபலாவை பயன்படுத்தி நாமும் ஆரோக்கியமான வாழ்வைப் பெறுவோம்.

ஆயுர்வேதம் வளரும்...


திருமலை திருப்பதி தேவஸ்தானம்

பிரதி மாதம் முதல் வெள்ளிக்கிழமை மட்டுமே!
செயலாட்சித் தலைவருடன் பேசுங்கள்!

டயல் யுவர் ஈ.வோ.

பக்தர்களுக்கு அறிய வாய்ப்பு!

எந்த மாநிலத்திலிருந்தும், எம்மொழியிலும்
நீங்கள் நேராக
செயலாட்சித் தலைவருடன் பேசலாம்!
திருமலையான் ஆர்ஜித சேவைகள்,
வசதி வாய்ப்புகள் குறித்த
உங்களிடையே எழும் சந்தேகங்கள்,
கருத்துகள், ஆலோசனைகளை செயலாட்சி
தலைவருடன் பகிர்ந்து கொள்ளலாம்.

டோல் நெம்பர் : 0877-2263261

நேரம் : காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை.

இந்த வாய்ப்பினை அனைவரும் உபயோகித்துக் கொள்ளவும்.



# 2019
# மார்ச் மாத ராசி பலன்

திரு. பராசரம் பாலசுப்ரமணியம், திருச்சானூர்

| | | | |
|---|---|---|---|
| புதன் | யுரேனஸ் செவ்வாய் | | |
| சூரியன் நெப்ட்யூன் | மார்ச் – 2019<br>05 – புதன் – வ.ஆ.<br>06 – ராகு – மிதுனம்<br>06 – கேது – தனுசு<br>14 – சூரியன் – மீனம்<br>15 – புதன்(வ) – கும்பம்<br>21 – சுக்ரன் – கும்பம்<br>22 – செவ்வாய் – ரிஷபம் | | ராகு |
| சுக்ரன் கேது | | | |
| சந்திரன் சனி ப்ளூட்டோ | குரு | | |


மேஷம்

உங்கள் ராசி நாயகன் மாத இறுதி வாரம் வரையில் ராசியிலேயே சஞ்சரிப்பார். துணிச்சலான காரியங்களில் ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். தன–குடும்ப ஸ்தானத்தை குரு நோக்குவதால் செல்வ நிலை உயரும். புதிய சொத்துக்கள் சேரும். எதிர்ப்பாராத பொருட் சேர்க்கையும் நிகழும்.


ரிஷபம்

ராசி நாதன் சுக்ரனின் ஒன்பது மற்றும் பத்தாமிடத்தின் சஞ்சாரம் சிறப்பாக உள்ளது. உங்கள் மதிப்பும் அந்தஸ்தும் உயரும். உடல் ஆரோக்கியம் சீராகும். மனதில் உற்சாகம் பெருகும். தொழிலாளர்களின் கோரிக்கைகள் சில இப்போது நிறைவேறும். மகிழ்ச்சியான செய்திகள் வந்து சேரும்.


மிதுனம்

குருவின் பார்வை இரண்டாமிடத்தில் பதிவதால் நலம் உண்டாகும். சூரிய பலம் கூடும். புதனின் வக்ர சஞ்சாரத்தால் செலவுகள் அதிகரிக்கும். ஒன்பதாமிடத்திற்கு வரும் புதன் பொன்–பொருள் சேர்க்கையை அதிகரிப்பார். இம்மாதம் ராசியில் ராகுவும் ஏழில் கேதுவும் வந்து சேருகிறார்கள்.


கடகம்


ராசியினை குரு நோக்குகிறார். குடும்பத்தில் குதூகலம் கூடும். கொடுக்கல்–வாங்கலில் இதுவரை இருந்து வந்த தடைகள் அகலும். விலகிச் சென்ற உடன் பிறப்புகள் விரும்பி வந்து சேருவர். எதிரிகளின் வலிமை குறையும். நீதிமன்ற வழக்கில் நியாயம் கிடைக்கும்.


சிம்மம்


புனிதமான காரியங்களில் ஈடுபாடு கூடும். தெய்வப் பணிகளுக்காக செலவு செய்வீர்கள். போட்டிப் பந்தயங்களில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். இயந்திரப் பணிகள் ஆதாயம் தரும். கலைத்துறையினருக்கு சுபிட்சம் கூடும். மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்.


கன்னி

ராசிநாதன் ஏழில் குருவின் பார்வையைப் பெற்றுச் சஞ்சரிக்க இம்மாதம் தொடங்குகிறது. பணப்புழக்கம் அதிகரிக்கும். பாராட்டும், புகழும் கூடும். வாழ்க்கைத்தேவைகள் அனைத்தும் பூர்த்தி செய்ய வழி பிறக்கும். பிள்ளைகள் வழியில் பெருமையும் வந்து சேரும்.


துலாம்

ராசி நாதன் சுக்ரனின் சஞ்சாரம் மிகவும் சிறப்பாக உள்ளது. தொழிலைப் பொறுத்த வரையில் எதிர்ப் பார்த்ததைக் காட்டிலும் நன்றாக இருக்கும். நிலம், மனை, வீடு, வாகனம் வாங்கும் முயற்சி வெற்றி பெறும். தாய் மாமனின் உதவியும் கிடைக்கும். அக்கம்பக்கத்தினரை அனுசரித்து செல்வது அவசியம்.


விருச்சிகம்

காவல், பாதுகாப்பு அல்லது உடல் நலத்துறையில் வேலையில் சேர அழைப்பு வரக்கூடும். பணப் பெருக்கம் ஏற்படும். பத்திரிக்கை, ஊடகம் போன்ற துறைகளின் மூலம் ஆதாயம் அதிகரிக்கும். சனி இரண்டில் உள்ளதால் பண விவகாரங்களில் கவனம் தேவை. பயணம் பலன் தரும்.


தனுசு

ராசி நாதன் விரய வீட்டில் சஞ்சரிக்கிறார். செலவுகள் கூடும் நேரம். அதிகாரிகளின் கெடுபிடி அதிகரிக்கும். கணக்கு வழக்குகளில் கவனம் தேவை. வாழ்க்கைத் துணைவரால் செல்வம் சேரும். உடன் பிறப்புகளிடையே கருத்து முரண்பாடுகள் தோன்றும். எதிரிகளின் தொல்லைகள் குறையும்.


மகரம்

ராசிக்கும் இரண்டிற்கும் உரிய சனி விரய வீட்டில் சஞ்சரிப்பினும் சுக்ரன் இரண்டில் சஞ்சரிப்பது செல்வ வளத்தை அள்ளித் தரும் பலமான யோகமாகும். புதனின் சஞ்சாரம் திடீர் மாற்றங்களைத் தரும். ஆறாம் வீட்டில் ராகு சஞ்சரிக்கப் போகிறார். பொருளாதார தேக்க நிலை மாறும்.


கும்பம்

இசை, நடனம், நாடகம் போன்ற கலைகளில் ஈடுபாடு அதிகரிக்கும். எதிர்ப்புகளைச் சமாளிக்கும் ஆற்றல் பெருகும். உத்தியோகஸ்தர்களுக்கு செழிப்பான சூழ்நிலை நிலவி வரும். ஆடை, அணிமணிகளின் சேர்க்கையோ, அவற்றால் ஆதாயமோ கிடைக்கும். உடன் பிறப்புகள் உதவி புரிவர்.


மீனம்

பணவரவு பெருகும். குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடக்கும். பத்திரிக்கை, தகவல் தொடர்பு துறைகளில் ஆதாயம் பெறலாம். சிலருக்கு மழலை பாக்கியம் உண்டாகும். பத்தில் உலவிடும் கேது தொழிலில் புதிய பங்குதாரர்களைக் கொண்டு வந்து சேர்ப்பார். கணவன்–மனைவியிடையே ஒற்றுமை நிலவும்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________

அலைபேசி எண் [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட /ஆயுள் சந்தா : ☐ ரூ. 60/- ☐ ரூ. 500/-

4. சந்தா புதுப்பித்தல் :
(அ) சந்தா எண். :
(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :
பணவிடை
(எம்.ஒ.கூபன் (எண்) : தேதி:
வங்கி கேட்பு வரைவோலை
(டி.டி. எண்.) : தேதி:

இடம் :
நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

### திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

## தி.தி.தே. கால்சென்டர்

### உங்களுக்காக

### 24 மணி நேரமும்

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.60/- ஆயுள்சந்தா ரூ.500/-டி.டி.ஐ பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம். திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூபனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விபரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.
- சமஸ்க்ருதம் மொழி ஸப்தகிரி பத்திரிக்கைக்கு ஆயுள் சந்தா இல்லை. வருடச்சந்தா மட்டுமே உண்டு.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி - 517507.

*Edited and Published on behalf of T.T.Devasthanams by* ***Dr. K. Radha Ramana****, M.A., M.Phil., Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by* ***Sri. R.V. Vijayakumar****, B.A., B.Ed., Dy. E.O. (Publications & Press), T.T.D. Press, Tirupati - 517 507.*

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி சமய மாத இதழ்

[தெலுங்கு, தமிழ், கன்னடம், இந்தி, ஆங்கிலம், சமஸ்கிருத மொழிகளில்]

இல்லந்தோறும் ஸப்தகிரி பத்திரிக்கை! இதுவே திருமலையப்பன் அக்ஷர தீபிகை!

கலியுக கண்கண்ட தெய்வமான திருவேங்கடமுடையானின்
திவ்ய வைபவம் பிரதி மாதம்... ஸப்தகிரி
இதழில் பாருங்கள்! படியுங்கள்!!





பகவானை தரிசிப்பதற்கும் தேவாதி தேவனை
சென்றடைவதற்கும் எத்தனையோ
மார்க்கங்கள் வழிமுறைகள்.


அலர் மேல் மங்கை மணாளனை,
அடியார்களைக்காக்கும்
கார்மேக வண்ணனை சிலர் பூவினால்
அர்ச்சித்தால், சிலர் அக்ஷரபூவினால் ஆராதிப்பர்.

திருவேங்கடமுடையானின் அக்ஷரபிரசாதமான
“ஸப்தகிரி” படிப்பதும், படிக்க வைப்பதும் கூட
அந்த ஸ்வாமிக்கு பண்ணும் உத்தம சேவையே.

பிரதி மாதம்... “ஸப்தகிரி” படியுங்கள்
உங்கள் அன்பானவர்களை படிக்க வையுங்கள்.

பிரதி மாதம் திருமலையப்பனை தரிசியுங்கள்...
திருமலை சிறப்பினைத் தெரிந்து கொள்ளுங்கள்

ஸப்தகிரி வளர்ச்சியைப் பேணுங்கள்.
ஸப்தகிரி மாத இதழுக்கு சந்தா செலுத்துங்கள்!
செலுத்த வையுங்கள்!!





## சந்தா விவரங்கள்

| | |
|---|---|
| தனிப்பிரதி | : ரூ. 5-00 |
| வருடச் சந்தா | : ரூ. 60-00 |
| ஆயுள் சந்தா | : ரூ.500-00 |
| அயல்நாட்டு வருடச் சந்தா | : ரூ.850-00 |

(சமஸ்கிருத மொழி இதழுக்கு ஆயுள் சந்தா கிடையாது)

அலுவலக பணிநாட்களில்
“ஸப்தகிரி” மாத இதழ் குறித்து
மேலும் விவரங்களுக்கு
தொடர்பு கொள்ளவும்...
அலுவலகம் : 0877-2264543
டி.டி.பி. பிரிவு : 0877-2264359
ஆசிரியர் : 0877-2264360

எங்கள் முகவரி :
பிரதான ஆசிரியர்
ஸப்தகிரி மாத இதழ் அலுவலகம்,
தி.தி.தே. அச்சக வளாகம்,
கபில தீர்த்தம் சாலை, திருப்பதி - 517507

ஆலோசனைகள்/ அறிவுரைகள்/புகார்களுக்கு தொடர்பு கொள்ளவும்

**sapthagiri_helpdesk@tirumala.org**

SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY
Published by Tirumala Tirupati Devasthanams 25-02-2019
Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742, Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020

